வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2019

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

சமர்ப்பணம்

இவ் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2019 ஆனது பொது நிதிகள் சுற்றுநிறுப இலக்கம் 402் இனால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டதாகும்

இவ் அறிக்கையானது அமைச்சின் பௌதீக மற்றும் நிதிச்செயலாற்றுகையை காட்டுகின்றது

உள்ளடக்கம்

அத்தியாயம் 1 அமைச்சின் விபரம்

1.1 அறிமுகம் 01

1.2 துாரநோக்குபணிக்கூற்றுகுறிக்கோள்கள் 02 - 03

1.3 பிரதானசெயற்பாடுகள் 04

1.4நிறுவனவிளக்கப்படம 05

1.5 பெருந்தெருக்கள் துறைகண்ணோட்டம் 06

1.5.1 அமைச்சின் செயற்பாட்டுபிரிவுகள் 06

1.6 ஏனைய சட்டரீதியானநிறுவனங்கள் 13

1.7 பெருந்தெருக்கள் துறையில் முதலீடுகள் 14

1.7.1 வெளிநாட்டுநிதயீட்டகருத்திட்டங்களின் விபரம் 16

அத்தியாயம் 2 –முன்னேற்றம் மற்றும் எதிர்காலகண்ணோட்டம்

பாகம் 1 –வெளிநாட்டுநிதயீட்டகருத்திட்டங்களின் முன்னேற்றம்

2.1 புதியமுயற்சிகள் 19

2.1.1 கண்டிமற்றும் அதனைச் சூழவுள்ளபிரதேசய்களில் மத்திய அதிவேகப்பாதைகளுடனான இணைப்புபாதைகளைமேம்படுத்தல் 19

2.1.2 கொகுவளைமற்றும் கட்டம்பேஆகிய 02 மேம்பாலங்களைநிர்மாணித்தல் 19

2.1.3 கோகிலாய் பாலம் நிர்மாணித்தல் 20

2.2 அதிவேகப்பாதைஅபிவிருத்தி 23

2.2.1 அதிவேகப்பாதைகளின் செயற்பாடுபராமரிப்புமற்றும் முகாமைத்துவம் 23

2.2.2 ஏனைய சுற்றுவட்டஅதிவேகப் பாதைகளின் அபிவிருத்தி 26

2.2.3மத்தியஅதிவேகப்பாதை 27

2.2.4 தெற்குஅதிவேகப் பாதையின் விரிவாக்கம் 31

2.2.5 புதியகளனிபாலத்திலிருந்துஅத்துரகிரியவரையிலானமேல் உயர்த்தப்பட்டவான்வெளிநெடுஞ்சாலை 33

2.2.6 துறைமுகநுழைவுமேல் உயர்த்தப்பட்டவான்வெளிநெடுஞ்சாலை 35

2.2.7 ருவன்புறஅதிவேகப் பாதை 36

அதிவேகப் பாதைஅபிவிருத்திசெயலாற்றுகையின் சாராம்சம் 38

2.3 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி 41

2.3.1 தேசியநெடுஞ்சாலைகள் அபிவிருத்தி 41

2.3.2 வீதிகளையும் பாலங்களையும் பராமரித்தல் 42

2.3.3 வலயமைப்புதிட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு 43

2.3.4 வாகனபோக்குவரத்துமுகாமை 45

2.3.5 பேராதெனிய–செங்கலடி–பதுளைவீதிபுனரமைப்பு (ஏ 5) திட்டம் 46

2.3.6 அபிவிருத்திக்கானசவூதிநிதியிலானவீதிவலயமைப்புஅபிவிருத்தி 48

2.3.7 வடக்குவீதித் தொடர்புகருத்திட்டம் (மேலதிகநிதியீட்டம்) 49

2.3.8 அதிவேகப்பாதைதொடர்புகளைமேம்படுத்தல் திட்டம் 50

2.3.9 வீதிவலயமைப்புஅபிவிருத்திகருத்திட்டம். 51

2.3.10 கொழும்புமாவட்டவீதிஅபிவிருத்திகருத்திட்டம். 52

2.3.11 முன்னுரிமைவீதிக்கருத்திட்டம் IIகட்டம் 1 54

2.3.12 தெற்குவீதித் தொடர்புகருத்திட்டம் 55

2.3.13 ஒருங்கிணைந்தவீதிமுதலீட்டுநிகழ்ச்சித்திட்டம் (ஐ ரோட் - கட்டம் 1) 56

2.3.14 இரண்டாவதுஒருங்கிணைந்தவீதிஅபிவிருத்திமுதலீட்டுத் திட்டம˙(ஐ ரோட் 2) 58

2.3.15 அரசாங்கஉத்தரவாதத்தின் கீழானஉள்ளூர் வங்கிக் கடன்கள் மூலமான வீதிபுணரமைப்புகருத்திட்டங்கள் 60

2.3.16 போக்குவரத்துதொடர்புமற்றும் சொத்துமுகாமைத்துவகருத்திட்டம். 61

2.3.17 முன்னுரிமைவீதிகளின் மேம்படுத்தல் மற்றும் புணர்நிர்மாணதிட்டம் - 3 (கட்டம் II) 62

2.3.18 பேஸ்லைன் வீதிநீடித்தல் திட்டம் கட்டம் III 63

2.3.19 மேல்மாகாணதேசியநெடுஞ்சாலைகள் கருத்திட்டம். 64

2.3.20 மத்தியமற்றும் ஊவாமாகாணங்களில் உள்ளவீதிகளின் மற்றும் பாலங்களைஅகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் திட்டம். 65

2.3.21 போக்குவரத்துகருத்திட்டங்களைதயார்படுத்துவதற்கான வசதியளித்தலுக்கானதிட்டம் 66

2.3.22 கடற்கரையோரவீதிபானந்துறைவரைவிஸ்தரித்தல். 67

நெடுஞ்சாலைகள் அபிவிருத்திதிட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் 2019ஆம் ஆண்டுக்கான இலக்குகளுக்குஎதிரானமுன்னேற்றஅடைவுகளின் சாராம்சம 69

2.4 வீதிகளைவிரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல 73

2.4.1 வீதிகளைஅகலமாக்கிஅபிவிருத்திசெய்தல் 73

2.5 பாலங்கள் மற்றும் வான்வழிப் பாலங்கள 77

2.5.1 தேசியநெடுஞ்சாலைகளில் உள்ளசேதமடைந்தமற்றும் பலவீனமானபாலங்களைபுனரமைத்தல் 77

2.5.2 பாழையபாலக் கூறுகளைப் பயன்படுத்திகிராமியபாலங்களைநிர்மாணித்தல் 78

2.5.3 பிராந்தியபாலங்கள் கருத்திட்டம 79

2.5.4 தேசியநெடுஞ்சாலைகளில் 25 பாலங்களைபுணர் நிர்மாணம் செய்தல் 80

2.5.5 45 பாலங்களைப் புனரமைத்தல் 81

2.5.6 தேசியநெடுஞ்சாலைவலயமைப்பில் உள்ளபிரதானபாலங்களைமீள் நிர்மாணித்தல 81

2.5.7 இரண்டாவதுபுதியகளனிப் பாலம் 82

2.5.8 பாலங்கள் பராமரிப்புமுறைமைமற்றும் பாலங்கள் மதிப்பீட்டுஅலகின் உருவாக்கம். 84

2.5.9 பேலியகொடபுத்தளம் வீதியில் கொச்சிக்கடைபாலம் நிர்மாணித்தல் 84

2.5.10 இராஜகிரிய,பொல்கஹவலமற்றும் கனேமுல்லஆகிய இடங்களில் வான் வழிப் பாலங்களைஅமைத்தல் 85

பாலங்கள் மற்றும் வான்வழிப் பாதைகளின் நிர்மாணப் பணிகளின் பௌதீக இலக்குகள் மற்றும் பௌதீகமுன்னேற்றமும 86

2.6 இயற்கைஅணர்த்தங்களால் பாதிக்கப்பட்டவீதிகளைபுனரமைத்தல். 89

2.6.1 தேசியவீதிகளில் மண்சரிவுபாதுகாப்புகருத்திட்டம். 89

2.7 கிராமியவீதிஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம 91

2.7.1 கிராமியவீதிகள் மீள் விழிப்புணர்வுநிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீகமுன்னேற்றம 91

2.7.2 கிராமியஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை 92

2.7.3 ரன் மாவத்தகிராமியவீதிகள் நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புநிகழ்ச்சித்திட்டம். (2019 –வரவுசெலவுத்திட்டமுன்மொழிவு) 92

2.8 நிதிச் செயலாற்றுகைமீளாய்வு 95

2.8.1 செயற்பாட்டுநடவடிக்கைகள 96

2.8.2 அபிவிருத்திநடவடிக்கைகள் 97

2.8.3 உள்ளூர் வங்கிக் கடன்கள் 109

பாகம் 11 – எதிர்காலத் தோற்றம்

2.9 முன்னோக்கியபாதை 111

அத்தியாயம் 3 –முழுமையானநிதிச் செயலாற்றுகை

3.1 நிதிக் கூற்று 113

3.2 நிதிப் பாய்ச்சல் கூற்று 115

3.3 நிதிக் கூற்றுக்கானகுறிப்புகள் 117

3.4 வருமானதிரட்டலின் செயலாற்றுகை 119

3.5 நிதிஒதுக்கங்களின் பயன்பாட்டுச் செயலரற்றுகை 127

3.6 நிதியல்லாசொத்துக்களின் செயலாற்றுகைஅறிக்கை 128

அத்தியாயம் 4 –செயலாற்றுகைகுறிகாட்டிகள்

அறிமுகம் 129

4.1 அமைச்சின் செயல்திறன் குறிக்காட்டிகளின் முன்னேற்றம் 129

அத்தியாயம் 5 நிலைபேறுஅபிவிருத்திகுறிக்கோல்களின் அடைவுகளின் செயலாற்றுகை

5.1 நிலைபேறுஅபிவிருத்திகுறிக்கோல்களின் அடைவுகளின் செயலாற்றுகை 131

5.2 வீதத் துறையில் நிலைபேறானஅபிவிருத்திநோக்கங்களின் அடைவ மற்றும் சவால்கள 132

அத்தியாயம் 6 மனிதவளவிபரம்

6.1 பதவியாளணிமுகாமை 135

6.2அமைச்சின் செயலாற்றுகையில் ஊழியர்களின் பங்களிப்பு 135

6.3மனிதவளஅபிவிருத்தி 136

அத்தியாயம் 7 இணக்கப்பாட்டுஅறிக்கை 139

புகைப்படதொகுப்பு I - VI

பின் இணைப்புக்கள்

பின் இணைப்பு 01 - 2019 இல் அளிக்கப்பட்டகொள்வனவுஒப்பந்தங்கள	VII
பின் இணைப்பு 02 - கோகிலாய் பாலத்தின் அமைவிடம	X
பின் இணைப்பு 03 - இலங்கைஅதிவேகநெடுஞ்காலைவலயமைப்பு	XI
பின் இணைப்பு 04 - அதிவேகநெடுஞசாலைகளின் வாகணங்களின் எண்ணிக்கைமற்றும் கட்டணவருமானம்	XII
பின் இணைப்பு 05 -வெளிவட்டப் பாதைகட்டம் IIIஅமைவிடம	XIV
பின் இணைப்பு 06 - மத்தியஅதிவேகநெடுஞ்சாலையின் உருவரைபடம	XV
பின் இணைப்பு 07 - தெற்குஅதிவேகப்காதையின் வரைபடம	XIX
பின் இணைப்பு 08 - ருவன்புரஅதிவேகநெடுஞ்சாலையின் வரைபடம	XX
பின் இணைப்பு 09 - பூரணப்படுத்தப்பட்டமற்றும் நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நெடுஞ்சாலைகள	XXI
பின் இணைப்பு 10 - பதுள்ளைசெங்கலடிநெடுஞ்சாலையின் அமைவிடம	XXII
பின் இணைப்பு 11 -பழையபாலங்களின் பாகங்களைக் கொண்டுகிராமியபாலங்கள் நிர்மாணித்தல். 2019 இல் நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பாலங்கள்	XXIII

அட்டலணைகளின உள்ளடக்கம்

அட்டலணை 1.7.1	பெருந்தெருக்கள் துறைமுதலீடுகள் 2007 - 2019	14
அட்டவணை-2.1.2.1	முன்மொழியப்பட்டுள்ளவான் வழிப்பாலங்கள்	20
அட்டவணை 2.2.1.1	அதிவேகப் பாதைகளில் நாளாந்தசராசரிபோக்குவர்த்துசெய்யும் வாகணங்களின் எண்ணிக்கை	23
அட்டவணை 2.2.1.2	மாதாந்தவாகணப் போக்குவர்த்துகளின் செயலாற்றுகை - 2019	24
அட்டவணை 2.2.1.3	கொழும்புகட்டுநாயக்கவீதியின் கட்டணவருமானத்துடன் தெற்குமற்றும் வெளிவட்டஅதிவேகப் பாதைகளின் வருமானஒப்பீடு	25
அட்டவணை 2.2.1.4	அதிவேகப் பாதைகளின் செயற்பாட்டின் மூலம் 2019 ஆண்டில்கிடைக்கப் பெற்றமாதாந்தவருமானம்.	25
ஆட்டவனை 2.2.2.1	நிர்மாணவேலைகளின் பௌதீகமன்னேற்றம்	26
ஆட்டவணை 2.2.3.1	முன்னோடிவீதிநிர்மாணிப்பின் முன்னேற்றம்	29
அட்டவணை 2.2.5.1	இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டபிரதானநடவடிக்கைகளின் பௌதீகமுன்னேற்றம் 31/12/2019 உள்ளவாறு	35
ஆட்டவணை 2.3.1.1	இலங்கையில் தேசியநெடுஞ்சாலைகளின் வலயமைப்பு	41
ஆட்டவணை 2.3.1.2	ஏ தரமற்றும் பீதரதேசியசெடுஞ்சாலைகளின் மாகாணமட்டத்திலானபரம்பல் - 2019	41
ஆட்டவணை 2.3.1.3	நெடுஞ்சாலைகளின் மேற்பரப்பின் வகையின் பரம்பல்	41
அட்டவணை 2.3.1.4	2018 இல் ‘பீ’தரவீதிவலயமைப்பிற்குஉள்வாங்கப்பட்டபுதியவீதிகள	42
அட்டவணை 2.3.2.1	2019 இல் மாகாணமட்டத்தில் வீதிப் பராமரிப்பின் பௌதீகமுன்னேற்றம்	43
அட்டவணை 2.3.3.1	வலயமைப்புதிட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்புதிட்டத்தின் கீழானபிரதானநடிவடிக்கைகள்	44
அட்டவணை 2.3.5.1	பேராதனை–பதுளை–செங்கலடிகருத்திட்டத்தின் கீழ் வீதிப் புனர்நிர்மாணகொந்தராத்துப் பொதிகள	46
அட்டவணை 2.3.6.1	வீதிவலயமைப்புஅபிவிருத்திகருத்திட்டத்தின் புனரமைப்புச் செய்யப்பட்டவீதிகள	48
அட்டவணை 2.3.7.1	வடக்குவீதித்தொடர்புகருத்திட்டத்திற்கானமேலதிகநிதியின் கீழ் புனரமைப்புச்செய்யப்பட்டமற்றும் புனரமைப்புச்செய்யப்படுகின்றவீதிகள்	50

ஆட்டவணை 2.3.9.1	வீதிவலைப்பின்னல் அபிவிருத்திகருத்திட்டத்தின் கீழ் வீதிகள் மற்றும் பாலங்கள் புனரமைப்பு	52
ஆட்டவணை 2.3.10.1	கொழும்புமாவட்டவீதிஅபிவிருத்திதிட்டத்தின் கீழ் புனரமைப்பச்செய்வதற்குதெரிவுசெய்யப்பட்டுள்ளவீதிகள	53
அட்டவணை 2.3.11.1	முன்னுரிமைவீதிப் புனரமைப்புதிட்டம் IIIகட்டம் Iஅசல் ஒப்பந்தபொதிகளின் சேமிப்புக்களிலிருநதுபுனரமைக்கப்பட்டவீதிகள	54
அட்டவணை 2.3.11.2	2019 இல் கொந்தராத்துபொதிகளின் சேமிப்பிலிருந்துஆரம்பிக்கப்பட்டவீதிப் புனரமைப்புசெய்யப்பட்டுக்கொண்டிருக்கும் வீதிகள்	55
அட்டவணை 2.3.12.1	தெற்குவீதித் தொடர்புகருத்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்குதெரிவுசெய்யப்பட்டவீதிகள	56
அட்டவணை 2.3.13.1	ஒருங்கிணைந்தவீதிகள் அபிவிருத்திமுதலீட்டுத்திட்டத்தின் கீழ் புனரமைப்புசெய்வதற்குதெரிவுசெய்யப்பட்டுள்ளகிராமியவீதிப் பொதிகள்– 2019	57
அட்டவணை 2.3.13.2	மாகாணஅடிப்படையில் வீதிப் பொதிகளின் பௌதிகமுன்னேற்றம்	57
அட்டவணை 2.3.13.3	ஒருங்கிணைந்தவீதிஅபீருத்திதிட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்குமுன்மொழியப்பட்டுள்ளதேசியவீதிகள	58
அட்டவணை .2.3.14.1	ஐ ரோட் 2 இன் கீழ் புனரமைப்புச் செய்வதற்குமுன்மொழியப்பட்டுள்ளவீதிகள்	59
அட்டவணை 2.3.15.1	தற்போதுஅமுல்படுத்தப்படும் வீதிப்பகுதிகளின் முன்னேற்றம்	60
அட்டவணை 2.3.17.1	2018 இல் ஆரம்பிக்கப்பட்டவீதிஅபிவிருத்திபொதிகள்	62
அட்டவணை 2.3.17.2	2019 இல் ஆரம்பிக்கப்பட்டவீதிஅபிவிருத்திபொதிகள	63
அட்டவணை 2.3.19.1	இக்கருத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படுகின்றவீதிகள்	64
அட்டவணை 2.3.20.1	இத்திட்டத்தின் கீழ் மத்தியமற்றும் ஊவாமாகாணங்களில் மேம்படுத்தப்படவுள்ளவீதிகள் மற்றும் பாலங்கள்	65
அட்டவணை2.3.21.1	போக்குவர்த்துகருத்திட்டங்கள் தயாரிப்பதற்குவசதிப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளநடவடிக்கைகளின் முன்னேற்றம் - 31.12.2019	66
அட்டவணை 2.4.1.1	வீதிகள் மற்றும்விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் திட்டத்தின் 2019ஆம் ஆண்டின் பௌதீகமற்றும் நிதிமுன்னேற்றம்.	74
அட்டவணை 2.4.1.2	மாகாணஅளவில் நிதிச்செயலாற்றுகை 2018 மற்றும் 2019 இடையில் ஒருஒப்பீடு	76
அட்டவணை 2.5.1.1	2019 இல் ஆரம்பிக்கப்பட்டகருத்திட்டங்களின் பௌதீகமுன்னேற்றம	78
அட்டவணை 2.5.3.1	2019 இல் அமுலிலுள்ளகருத்திட்டங்களின் பௌதீகமுன்னேற்றம்	79
அட்டவணை2.5.4.1	கட்டம் 1 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்டபாலங்களின் பௌதீகமுன்னேற்றம்	80
அட்டவணை2.5.10.1	3 வான்வழிப் பாலங்களினதும் விபரம்	85

அட்டவணை 2.7.1.1	2019 மற்றும் 2018 நிா'மரிக்கப்பட்டகட்டமைப்புகளின் ஒருஒப்பீடு	91
ஆட்டவணை 2.8.1.1	செயற்பாட்டுநடவடிக்கைகளின் நிதிச் செயலாற்றுகை	97
அட்டவணை 2.8.2.1.	அதிவேகப்பாதைஅபிவிருத்தியின் நிகழ்ச்சித்திட்டத்தின் முழுமொத்தநிதிச் செயலரற்றுகை	98
அட்டவணை 2.8.2.2.	அதிவேகப்பாதைஅபிவிருத்தியின் நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவானநிதிச் செயலரற்றுகை	99
அட்டவணை 2.8.2.3	நெடுஞ்சாலைகள் அபிவிருத்தியின் ஒட்டுமொத்தநிதிச் செயலாற்றுகை	100
அட்டவணை 2.8.2.4-	நெடுஞ்சாலைகள் அபிவிருத்திதிட்டங்களின் நிதிச் செயலாற்றுகை	101
அட்டவணை 2.8.2.5	விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ற்சித்திட்டத்தின் முழு மொத்தநிதிச் செயலாற்றுகை	103
அட்டவணை 2.8.2.6	விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ற்சித்திட்டத்மின் மாகாணாீதியானநிதிச் செயலாற்றுகை	104
ஆட்டவணை 2.8.2.7.	பாலங்கள் மற்றும் வான் வழிப்பாலங்களின் நிர்மாணிப்புநிகழ்ச்சித்திட்டத்தின் முழுமொத்தநிதிச் செயலாற்றுகை	105
ஆட்டவணை 2.8.2.8.	பாலங்கள் மற்றும் வான் வழிப்பாலங்களின் நிர்மாணிப்புநிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை	105
ஆட்டவணை 2.8.2.9.	அவசரஉதவிநிகழ்ச்சித்திட்டத்தின் முழுமொத்தநிதிச் செயலாற்றுகை	107
ஆட்டவணை 2.8.2.10.	அவசரஉதவிநிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை	107
ஆட்டவணை 2.8.2.11.	நிறுவகஆதரவுநிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை	108
ஆட்டவணை 2.8.2.12.	கிராமியவீதிகள் மறுமலர்ச்சிநிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை	108
அட்டலணை 2.8.3.1	2019 இல் உள்நாட்டுவங்கிகடன் திட்டத்தின் கீழ் கருத்திட்டஅடிப்படையில் விடுவிக்கப்பட்டதொகை	109
அட்டவணை 2.8.3.2	உள்நாட்டுவங்கிகளின் பங்களிப்பு	110

உருக்களின் உள்ளடக்கம்

உரு 2.2.2.1	பௌதீகமுன்னேற்றம் - கட்டம் III	26
உரு 2.2.3.1	கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தமுழுமொத்தபௌதீகமுன்னேற்றம்	29
உரு 2.2.3.2	காணிச்சுவீகரிப்பின் முழு மொத்தமுன்னேற்றம	30
உரு 2.2.4.1	நிர்மாணவேலைகளின் முழுமொத்தபௌதீகமுன்னேற்றம் - கட்டம் I	31
உரு 2.2.4.2	கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்துமுழுமொத்தபௌதீகமுன்னேற்றம	32
உரு 2.2.4.3	கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்துமுழுமொத்தபௌதீகமுன்னேற்றம்	32
உரு 2.2.4.4	திருத்தப்பட்டதிட்டத்தின் படி இலக்கின் அடைவு	33
உரு 2.2.5.1	காணிச் சுவீகரிப்பின் முன்னேற்றம்	34
உரு 2.3.2.1	மாகாணமட்டத்தில் மணலினால் மூடி திருத்தப்பட்டவீதிகளின் தூர்ரம் கி.மீ - 2019	43
உரு 2.3.5.1	சவூதிஅபிவிருத்திநிதியின் கீழானபொதிகளின் திரண்டபௌதீகமுன்னேற்றம்	47
உரு 2.3.5.2	ஒபிட் நிதியின் கீழானபொதிகளின் திரண்டபௌதீகமுன்னேற்றம	47
உரு 2.3.10.1	கொட்டாவ–தலகலவீதியின் முழுமொத்தமுன்னேற்றம	53
உரு 2.3.10.2	கோட்டை–போப்பேவீதிப் புனரமைப்பின் முழுமொத்தசெயலாற்றுகை	53
உரு 2.4.1.1	2018ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டவீதியின் நீளம்	73
உரு2.4.1.2	மேம்படுத்தப்பட்டவீதிகளின் நீளம் - 2019	73
உரு 2.5.1.1	தேசியநெடுஞ்சாலைகளில் உள்ளபாலங்களின் சாராம்சம	77
உரு 2.5.7.1	2019 திருத்தப்பட்டநடவடிக்கைத் திட்டத்தின் படிபொதிIமற்றும் பொதிIIநிர்மாணஒப்பந்தங்களின் இலக்குஅடைவுகள்	83
உரு 2.6.1.1	நிர்மாணஒப்பந்தபொதி 1இன் நிர்மாணவேலைகளின் பொதீகசெயலாற்றுகை.	89
உரு 2.6.1.2	நிர்மாணப் பணிகளின் பௌதீகசெயலாற்றுகைகட்டம II	90
உரு .8.1	நெடுஞ்சாலைகள் துறையின் முழுமொத்தநிதிச் செயலாற்றுகை	95
உரு2.8.2	நெடுஞ்சாலைத்துறைக்கானதிருத்தப்பட்டபாதீட்டுஒதுக்கத்தின் கலவை - 2019	96

அத்தியாயம் 1

அமைச்சுவிபரம்

1.1 அறிமுகம்

வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் காணப்படும் வீதித்துறையானது கடந்த பதினைந்து வருட காலப்பகுதியில் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. கடந்த காலங்களைப் போன்றே 2019ஆம் ஆண்டிலும் அமைச்சினால் பல தேசிய முக்கியத்துவம் மிக்க கருத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக 2019ஆம் ஆண்டில் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடும்படியான பங்களிப்புச் செய்யக் கூடிய சில புதிய கருத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

வீதி வலைப்பின்னலானது நாட்டில் காணப்படும் மிகவும் பெறுமதிமிக்க மற்றும் பாரிய சமூக சொத்தாகும். இது நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழல் நலன்களுக்கு அடிப்படையாக காணப்படுகின்றது. இலங்கையானது 65,610 சதுர கி.மீ. பரப்பளவில் 21 மில்லியன் சனத்தொகையைக் (இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2019) கொண்ட நாடாகும். இது 1.76 கி.மீ. வீதி அடர்த்தியைக் கொண்டுள்ளது. ஏனைய பல தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையானது அதிக வீதி அடர்த்தியைக் கொண்ட நாடாகும். இலங்கையில் வீதிப் போக்குவரத்தானது பிரதான போக்குவரத்து மூலமாகும். இது புகையிரத போக்குவரத்துடன் ஒப்பிடுகையில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நலன்களைக் கொண்டதாகும். தற்போதைய சூழ்நிலையில் 94 சதவீதமான பிரயாணிகள் மற்றும் 90 சதவீதமான சரக்கும் வீதி போக்குவரத்தினூடாகவே இடம்பெறுகின்றன. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதியம், மகநெகும நிர்மாணக் கம்பனி, மகநெகும உசாத்துணை கம்பனி, மகநெகும மெல்சன் கம்பனி மற்றும் அதிவேக போக்குவரத்து கம்பனி (தனியார்) ஆகியன வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் வரும் பிரதான அரச நிறுவனங்களாகும். இவற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது 1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்ட ரீதியான நிறுவனமாகும். இது 1986ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கு மாற்றீடாக உருவாக்கப்பட்டதாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் முதன்மையான வீதி அபிவிருத்தி நிறுவனமாகும். இதன் கீழ் அண்ணளவாக 12,438 கி.மீ. வீதிகள் பராமரிக்கப்படுகின்றன. இவ்வீதி வலையமைப்பானது பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அது 2019ஆம் ஆண்டின் முடிவில் ஏ தர வீதிகள் 4,215 கி.மீ. பி தர வீதிகள் 8005 கி.மீ. அதிவேகப் பாதைகள் 217 கி.மீ. மற்றும் 3 மீற்றர்களைவிட விரிவான 4662 பாலங்களையும் கொண்டதாகும்.

இவ்வறிக்கையில் வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாற்றுகையானது விரிவாக முன்வைக்கப்படவுள்ளது. இதன் கீழ் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, கருத்திட்ட முகாமைத்துவ பிரிவு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் உள்ளடக்கியதாகும்.

1.2 தூரநோக்கு பணிக்கூற்று குறிக்கோள்கள

1.2.1 தூரநோக்கு

"உலக தரத்திலான வீதி உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல்,திறனாகாப் பராமரித்தல்மற்றும் பாதுகாப்பானதுமான உயர் சேவைகளை வழய்குனராகக் காணப்படல்"

1.2.2 பணிக்கூற்று

"நாட்டின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பிரஜைகளின் தேவைகளுக்கு ஏற்ப காணப்படும் நிபுணத்துவ அறிவு,நவீன தொழிநுட்பம் மற்றும் வளங்களை உகந்த வகையில் பயன்படுத்தி பெருந்தெருக்கள் வலையமைப்பை அபிவிருத்தி செய்து பராமரித்து முகாமை செய்தல் "

1.2.3 குறிக்கோள்கள்

- தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நெடுஞ்சாலை துறைகளுக்கான தேசிய கொள்கைகளை வகுத்தல்
- நகரங்களுக்கிடையில் உயர் போக்குவரத்து வசதி, பொருளாதார மையங்களுக்கிடையில் திறனான தொடர்பு மற்றும் கிராமிய பிரதேசங்களுடனான தொடர்புகளை மேம்படுத்தல்.
- நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் வீதி வலையமைப்பினை சிறந்த தரத்தில் பராமரித்தல்.
- வினைத்திறனான போக்குவரத்து முகாமைத்துவத்திற்கு அவசியமான நுண்ணறிவு போக்கு முறைமையை (IST) பெற்றுக் கொடுத்தல்.
- பயனாளர் நட்பான வசதிகள் மற்றும் உயர் தரமான வீதிச் சேவையினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் வீதித்துறையின் வாண்மை அபிவிருத்தியில் முதலீடு செய்தல்.
- வீதித்துறையின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு ஆராய்ச்சி அபிவிருத்தியில் முதலீடு செய்தல்

1.2 பிரதான செயற்பாடுகள்

1

- வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் தொடர்பான மற்றும் அதனுடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் மற்றும் சட்டவாக்க நிறுவனங்களை (வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகள் மற்றும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதி) மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் மற்றும் 1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை உட்பட அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள் தொடர்புகாவும் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தயாரித்தல், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல

2

- பிரஜைகளை மையப்படுத்திய சமூக பொருளாதார அபிவிருத்தியை விருத்தி செய்யும் வகையில் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தி தரத்தை உயர்த்துதல். இதன் மூலம் கிராமிய நகரமயமாக்கலானது விரிவுபடுத்தப்படுவதோடு கிராமங்கள் நகரங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது.

3

- அதிவேக பாதை பாவனையாளர் கட்டணங்களை தீர்மானித்தல், சேகரித்தல் மற்றும் கண்காணித்தல்.

4

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அறிவுறுத்தல்களின் கீழ் உள்ள வீதிக் கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் முகமாக அரசாங்க கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல். அதேபோல் அத்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்

5

- மேற் கூறப்பட்ட நிறுவனங்களையும் அந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயப்பரப்புக்களையும் மேற்பார்வை செய்தல்..

1.5 பெருந்தெருக்கள் துறை

1.5.1 அமைச்சின் செயற்பாட்டு பிரிவுகள்

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சானது செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சின் செயலாளருடன் 8 செயற்பாட்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அது 6 பகுதித் தலைவர்களால் கீழ்வருமாறு செயற்படுகின்றது.

- **வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகளுக்கான இராஜாங்க அமைச்சு**

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சானது 01.12.2019ஆந் திகதிய இல. 215 4/55 அதிவிசேட வர்த்தமானியில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும். இவ் இராஜாங்க அமைச்சானது செயலாளரினால் தலைமை தாங்கப்படுகின்றது.

1.5.1.1 நிருவாகப் பிரிவு

அமைச்சின் நிருவாகப் பிரிவானது மேலதிக செயலாளரினால் (நிருவாகம்) தலைமையில் இயங்குகின்றது. இப்பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள நிறைவேற்றுத்தர அதிகாரிகளான சிரேஷ்ட்ட உதவிச் செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர், இதற்கு மேலதிகமாக கருத்திட்ட முகாமை மற்றும் பெறுகைப் பிரிவும் இம் மேலதிக செயலாளரின் (நிருவாகம்) நேரடி கண்காணிப்பில் உள்ளது. இப்பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கருத்திட்ட முகாமை மற்றும் பெறுகைப் பிரிவு பணிப்பாளர் மற்றும் உதவிச் செயலாளர் காணப்படுகின்றனர். இப்பிரிவானது அமைச்சின் அனைத்து நிருவாக நடவடிக்கைளையும் கவனிப்பதோடு ஏனைய அனைத்து பிரிவுகளும் தமது செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு அவசியமான பௌதீக சூழலையும் உருவாக்குகின்றது.

2019ஆம் ஆண்டினுள் மீளாய்வு

1. 2019ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதற்கு அமைவாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும். அவசியமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது. இதன் மூலம் அதிகாரிகளுக்கு உரிய துறையில் அவசியமான வாண்மை அபிவிருத்தி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு அதன் மூலம் சிறப்பான பொதுச் சேவை வழங்கல்களை உறுதிப்படுத்துவதே குறிக்கோளாகும்.
2. பொது மக்களுக்கு சரியான மற்றும் உரிய காலத்தில் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு தகவல் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இத்தகவல்களை பெற்றுக் கொடுத்தல்

மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவர் பொறுப்பாகவுள்ளார். தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டின் வினைத்திறனானது மேலதிக செயலாளருக்கு கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகளுடன் ஒப்பிடப்பட்டு முன்னேற்றமானது மீளாய்வு செய்யப்படுகின்றது.

3. தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் அமைச்சின் செயற்பாடுகளை சரியாகவும் மற்றும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அமைச்சின் கீழுள்ள பிரிவுகளானது வருடாந்த இலக்குகளுக்கு உட்பட்டவாறு தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை பூரணப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்கியது.
4. நிருவாகப் பிரிவானது அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களுடன் சிறப்பான மற்றும் தொடர்ச்சியான ஒழுங்கினைப் பேணி தமது நடவடிக்கைகளை சிறப்பான முறையில் பூரணப்படுத்தியுள்ளது.
5. மேற்கூறப்பட்டதற்கு மேலதிகமாக அதிகாரிகளின் வாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளானது இக்காலப்பகுதியில் உரியவாறு மேற்கொள்ளப்பட்டதோடு அதற்கு உதவும் வகையில் கணனிகளுடன் கூடிய சிறப்பான வேலைச் சூழலும் உருவாக்கப்பட்டது.

1.5.12 பெறுகைப்பிரிவு

முன்னைய தேசிய கொள்வனவு முகவராண்மையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அமைச்சின் கொள்வனவுப் பிரிவானது உருவாக்கப்பட்டது. அமைச்சு மற்றும் அமைச்சரவை நிதி அதிகார எல்லைக்குட்பட்ட கொள்வனவுகளுடன் தொடர்புபட்ட அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்யும் செயற்பாட்டினை மேற்கொண்டது. அமைச்சின் கருத்திட்ட செயற்படுத்தல் நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையானது ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமாக பல கருத்திட்ட முகாமை அலகினை உருவாக்கியுள்ளது. இக்கருத்திட்ட முகாமை அலகுகளானது தமது வருடாந்த கொள்வனவு திட்டத்தினை தயாரித்து அமைச்சின் கொள்வனவுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக திட்டங்கள் உள்ளடங்கலாக அவ்வாறான அனைத்து கொள்வனவுத் திட்டங்களையும் ஒன்று சேர்த்து அமைச்சிற்கான பிரதான கொள்வனவுத் திட்டத்தை தயாரிக்கின்றது.

இப்பிரிவானது அமைச்சின் பிரதான கொள்வனவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக திறைசேரி ஏனைய அமைச்சுக்கள், தேசிய கொள்வனவு ஆணைக்குழு மற்றும் கொள்வனவு மேன்முறையீட்டு சபை போன்ற உரிய ஆர்வலர்களையும் ஒருங்கிணைப்பதில் வசதியளிக்கின்றது. இப்பிரிவின் மனித வளமானது ஒரு நிபுணத்துவ கொள்வனவாளர், உதவிக் கொள்வனவாளர், மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு காரியாலய உதவியாளரையும் உள்ளடக்கியதாகும்.

பிரதான கொள்வனவுத் திட்டமானது அமைச்சரவை மற்றும் அமைச்சு மட்டத்திலான அனைத்து கொள்வனவுத் திட்டங்களின் பட்டியலையும் உள்ளடக்கியுள்ளதோடு மற்றும் 2019ஆம் ஆண்டில் 44 கொள்வனவுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இணைப்பு01

பிரச்சினைகள் மற்றும் சவால்கள்

அமைச்சின் கொள்வனவுத் திட்டத்தினை அமுல்படுத்தும் போது பின்வரும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் அடையாளம் காணப்பட்டன.

(அ) ஆரம்பகட்ட வடிவமைப்பின் அடிப்படையில் (BOQ) அளவுகளுக்கான விலைப்பட்டியல் தயாரித்தல். இது கொள்வனவு மீளாய்வு குழுக்களை நியமிப்பதற்கு முன்பே சரியான கிரய மதிப்பீடானது செய்யப்படாமை

(ஆ) கொள்ளளவு மீளாய்வு குழுவானது நியமிப்பதற்கு முன்பு கொள்வனவு தயார்படுத்தல் நடவடிக்கைகளான வடிவமைப்பு,BOQ தயாரித்தல், காணி சுவீகரிப்பு மற்றும் சூழல் ஆய்வுகள் பூரணப்படுத்தப்படாமை

(இ) கருத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு கருத்திட்டத்தின் விடயப்பரப்பில் மாற்றம் மற்றும் முற்றிலும் புதியதொரு நடவடிக்கை கொள்வனவுத் திட்டத்திற்குள் உள்வாங்குதல்

(ஈ) கொள்வனவு தொடர்பான அதிகாரிகளின் அறிவு மட்டத்தில் காணப்படும் குறைபாடுகள்

(உ) கொள்வனவு பத்திரங்கள் விவரக் குறிப்பு என்பவற்றில் காணப்படும் குறைபாடுகள் செயற்பாட்டில் காலதாமதத்தை ஏற்படுத்துவதனால் கொள்வனவு கால அட்டவணையின் அடிப்படையின்படி செயற்பட முடியாதுள்ளது.

1.5.1.3 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவானது வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கத்தினை கையாளுதல், கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தலுக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. அரசாங்கத்திற்கு உயர்நதபட்ச நலனைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் ஒதுக்கத்தை, கட்டு நிதியை மற்றும் செலவுகளை வினைத்திறனாகும் செயற்திறனாகவும் முகாமை செய்வது இப்பிரிவின் பிரதான செயற்பாடாக குறிப்பிடலாம். இச் செயற்பாடுகளுள் நெடுஞ்சாலைகள் துறையினுள் காணப்படும் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் காணப்படும் அனைத்து கருத்திட்டங்களுக்குமான கட்டு நிதியினை பெற்றுக் கொடுப்பதற்காக திறைசேரியுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றமை முக்கியமானதாகும்.

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு அலகுகளினதும் நிதியியல் செயலாற்றுகையானது மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் ஏனைய அலுவலக விதிகளுக்கு கட்டுப்பட்ட கணக்கறிக்கைகளை தயாரிப்பதை உறுதி செய்தல்.

1.5.1.4 அபிவிருத்தி பிரிவு

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்திப் பிரிவானது காணிப் பிரிவு மற்றும் கிராமிய வீதி அபிவிருத்திப் பிரிவு என்ற பிரிவுகளைக் கொண்டதாகும்.

➢ **காணிப் பிரிவு**

நெடுஞ்சாலைகள் அமைச்சின் காணிப்பிரிவானது புதிதாக விரிவாக்கம் செய்யப்படும் நெடுஞ்சாலைகள் கருத்திட்டங்களுக்கு அவசியமான காணிகளை சுவீகரிப்பு செய்முறைக்கு வசதியளிப்பதோடு அனைத்து நிறுவனங்கள் மற்றும் உரிய ஆர்வலர்களுடன் சிறப்பான ஒருங்கிணைப்பினை பேணி வருகின்றது.

2019ஆம் ஆண்டில் இப்பிரிவின் பங்களிப்பு

- காணி சுவீகரிப்பு சட்டத்தின் 2ஆம் பிரிவிற்கு அமைவாக காணி சுவீகரிப்பு முன்மொழிவிற்கான கௌரவ அமைச்சர் அவர்களின் சிபார்சுகளை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சருக்கு சமர்ப்பித்தல். புதிய வீதி கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு, காணியை சுவீகரிப்பதற்கு வசதியளிக்கும் வகையில் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் காணியின் வெற்று உரிமையை பெற்றுக் கொள்ளுதல்.
- காணி சுவீகரிப்பு சட்டத்திற்கு அமைவாக காணி சுவீகரிப்பு தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு

அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, அரச விலை மதிப்புத் திணைக்களம், நில அளவைகள் திணைக்களம், பிரதேச செயலகங்கள், அரச அச்சகம் மற்றும் கருத்திட்ட முகாமை என்பவற்றுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.
- காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல் விசேட குழுக் கூட்டங்களை கூட்டுதல் மற்றும் குழுவின் தீர்மானங்களை தயாரித்து அதனை அறிவித்தல்
- பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தினால் கோரப்படும் அறிக்கைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- பொது மக்கள் குறைகளை விசாரித்து தீர்ப்பதற்கு உதவியளித்தல்.
- வீதி நிர்மாணப் பணிகளினால் காணிகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியமர்த்துவதற்கு அவசியமான காணிகளை கொள்வனவு செய்வதற்கு காணி கொள்வனவு குழுவினூடாக உரிய ஏற்பாடுகளை செய்தல்
- காணி சுவீகரிப்புசட்டத்தின் 39(1) பிரிவின் கீழ் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்திக்கு அவசியமற்ற காணிகளை மீள் கையளிப்பதற்கான அமைச்சரின் சிபார்சுகளை கௌரவ காணி அபிவிருத்தி அமைச்சருக்கு சமர்ப்பித்தல்
- ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்திக்கு அவசியமற்ற காணிகளை காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விநியோகித்தல் கட்டளை பிறப்பிக்கப்பட்ட காணிகளை மீள் வழங்குவதற்காக சட்டத்தின் 50ஆம் பிரிவின் சிபார்சுகளை பெற்றுக் கொடுத்தல்

வருடத்திற்கான அடைவுகள்

- காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் 92 சுவீகரிப்பு முன்மொழிவுகளை காணி அபிவிருத்தி அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது.
- காணி சுவீகரிப்பு சட்டத்தின் அமைவாக காணிகளின் வெற்று உரிமையை பெற்றுக் கொள்வதற்காக கௌரவ அமைச்சரின் 73 சிபாரிசுகள் காணி அபிவிருத்தி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- காணி சுவீகரிப்பு மற்றும் மீள் குடியமர்த்தல் விசேட குழுவின் 27 சட்டங்கள் இடம்பெற்றதோடு 325 காணி துண்டுகள் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 39(அ) இன் கீழ் கௌரவ அமைச்சரின் 13 மீள் கையளிப்பு சிபார்சுகளும் மற்றும் சட்டத்தின் 58ஆம் பிரிவின் கீழ் 6 இரத்துச் செய்தல் சிபார்சுகளும் காணி அபிவிருத்தி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- வீதி அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான காணிகள் சுவீகரிக்கப்பட்டமையினால் பாதிப்படைந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்கு அவசியமான காணிகளை கொள்வனவு செய்வதற்காக 4 காணி கொள்வனவு குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.
- ஜனாதிபதி செயலகத்தினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- பொது மக்களால் நேரடியாக முன்வைக்கப்பட்ட 467 பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

➢ **மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி பிரிவு**

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி கருத்திட்டமானது 2004ஆம் ஆண்டு ரூபா 500 மில்லியன் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டு நாடு பூராகவும் விஸ்தரிக்கப்பட்டது. அது தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் காணப்படுகின்றது. இப்பிரிவினது மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) பணிப்பாளர் உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) ஆகிய பதவிநிலை அதிகாரிகளுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் காரியாலய உதவியாளர்களையும் கொண்டுள்ளது.

2019ஆம் ஆண்டில் முகம் கொடுத்த பிரச்சினைகளும் சவால்களும்.

- திறைசேரியினால் போதுமான கட்டுநிதி கிடைக்கப் பெறாமையினால் இந்நிகழ்ச்சித் திட்டமானது குறைந்த செயலாற்றுகையை காட்டியுள்ளது.
- மோசமான காலநிலை காரணமாக பின்தங்கிய பிரதேசங்களில் நுழைவானது தடைப்பட்டமையினால் இப்பிரிவின் செயற்பாடானது பின்னடைவை காட்டியுள்ளது.
- மிகவும் குறுகிய காலத்தினுள் ரூபா. 10,000 மில்லியன் பெறுமதியான வேலைகளை செய்வதற்கு அவசியமான மனித வளம் மற்றும் தொழிநுட்ப தன்மை காணப்படாமை கருத்திட்டங்களுக்கான கொள்வனவு ஒப்பந்தங்களை பெற்றுக் கொடுப்பதற்கு பொருத்தமான பொறிமுறை காணப்படாமை.
- நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை காண்பதற்கு பொருத்தமான கண்காணிப்பு முறைமை காணப்படாமை

1.5.1.5 உள்ளக கணக்காய்வு

அமைச்சுக்கான உள்ளக கணக்காய்வு பிரிவை நிதி ஒழுங்கு விதிகளின் 133இன் படி உருவாக்கப்பட்டதாகும். இதன் அடிப்படையில் தலைமை கணக்கு அதிகாரிகள் தனது நிறுவனத்தின் நிதி ஒழுங்கு விதிகளின் 128இன் பிரகாரம் கடமைகளையும் பொறுப்புக்களையும் மேற்கொள்வதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவானது கட்டாயம் உருவாக்கப்படல் வேண்டும்.

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்

அமைச்சில் பின்வரும் கணக்காய்வு துறைகளில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இக்காலப் பகுதியில் ஆபத்தான கருத்திட்டங்களும் அடையாளம் காணப்பட்டன.

1. செயலாற்றுகை கணக்காய்வு
2. நிதிக் கணக்காய்வு
3. நிருவாக கணக்காய்வு
4. பௌதீக ரீதியான களப் பரிசோதனை

இப்பிரிவுகளால் தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக தொடர்ச்சியான கணக்காய்வு மற்றும் சுயாதீனமான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் நெடுஞ்சாலைகள் மற்றும் விதி அபிவிருத்தி பிரிவுகளினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களினூடாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்கள் அடையப்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டன.

செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக 2019ஆம் ஆண்டில் கணக்காய்வு திட்டத்திற்கு வெளியே விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அது தொடர்பில் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் உள்ளக கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் விசேட பரிசோதனைகள் மூலமாக அமைச்சினை நேரடியாக பாதிக்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடுகள் மீதான அவதானங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

<u>இலக்குகளின் அடைவு மற்றும் மீளாய்வு</u>

2019ஆம் ஆண்டின் கணக்காய்வு திட்டத்தின்படி கணக்காய்வு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன. உள்ளக கணக்காய்வுகளின் ஊடாக வழங்கப்பட்ட சிறப்பான விளக்கங்கள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் மூலம் ஆளணி முகாமைத்துவம், சொத்து முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு குறைபாடுகள், வாகனங்களின் முறையற்ற பயன்பாடுகள், கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு

உள்ளக கட்டுப்பாட்டினை உறுதி செய்வதற்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.

1.5.1.6 பொருயியல் துறை

பொருயியல் பிரிவினது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் சார்பாக நாட்டினுள் நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. கருத்திட்ட அமுல்படுத்தல் மேற்பார்வை, முன்னேற்ற மீளாய்வு மற்றும் கருத்திட்டங்களின் தொழிநுட்ப கணக்காய்வுகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் இப்பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

- நிர்மாணிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களின் தரம் மற்றும் முன்னேற்றம் மற்றும் அவற்றின் செயலாற்றுகை அறிக்கை என்பன மேலதிக செயலாளரினால் (பொறியியல்) மேற்பார்வை செய்யப்படுவதோடு கருத்திட்ட வழிநடத்துதல் குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றுவர்.
- நெடுஞ்சாலைகள் நிர்மாண கட்டண வீதங்களின் அட்டவனையானது தயாரிக்கப்பட்டு 2019 பெப்ரவரியில் வெளியிடப்பட்டது.
- 2019இல் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு கிடைக்கப்பெற்ற பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட வீதி நிர்மாண முறைப்பாடுகளானது களத்திற்கு சென்று மேற்பார்வை செய்யப்பட்டது. உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.
- பின்வரும் வீதிகள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டு கையேற்கப்பட்டன.
    - அந்தரவெவ - ஹம்பாந்தோட்டை வீதி
    - பரவகும்புக்க – மத்தள வீதி
    - வெளிவட்ட பாதை

1.5.1.7 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு

வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவாகனது நெடுஞ்சாலைகள் துறையின் கொள்கை வகுத்தல் மற்றும் அனைத்து கருத்திட்டங்களினது மேற்பார்வை செய்தல், திட்டமிடல் ஒருங்கிணைப்பு, அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு என்பவற்றிற்கு பொறுப்பாகும்.

2019ம் ஆம் அண்டின் போது இப்பிரிவினால் திட்டமிடப்பட்ட இலக்குகளானது எதிர்பார்த்ததைப் போன்று வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது. ஓவ்வொரு இலக்கினதும் முன்னேற்றமானது கீழ்வருமாறு விளக்கலாம்.

- 2019 ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத் திட்டமானது 2018ஆம் ஆண்டு டிசம்பர் 28 இல் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கபிட்டது. மற்றும் திருத்தியமைக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டமானது 2019 நவம்பர் 29 இல் தேசிய கணக்காய்வு காரியாலத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை 2019 இல் தயாரிக்கபடவில்லை.
- 2019ஆம் ஆண்டிற்கு மொத்தமாக 63 கருத்திட்ட வழிப்படுத்தல் குழ கூட்டங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு நடாத்தப்பட்டன. 23 கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள் இதில் பங்குபற்றின.
- இவைகளுக்கு மேலதிகமாக நிதி அமைச்சினால் ஒழங்கு செய்யப்பட்ட விசன் 2025 என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா, விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட (சில்ப சேனா) மற்றும் ஸ்ரீலங்கா பொரியலாளாளர் நிருவாகத்தினால் ஒழங்கு செய்யப்பட்ட டெக்னோ ஸ்ரீலங்கா உள்ளடங்கலாக 5

கண்காட்சிகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபை கண்காட்சியினை மேற்கொள்வதற்காக தேவையான ஏற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- இப்பிரிவினால் விஞ்ஞான முறையில் மீளாய்வு செய்யப்பட்ட 14 கருத்திட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளைத் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- காலாண்டு முன்னேற்ற அறிக்கை, மாதாந்த முன்னேற்ற அறிக்கை மற்றும் வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அண்மிய தரவுகளுடன் கூடிய கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக ரீதியான தரவுகளுடன் கூடிய முன்னேற்ற அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கருத்திட்ட முன்னுரிமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் இப்பிரிவின் தொழிற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளும் 2019 ஆண்டு திட்டமிடப்பட்டதைப் போல் மீளாய்வு செய்யப்பட்டது.

1.6. ஏனைய நியதிச் சட்டவாக்க

நிறுவனங்கள்

1.6.1 வீதி அபிவிருத்தி அதிகாரசபை

தூரநோக்கு

“சமூகத்தின் எதிர்ப்பார்ப்புகளை சிறப்பான நெடுஞ்சாலை வழியமைப்பை பெற்றுக்கொடுத்து பூர்த்தி செய்யும் நெடுஞ்சாலைப் பொறியியல் பல்துறை மேதகு நிருவனமாக இருப்பதாகும”



பணிக்கூற்று

“வீதித்துறையின் தேசிய முதன்மை நிருவனமாக, உரிய பாதுகாப்பு திட்டத்துடன் சொகுசான மற்றும் சூழல் நடப்பான முறையிலான திறனான தேசிய நெடுஞ்சாலைகள் கட்டமைப்பை வழங்குவதனூடாக போக்குவரத்து மற்றும் தொடர்புகளையும் உறுதிப்படுத்துவதனூடாக மக்கள் மற்றும் பொருட்களின் நகர்விற்கு வழியமைத்து நாட்டின் சமூகப்பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதாகும”.

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்வரும் நாட்டின் நெடுஞ்சாலைகள் துறையின் பிரதான நிறுவனமாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது 1981 ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழான ஒரு நியதிச் சட்டவாக்க நிருவனமாக நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கு பிரதியீடாக 1986 இல் உருவாக்கப்பட்டதாகும். அதனைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையானது தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பை பராமரித்து தரமுயத்தும் பொறுப்பினை கொண்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் பிரதான நெடுஞ்சாலைகள் அதிகார சபையாக அதன் பொறுப்பின் கீழ் ஏ-தர நெடுஞ்சாலைகள் பீ-தர நெடுஞ்சாலைகள், அதிவேகப்பாதைகள் மற்றும் பாலங்களை வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் வேண்டும்.

1.7 நெடுஞ்சாலைத்துறை முதலீடு

அரசாங்கமானது ஒரு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை அடைவதை இலக்காக கொண்டுள்ளது. இவ் இலக்கினை அடைந்து கொள்வதற்கு வீதி கட்டமைப்பினை உரிய தரத்தில் பேணுவது இன்றியமையாதாகும் என அடையாளம் கண்டுள்ளது. நாடு முழுவதும் மக்களின் வாழ்கைத்தரத்தை முன்னேற்றுவதற்காக பெருமளவு முதலீட்டினை மேற்கொண்டு வரும் அதே வேலை வீதித்துறை அபிவிருத்தியிலும் பெருமளவான நிதியினை ஒதுக்கி போக்குவரத்துறையில் அதிகரித்து கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு செய்துள்ளது. வீதித்துறையின் மீதான முதலீடுகளானது மிகவும் இன்றியமையாததொன்றாகும். ஏனெனில் இம்முதலீட்டின் மூலம் பிரயாணிகள் தமது போக்குவரத்து தேவையினை இலகுவில் பூர்த்தி செய்து கொள்ளல், எரிபொருள் சிக்கனம், குறைந்த போக்குவரத்து செலவு, குறைந்த வாகன கிரயம்போன்ற நலன்களை பெற்றுக் கொள்ளலாம்.

2009 - 2019 இடைப்பட்ட காலப்பகுதியில் நெடுஞ்சாலைத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் சுருக்கம் கீழ்வருமாறு

அட்டலணை 1.7.1 பெருந்தெருக்கள் துறை முதலீடுகள் 2007 – 2019

வருடம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூபா பி)	செலவுகள் (ரூபா பி)	திரண்ட செலவுகள் (ரூபா பி)
2007	44.8	37.6	37.6
2008	63.2	56.8	94.4
2009	88.9	76.1	170.5
2010	89.5	84.7	255.2
2011	121.1	100.9	356.1
2012	136.0	134.1	490.2
2013	133.3	131.1	621.3
2014	148.0	148.0	769.3
2015	196.8	178.0	947.35
2016	172.6	141.7	1,089.08
2017	206.3	192.0	1,281.11
2018	196.4	166.7	1,448.03
2019	256.6	156.8	1,604.58

மேற்குறிபிடப்பட்ட அட்டவணையின்படி 2007ஆம் ஆண்டிலிருந்து நோக்கும் போது அதிகூடிய முதலீடானது 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறைந்தளவான முதலீடானது 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீதித்துறை மீதான முதலீடானது துரிதமாக அதிகரித்துச் சென்றுள்ள அதேவேளை 2016ஆம் ஆண்டில் சிறியதொரு வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இவ்வளர்ச்சியானது பிரதானமாக தேசிய முக்கியத்துவம் மிக்க அதிவேகப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் நிர்மாணப்பணிகள் மற்றும் பாலங்கள் மற்றும் வான் பாலங்கள் நிர்மாணித்தல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு நாட்டினுள் போக்குவரத்து வசதியின் கிடைப்பனவு அதிக்கரிக்கப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

தெற்கு அதிவேகப்பாதை, கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேகப்பாதை மற்றும் கொழும்பு வெளிவட்டப் பாதைகளின் நிர்மாணங்களானது பூரணப்படுத்தப்பட்டமையானது நகரங்களுக்கான போக்குவரத்து நெரிசல் குறைவடைந்து கிராமங்களானது நாட்டின் பொருளாத மையங்களோடு இணைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிராந்தியத்தின் அபிவிருத்தியும் துரிதமடைந்துள்ளது. இக்குறுகிய காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் பங்களிப்பானது அதிகரித்துள்ளது.

2009ஆம் ஆண்டில் எல் டீ. டீ ஈ இற்கு எதிரான உள்நாட்டு யுத்தமானது முடிவுக்கு வந்ததன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான முதலீடுகளின் தேவையானது துரிதமாக அதிகரித்தது. இதன் அடிப்படையில அப்பிராந்தியங்களில் சேதமடைந்த வீதி உட்கட்டமைப்பு வசதிகளின் புனர் நிர்மானமானது ஒரு முன்னுரிமை நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்டது. அதன் காரணமாக வீதித்துறை மீதான முதலீடுகளானது குறுகிய காலத்தில் பன் மடங்காக அதிகரித்துள்ளது.

2019 இல் ஆரம்பத்தில் ரூபா 185,280 மில்லயன் ரூபாவாக காணப்பட்ட ஒதுக்கமானது மேலதிக ஒதுக்கம் மற்றும் பற்றாக்குறை ஒதுக்கத்தின் மூலம் ரூபா 256,584 மில்லியன்களாக அதிகரிக்கப்பட்டது. நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 2019ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டதில் 117 தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஒதுக்கீடானது அதிகரிக்கப்பட்டாலும் முதல் மூன்று காலாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட செலவுகளானது குறைவாக பதியப்பட்டுள்ளது. இதுமுடிக்கப்பட்ட வேலைகளுக்கான பட்டியல்களானது இதுவரை செலவுகளாக கணக்கினுள் உள்ளடக்கப்படாமையினால் இடம்பெற்றதாகும். ஏனெனில் திறைச்சேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் வெளிநாட்டு நிதியீட்ட கருத்திட்டங்களுக்கான நிதியினை விடுவிப்பதற்கு போதுமான ஒதுக்கத்தினை கட்டுப்படுத்தியமையால் இறுதிக்கணக்குகளை தயாரிப்பதில் காலதாமதம் ஏற்ப்பட்டது.



1.7.1 வெளிநாட்டு நிதயீட்ட கருத்திட்டங்களின் விபரம்

இல	கருத்திட்டம்	உதவி நிறுவனம்	மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு (ரூபா மி)	கருத்திட்ட காலம்
அதிவேகப்பாதை அபிவிருத்தி திட்டம்				
1	மத்திய அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 1	எக்சிம் வங்கி சீனா	171,405	2016-2022
2	மத்திய அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 2	உள்நாட்டு வங்கி	148,520	2017-2021
3	மத்திய அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 3	தீர்மானிக்கப்படவில்லை	148,767	2018-2021
4	மத்திய அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 4	தீர்மானிக்கப்படவில்லை	165,383	42 மாதங்கள஼
5	நீடிக்கப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 1	எக்சிம் வங்கி சீனா	113,589	2016-2020
6	நீடிக்கப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 2		55,200	
7	நீடிக்கப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 3		31,574	
8	நீடிக்கப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை திட்டம் கட்டம் 4		52,156	
9	வெளிவட்டஅதிவேகப்பாதை கட்டம் 3	எக்சிம் வங்கி சீனா	78,700	2016-2020
10	ருவன்புர அதிவேகப்பாதை	தீர்மானிக்கப்படவில்லை	286,000 (அண்ணளவாக)	தீர்மானிக்கப்பட வில்லை
11	உயர்த்தப்பட்ட பெருந்தெரு – புதிய களினிப்பாளத்தில் இருந்து அத்துருகிரிய	BOT அடிப்படையில்	134,506 (தீர்மானிக்கப்பட வில்லை)	தீர்மானிக்கப்பட வில்லை
12	துறைமுக நுழைவு உயர்த்தப்பட்ட பெருந்தெரு	ஆசிய அபிவிருத்தி வங்கி	55,915	2019-2025
பெருந்தெருக்கள் அபிவிருத்தி திட்டம்				
13	பேஸ்லைன் வீதி கட்டம் 3 (காணி சுவீகரிப்பு மாத்திரம்)	உள்நாட்டு வங்கி	3,500	
14	பதுளை செங்கலடி வீதி	SFD சர்வதேச அபிவிருத்திக்கான சவுதி நிதியம் மற்றும் OFIDசர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிறுவனம்	21,000	2017-2021
15	வீதி வலயமைப்பு அபிவிருத்தி திட்டம்	SFD சர்வதேச அபிவிருத்திக்கான சவுதி நிதியம	9,055	2018-2020
16	வடக்கு வீதி அபிருத்தி திட்டம் (மேலதிக கடன்)	ஆசிய அபிவிருத்தி வங்கி	12,026	2019-2020
17	வீதி வலயமைப்பு அபிவிருத்தி திட்டம்	OFID சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிறுவனம்	6,625	2017-2020

இல	கருத்திட்டம்	உதவி நிறுவனம்	மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு(ரூபா மி)	கருத்திட்ட காலம்
18	கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி திட்டம்	OFID சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிறுவனம	13,526	2017-2021
19	முன்னுரிமை வீதிகளின் புணரமைப்பு மற்றும் மேம்பாடு 3 கட்டம் 1	சீனா அபிவிருத்தி வங்கி	52,500	2014-2020
20	மேல் மாகாண தேசிய பெருந்தெருக்கள் கருத்திட்டம்	OFID சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிறுவனம	6,046	2017-2020
21	தெற்கு வீதித்தொடர்பு கருத்திட்டம்	ஆசிய அபிவிருத்தி வங்கி	13,400	2014-2021
22	ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம் I	ஆசிய அபிவிருத்தி வங்கி	120,000	2015-2024
23	ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம் II	ஆசிய அபிவிருத்தி வங்கி	135,000	2017-2027
24	மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும்பாலங்கள் விரிவாக்குதல் மற்றும் புணரமைத்தல்	எக்சிம் வங்கி ஹானான்	14,000	2018-2020
25	முன்னுரிமை வீதிகளின் புணரமைப்பு மற்றும் மேம்பாடு 3 கட்டம் 11	சீனா அபிவிருத்தி வங்கி	20,000	2016-2020
26	போக்குவர்த்து திட்டங்கள் தயாரிப்பதற்கான வசதி	ஆசிய அபிவிருத்தி வங்கி	1,697	2017-2023
27	போக்குவர்த்து தொடர்பு மற்றும் சொத்து முகாமைத் திட்டம்	உலக வங்கி	2,610	2018-2023
	பாலங்கள் மற்றும் வான்பாலங்கள் நிர்மாணம்			
28	பிரதேச பாலங்கள் திட்டம் கட்டம் 11	HSBC ஐக்கிய இராச்சியம்	12,042	2013-2020
29	25 பாலங்களின் புணர்நிர்மாணம்	அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம் (KFAED)	5,070	2015- 2021
30	46 பாலங்களின் புணர்நிர்மாணம்	பிரான்ஸ் அரசாங்கம் (NATIXIS வங்கி)	7,721	2015-2019
31	பிரதான பாலங்கள் நிர்மாணக் கருத்திட்டம்	சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய நிறுவனம்(JICA)	14,900	2013-2021
32	களனி ஆற்றிற்கு மேலான புதிய உயர்த்தப்பட்ட பால நிர்மாணம்	சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய நிறுவனம்(JICA)	55,313	2014-2020
ஆவசர உதவி நிகழ்ச்சித்திட்டம்				
33	மண்சரிவு தடுப்பு கருத்திட்டம்	சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய நிறுவனம்(JICA)	16,201	2012-2020

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

அத்தியாயம் 2

முன்னேற்றம் மற்றும் எதிர்காலகண்ணோட்டம்

பாகம் 1

வெளிநாட்டுநிதயீட்டகருத்திட்டங் களின் முன்னேற்றம

2.1 புதிய முயற்சிகள்

புதிய முயற்சிகளாக அமுல்படுத்துவதற்கு 3 கருத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2.1.1 மத்திய அதிவேகப் பாதையுடன் தொடர்பான கண்டி மற்றும் அதனைச் சூழவுள்ள வீதிகளை மேம்படுத்தல்

கண்டி நகரமானது மலைப்பாங்கான நிலப்பரப்பாக காணப்படுவதால் அதிவேகப் பாதை தரத்திலான வீதி நிர்மாணிப்பானது அதிக செலவு கூடியதாகும். ஆகவே, மிகவும் ஆழமான ஆய்வின் பின்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையானது மத்திய அதிவேகப் பாதையை … கட்டுகஸ்தோட்டை- குருநாகல் - புத்தளம் (ஏ 10 வீதி) வீதியில் கலகெதர வரை நிர்மாணிப்பதற்கு தீர்மானித்துள்ளது. கண்டி நகரத்தினை மத்திய அதிவேகப் பாதையுடன் தொடர்புபடுத்துவதற்காக தற்போது காணப்படும் பல வீதிகளை உரிய தரத்தில் மேம்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழே பின்வரும் 6 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பொதி 1	கட்டுகஸ்தோட்டை – குரநாகல் வீதி (ஏ-10) கட்டுகஸ்தோட்டையிலிருந்து கலகெதர வரையில் நான்கு சுவடுகளை கொண்ட வீதியாக மேம்படுத்துதல்
பொதி 2	• கட்டுகஸ்தோட்டை நகரத்தில் ஏ 009 வீதி மற்றும் ஏ010 வீதியை இணைத்து நான்கு சுவடுகளைக் கொண்ட மாற்று வழிப்பாதை ஒன்றை நிர்மாணித்தல் • அலகம ஈரியகம வீதியினை விரிவாக்கி மேம்படுத்தல் (6005)
பொதி 3	• பரிகம – கொல்லுலொலுவ வீதியினை விரிவுபடுத்தி மேம்படுத்தல் (0+008 இருந்து 5+750) • அரம்பகடே – பொக்காவல – அம்பத்தன்ன வீதியினை விரிவுபடுத்தி மேம்படுத்தல் அரம்பக்கடே – பொக்காவில – பூஜாபிடிய பகுதி • அலவத்துகொட – பூஜாபிடிய வீதியினை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல.

2018ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை எவ்வாராயினும் 2018ஆம் ஆண்டில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சாத்திய வள ஆய்வினை மேற்கொள்வதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவை அனுமதியானது கிடைக்கப்பெற்றுள்ளது.

2.1.2 கொகுவல மற்றும் கட்டம்பை ஆகிய இரு இடங்களில் வான் பாலங்களை நிர்மாணித்தல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது முக்கியமான இடங்களின் போக்குவரத்து நெரிசலை குறைத்து இயலளவை அதிகரிப்பதற்காக முழு வீதிக் கட்டமைப்பு மற்றும் புகையிரத கடவைகள் மற்றும் இடைமாற்றங்களுக்கு மேலாக மேம் பாலங்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களை அடையாளங் கண்டுள்ளது. இதன் அடிப்படையில் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது கொகுவல மற்றும் கட்டம்பை ஆகிய இடைமாற்று சந்திகளில் மேம் பாலங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஹங்கேரிய நாட்டின் நிதியுதவியுடன் இது எதிர்வரும் காலங்களில் நிர்மாணிக்கப்படும்.

கொகுவல மேம்பாலமானது கொகுவல சந்தியில் கொழும்பு – ஹொரனை வீதியில் அமைக்கப்படும். இது கொழும்பு நகரை நோக்கியுள்ள ஒரு பிரதான நுழைவுப் பாதையாக்க காணப்படுவதோடு மற்றும் பல மிகவும் சனநெரிசல் மிக்க புறநகர் பகுதிகளையும் இணைக்கின்றது.

இச்சந்தியினை நோக்கும் போது பிரதானமாக பெருமளவு வாகனங்கள் (பீ 84) கொழும்பு – ஹொரனை வீதியிலேயே செல்கின்றது. இவ்வாகனங்கள் பிரதானமாக அத்துல்கோட்டை மிரிஹான – கொகுவல மற்றும் தெகிவளை வீதி மற்றும் கொகுவலை – ஹொரன வீதியில் இருந்து கொகுவளை – தெகிவளை வீதிக்கு

திரும்பி பயனிக்கின்றது. ஆகவே இச்சந்தியில் ஒரு மேம்பாலத்தை நிர்மாணிப்பதினூடாக இவ் அனைத்து வீதிகளினதும் வாகனங்களை ஒரே திசையில் செலுத்துவதனூடாக இச்சந்தியில் காணப்படும் நெரிசலை குறைக்கலாம்.

அட்டவணை- 2.1.2.1 முன்மொழியப்பட்டுள்ள வான் வழிப்பாலங்கள்

பாலங்களின எண்ணிக்கை	நீளம்	வளைவின் நீளம்	உள்ளமைவு	வான வழியின் அகலம்
கொகுவலை	229 m	97.6m	3spans - 132m	9.4m
கட்டம்பே	பிரதான பாலம; 396.7 மீ கிளை ஏ1 - 432.4 மீ	பிரதான பாலம; 116.7மீ கிளை 147.4 மீ	பிரதன பாலம; 8 மீ 8உள்ளளவுகள்	3 சுவடுகள் 13.4 மீ 2 சுவடுகள் - 9.4 தனிச்சுவடு கிளை5. 4 மீ

கண்டி நகரத்திற்குள்நுழையும் பிரதான 2 வீதிகளான வில்லியம் கொபல்லாவ மாவத்தை மற்றும் ஏ1 வீதியில் கட்டம்பை சந்தி இடமாற்றமாகும். தற்போது புகையிரத கடவையானது ஏபி 42 வில்லியம் கொபல்லாவ மாவத்தை கட்டம்ப இடம் மாற்றலில் இருந்து 120மீ தள்ளி கட்டம்பையில் அமைந்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள மேம்பாலமானது ஏபி 42 வீதிக்கு குறுக்காகவுள்ள புகையிரத கடவைக்கு மேலாக ஏ1 வீதியில் கண்டியை நோக்கி அமையும். இதற்கு மேலாக இம்மேம்பாலமானது ஏபி 42 வீதிக்கு ஒரு கிளையினை கொண்டிருப்பதனால் ஏபி 42 வீதியில் இருந்து கண்டிக்கு வரும் வாகனங்களுக்கு ஒரு மாற்று வழியாகவும் அமைந்து புகையிரதக் கடவையை தவிர்க்கவும் முடியும்.

இதற்கான மொத்த நிதியும் ஹங்கேரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான சலுகை நிதியீட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும். இந்நிதியீட்டத்திற்கான வேலைச் சட்டகத்திற்கான ஒப்பந்தமானது இலங்கை அரசாங்கத்திற்கும் ஹங்கேரிய அரசாங்கத்திற்கும் இடையில் 2017ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. ஹங்கேரிய அரசாங்கமானது எக்சிம் வங்கியினூடாக கடனை பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை செய்து தரும்.

இதன் அடிப்படையில் நிர்மாண ஒப்பந்தமானது பிட்டோனு பிடேபிடோ நிறுவனத்துடன் 2019 ஜூன் 20இல் கைச்சாத்திடப்பட்டதோடு கடன் ஒப்பந்தமானது 2019 ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்டது.

2.1.3 கோகிலாய் பாலம் நிர்மாணம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது கிழக்கு மாகாணத்தையும் வட மாகாணத்தையும் கரையோரப் பகுதியினூடாக தொடர்ச்சியான நிலத் தொடர்பினை ஏற்படுத்துவதற்காக முல்லைத்தீவு – கோகிலாய் - புல்மூடை வீதியில் கோக்கிலாய் கலப்பிற்கு மேல் 1050 மீற்றர் நீளமான புதிய பாலம் நிர்மாணித்தல்

தேசிய வீதி கட்டமைப்பின் கரையோர வீதி வலையமைப்பில் புல்மூடைக்கு அப்பால் தொடர்ச்சியான நிலத் தொடர்பு காணப்படுவதில்லை. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக சீன எக்சிம் வங்கியின் வடக்கு பாதைகள் புனரமைப்பு திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கோகிலாய் (பீ 297) வீதியானது புல்மூட்டை வரை நீடிக்கப்பட்டு 42 கி.மீ. அபிவிருத்தி செய்யப்பட்டது. இப்பாதையானது திருகோணமலை மாவட்டத்தை வடமாகாணத்துடன் இணைக்கும் பிரதான நெடுஞ்சாலையாகும். இதுவே கிழக்கு

மாகாணத்தில் இருந்து அதாவது மட்டக்களப்பு, திருகோணமலை முல்லைத்தீவு, கிளிநொச்சி யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்திற்குறிய மிகவும் குறுகிய வழியாகும். இவ்வீதியானது நாயாறு களப்பு மற்றும் கோகிளாய் களப்பில் பிரதான கடலைக் கடந்து செல்கின்றது.

மேற்கூறப்பட்ட வீதித் திட்டத்தின் கீழ் நாயாறு களப்பிற்கு மேலான பாலமானது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக கோகிலாய் பாலத்திற்கான ஒப்பந்தம் உட்படுத்தப்படவில்லை.

பருவமழைக்காலத்தில் கோகிலாய் களப்பின் நீளமானது 1,025 மீற்றர்களாகும். வரண்ட காலங்களில் அது 800 மீற்றர்களாக சுருங்குகின்றது. வீதி அபிவிருத்தியின் பின்பு இவ்வீதியில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் கோகிலாய் களப்பை தாண்டிச் செல்வதற்கு வாகனங்கள் மாற்றுப் பாதை வழியே 25 கி.மீ.மேலதிகமாக உள்ளூராட்சி மன்ற சிறிய வீதிகளில் பயணிக்க வேண்டும். பெரும்பாலும் இம்மாற்றுப் பாதைகள் மண் பாதைகளாகும். மழைக் காலங்களில் இவ்வீதிகளில் பயணிப்பது மிகவும் கடினமாகும்.

பல்மோடையில் இருந்து கோகிலாய் வரையான கடற்கரைப் பகுதியானது ஏறக்குறைய 4 மில்லியன் மெட்ரித் தொன் தாதுகளைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் பின்பு இத்தாதுப் பொருட்களை குறைந்த செலவில் அகழ்வு செய்யலாம்.

கோகிலாய் பறவைகள் சரணாலயம் இக் களப்பு பகுதியிலேயே அமைந்துள்ளது. ஆகவே கோகிலாய் பாலத்தின் நிர்மாணிப்பானது இப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறை மற்றும் கனரக கைத்தொழில் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யும்.

முல்லைத்தீவு – கோகிலாய் - புல்மோட்டை வீதிப் புனரமைப்பு திட்டத்தின் மூலம் முழுமையான நலனைப் பெற வேண்டுமாயின் கோகிலாய் பாலத்தின் நிர்மாணம் இன்றியமையாததாகும். 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் இப்பாலத்தை நிர்மாணிப்பதற்காக அனைத்து ஆரம்ப நடவடிக்கைகளையும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டது. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் முன்னுரிமைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இது இடை நிறுத்தப்பட்டது. மீண்டும் 2018ஆம் ஆண்டில் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பாலத்தை நிர்மாணிப்பதற்காக செக் குடியரசின் பில்பிங்கர் எம் சி ஈ சிலனைஸ் நிறுவனம் விலைமனு கோரப்படாத ஒரு முன்மொழிவை வீதி அபிவிருத்திஅதிகார சபைக்கு சமர்ப்பித்துள்ளது.

இம் முன்மொழிவிற்கான ஒப்பந்த தொகையான யூரோ 48.8 பில்லியனில் 41.5 மில்லியன்களை செஸ்கோஸ்லோவென்கலொசொட்னி வங்கி நிதியளிப்பதற்கும் மிகுதி 7.3 மில்லியன் யூரோக்களை ஹட்டன் நஷனல் வங்கியும் பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கியுள்ளது.

இப்பாலத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் எம்சிஈ சிலன்சின் கம்பனிக்குமிடையில் 2019 ஜுன் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்தில் சில சரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என கணக்காய்வு திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளதுடன் தற்போது வங்கியானது அத்திருத்தங்களைச் செய்து திருத்தப்பட்ட ஒப்பந்தத்தையும் சமர்ப்பித்துள்ளது.

கோகிலாய் பாலத்தின் அமைவிடம் இணைப்பு 02இல் தரப்பட்டுள்ளது.

2.2 அதி வேக நெடுஞ்சாலை அபிவிருத்தி

ஒரு நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்கும் ஒரு திறனான போக்குவரத்து முறையானது இன்றியமையாததாகும். இலங்கையின் பெரும்பாலான தேசிய மற்றும் மாகாண வீதி நெடுஞ்சாலைகளானது 50 வருடங்களுக்கு முன்பு அன்றை வாகனங்களின் எண்ணிக்கை, வாகனங்களின் வகைகள் மற்றும் வேகத்திற்கு பொருத்தமானதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். ஆகவே தற்போதைய போக்குவரத்துச் சேவைகளின் கேள்விக்கு அமைவாக நாட்டின் அனைத்து பிராந்தியங்களையும் தொடர்புபடுத்தக்கூடிய வீதிக் கட்டமைப்பொன்று கட்டாயமானதாகும். நாட்டின் அனைத்து பொருளாதார மையங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் நாடு பூராகவும் 800 கி.மீ. அதிவேகப் பாதை வலையமைப்பொன்றை உருவாக்க எதிர்பார்க்கின்றது.

முன்மொழியப்பட்டுள்ள உயர் போக்குவரத்து அதிவேகப் பாதை வலயமைப்பின் கூறுகளாக பின்வரும் அதிவேகப் பாதைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.முன்மொழியப்பட்டுள்ள அதிவேகப் பாதைகளின் வரைபடம் இணைப்பு 03இல் விபரிக்கப்படுகின்றது.

2.2.1 அதிவேகப் பாதைகளின் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேகப் பாதைகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவானது இவ் அதிவேகப் பாதைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு பொருப்பாகவுள்ளது. இது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது.

அதிவேகப் பாதைகளின் ஆரம்ப திட்டமிடல், போக்குவரத்து நடவடிக்கைகளின் முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்துகை, கட்டணம் அறவிடல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுடன் பாதீடு மற்றம் கணக்காய்வு என்பனவும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

போக்குவர்த்துச் செய்யும் வாகணங்கள்

கொழும்பு - கட்டுநாயக்க, தெற்கு வெளிவட்ட அதிவேகப் பாதைகளில் பயணித்த வாகனங்களின் எண்ணிக்கையானது கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 2.2.1 மேற்கூறப்பட்ட அதிவேகப் பாதைகளில் சராசரி நாளாந்தம் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையானது ஒரு வரைபில் பின் இணைப்பு 4இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.1.1 – அதிவேகப் பாதைகளில் நாளாந்த சராசரி போக்குவர்த்து செய்யும் வாகணங்களின் எண்ணிக்கை

வருடம்	தெற்கு மற்றும் செளிவட்ட அதிவேகப் பாதைகளின் நாளாந்த சராசரி போக்குவர்த்து வாகணங்களின் எண்ணிக்கை	கட்டுநாயக்க அதிவேகப்பாதை நாளாந்த சராசரி போக்குவர்த்து வாகணங்களின் எண்ணிக்கை
2011	8,531	-
2012	9,458	-
2013	11,737	15,194
2014	19,095	18,401
2015	27,736	20,782
2016	44,384	23,974
2017	52,977	25,844
2018	60,524	27,971
2019	65,246	27,640

அட்டவணை 2.1.1.1இன்படி தெற்கு மற்றும் வெளிவட்ட சுற்று அதிவேகப் பாதைகளின் நாளாந்த சராசரி வாகனங்களின் எண்ணிக்கையானது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் 8% சதவீதத்திற்கும் மேல்

அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டில் 14 சதவீதம் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் 2019ஆம் ஆண்டின் அதிகரிப்பு வீதமானது 2018ஆம் ஆண்டின் அதிகரிப்பு வீதத்தினை விடக் குறைவானதாகும்.

அட்டவணை 2.2.1.2 – மாதாந்த வாகணப் போக்குவர்த்துகளின் செயலாற்றுகை - 2019

மாதம்	வாகணங்களின் எண்ணிக்கை	
	தெற்கு மற்றும் செளிவட்ட அதிவேகப் பாதைகள்	கட்டுநாயக்க அதிவேகப்பாதை
ஜனவரி	1,968,851	938,744
பெப்ரவரி	1,829,626	818,175
மார்ச்	2,065,081	902,457
ஏப்ரல்	1,881,299	721,590
மே	1,825,645	669,836
ஜுன்	1,859,452	743,355
ஜுலை	1,944,818	833,049
ஆகஸ்ட்	2,142,340	890,506
செப்டம்பர்	1,948,019	851,603
ஒக்ஈடாபர்	1,958,877	869,221
நொவம்பர்	1,939,430	846,093
டிசம்பர்	2,451,272	1,003,973
மொத்தம்	23,814,710	10,088,602

2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டில் கட்டுநாயக்க – கொழும்பு அதிவேகப் பாதையின் நாளாந்த சராசரி வாகனங்களின் எண்ணிக்கையானது 8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் இது 2019ஆம் ஆண்டில் ஒரு சதவீத வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களானது வெளிவட்டப் பாதையின் IIIஆம் கட்டம் திறக்கப்பட்டது. மற்றும் 2019ஆம் ஆண்டின் ஏப்ரல் 21ல் இடம்பெற்ற குண்டு வெடிப்பு என்பனவாகும்.

2019ஆம் ஆண்டில் அனைத்து அதிவேகப் பாதைகளிலும் அதிகூடிய வாகனங்களின் எண்ணிக்கையானது டிசம்பர் மாதத்தில் பதிவாகியுள்ள அதேவேலை மிகவும் குறைந்த வாகனங்களின் எண்ணிக்கையான மே மாதத்தில் பதிவாகியுள்ளது.

2018ஆம் ஆண்டில் இவ்விரண்டு மாதங்களுமே அதிகூடிய மற்றும் மிகக் குறைவான போக்குவரத்து எண்ணிக்கைகளை பதிவு செய்துள்ளது. மேற்கூறப்பட்ட அனைத்து அதிவேகப் பாதைகளிலும் ஒவ்வொரு வருட மாதாந்த போக்குவரத்து எண்ணிக்கைகளிலும் இதே போக்கினை காணலாம்

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேகப் பாதையுடன் தெற்கு மற்றும் வெளிவட்ட சுற்றுப் பாதையின் 2019ஆம் ஆண்டில் மாதாந்த போக்குவரத்து எண்ணிக்கைகளின் ஒப்பீடு பின் இணைப்பு 4 (பீ) இல் காட்டப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைக் கட்டண வருமனம்

தெற்கு மற்றும் வெளிவட்டப் பாதையின் வருமானமானது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 14 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது பெறுமதியில் 5 சதவீத வளர்ச்சியை காட்டுகின்றது.

மேற்கூறப்பட்ட அதிவேகப் பாதையின் போக்குவரத்து கட்டண வருமானமானது இவ் அதிவேகப் பாதையின் முதற் கட்டம் பொதுமக்களின் பாவணைக்காக திறக்கப்பட்ட 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012இல் பெருமளவில் அதிகரித்துள்ளது.

2012ஆம் ஆண்டின் டிசம்பர் வரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்திற்கு தெற்கு அதிவேகப் பாதை மாத்திரமே பங்களிப்புச் செய்துள்ளது. ஏனெனில் வெளிச் சுற்றுவட்டப் பாதையின் முதற்கட்டம் கொட்டாவையில் இருந்து கடுவலை வரையான பகுதியானது 2018 டிசம்பரில் திறக்கப்பட்டமையாகும்.

கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதையின் வருமானமானது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 8 சதவீதம் அதிகரித்துள்ளது. 2019ஆம் ஆண்டில் வருமானமானது 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கான காரணம் ஏற்கனவே வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.1.3 – கொழும்பு கட்டுநாயக்க வீதியின் கட்டண வருமானத்துடன் தெற்கு மற்றும் வெளிவட்ட அதிவேகப் பாதைகளின் வருமான ஒப்பீடு

வருடம்	தேற்கு மற்றும் வெளிவட்டப் பாதைகளின் கட்டண வருமானம் (ரூபா.மி)	கொழும்பு கட்டுநாயக்க அதிவெகப் பாதையின் வருமானம் (ரூபா. மி)
2011	83.19	-
2012	1,017.02	-
2013	1,256.65	282.16
2014	2,141.35	1,887.73
2015	3,128.89	2,163.27
2016	4,550.89	2,496.81
2017	5,214.20	2,606.75
2018	5,893.92	2,821.78
2019	6,192.18	2,744.82

கொழும்பு கட்டுநாயக்க பாதையானது 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பொது மக்களின் பாவணைக்காக திறந்து வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டிலிருந்து இப்பாதையின் வருமானமானது தொடர்ந்து அதிகரித்துச் சென்றுள்ளது.
இவ்விதமான தரவுகளைக் கொண்ட விளக்கம் ஒன்று பின் இணைப்பு 4சீ யில் தரப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டிற்கான கொழும்பு – கட்டுநாயக்க பாதையின் மாதாந்த வருமாணத்தினை ஆய்வு செய்யும் போது டிசம்பர் மாத்தில் அதிகூடிய வருமானத்தினையும் மே மாதத்தில் மிகக் குறைந்த வருமானத்தினையும் பதிவு செய்துள்ளது. இது தெற்கு அதிவேகப் பாதை மற்றும் கொட்டாவை – கடவத்தை வரையிலான பாதைகளின் மாதாந்த வருமானத்தை நோக்கும் போது 2019இல் டிசம்பர் மாதம் அதிகூடிய வருமானத்தினையும் ஜுன் மாதம் குறைந்த வருமானத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ் வீதிகளின் கட்டண வருமான மேலதிக விபரமானது பின் இணைப்பு 4டீ இல் காணலாம்.

அட்டவணை 2.2.1.4 அதிவேகப் பாதைகளின் செயற்பாட்டின் மூலம் 2019 ஆண்டில் கிடைக்கப் பெற்ற மாதாந்த வருமானம்.

மாதம்	தேற்கு மற்றும் வெளிவட்டப் பாதைகளின் கட்டண வருமானம் (ரூபா.மி)	கொழும்பு கட்டுநாயக்க அதிவெகப் பாதையின் வருமானம் (ரூபா. மி)
ஜனவரி	520.09	258.65
பெப்ரவரி	490.32	226.65
மார்ச்	550.50	249.90
ஏப்ரல்	508.21	198.88
மே	466.06	182.10
ஜுன்	470.94	202.05
ஜுலை	499.06	227.58
ஆகஸ்ட்	566.15	244.17
செப்டம்பர்	499.93	233.27
ஒக்டோபர்	497.21	237.86
நொவம்பர்	487.96	221.91
டிசம்பர்	635.75	261.79
மொத்தம்	6,192.18	2,744.82

2.2.2 வெளிவட்ட அதிவேகநெடுஞ்சாலை கருத்திட்டம்

கொழும்பு நகருக்கு புறநகரிலே அமைக்கப்பட்டுள்ள இவ் அதிவேகப் பாதையானது (OCH) தெற்கு அதிவேகப் பாதை, கொழும்பு – கட்டுநாயக்க அதிவேகப் பாதை மற்றும் ஏனைய தேசிய (ஏ1, ஏ3, ஏ4) வீதிய வீதிகளையும் இணைக்கின்றது.

இவ் அதிவேகப் பாதையின் மொத்த நீளமானது 29.1 கி.மீற்றர்களாகும். இது மணிக்கு 80 கி.மீ. – 100 கி.மீ வேகத்தில் வாகனங்களை செலுத்துவதற்குரிய தரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் ஓ.சீ.எச் பாதையின் நிர்மாணப் பணிகளானது 3 கட்டங்களாக இடம்பெற்றன.

- கட்டம் I கொட்டாவை கடுவலை (11 கி.மீ)
- கட்டம் IIகடுவலை – கடவத்தை (8.9 கி.மீ)
- கட்டம் III கடவத்தை – கெரவலபிட்டிய (9.3 கி.மீ)

இவ் அதிவேகப் பாதையின் கட்டம் I மற்றும் கட்டம் II ஆனது முறையே 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் மக்களுக்காக திறக்கப்பட்டது.

வெளிவட்டப் பாதையின் இரண்டாம் கட்டம் 2015ஆம் ஆண்டில் முடிவடைந்தாலும் கொந்தராத்துக் காரர்களுக்கான கொடுப்பனவுகள் 2018இல் பூரணப்படுத்தப்பட்டன. **கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய பகுதி – கட்டம் III(9.63 கி.மீ)**

வெளிவட்டப் பாதையின் மூன்றாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் நிர்மாணப் பணிகளைப் பூரணப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட காலம் 42 மாதங்களாகும். இப்பகுதியின் மொத்த நீளம் 9.63 கி. மீற்றர்களாகும். இத்திட்டமானது சீன எக்சிம் வங்கியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஐ.அ.டொ 494.03 மில்லியன் கடன் நிதியினால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

இப்பகுதியின் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றமானது பின்வரும் வகையில் சுருக்கமாக விளக்கலாம்.

உரு 2.2.2.1 பௌதீக முன்னேற்றம் - கட்டம் III



ஆட்டவனை 2.2.2.1 நிர்மாண வேலைகளின் பௌதீக மன்னேற்றம்

வருடம்	பௌதீக இலக்கு (%)	ஆடையப்பெற்ற முள்ளேற்றம் (%)	ஆடையப் பெற்ற இலக்கு %
2015	15	10	67
2016	12	1	8
2017	34	32	94
2018	50	41	82
2019	16	11	95

அனைத்து நிர்மாணப் பணிகளும் 2019ஆம் ஆண்டில் பூரணப் படுத்துவதற்க திட்டமிடப்பட்டிருந்தில் 95 சதவீதமான வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த வேலையில் இப்பகுதியானது 2019ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி பொதுமக்களின் பாவணைக்காக திறந்து வைக்கப்பட்டது. மிகுதி

வேலைகள் 2020ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டன. மத்திய அதிவேகப் பாதையுடன் தொடர்புபட்ட 500 மீற்றர் நீளமான பகுதியானது பூரணப்படுத்த வேண்டியுள்ளதோடு வேலிகள், இலத்திரனியல் கட்டண கடவைகள் என்பவற்றின் நிர்மாணப் பணிகள் 2020ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளன.

இக்கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட அனைத்து மீள் குடியமர்த்தல்களும் உள்ளக வீதிகளின் நிர்மாணப் பணிகளும் 2018ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. 2019ஆம் ஆண்டின் டிசம்பர் மாத்தில் முடிவடைந்த காலத்திற்கான நிதி ரீதியான முன்னேற்றமானது பின்வருமாறு விளக்கப்படுகின்றது.

நிதிச் செயலாற்றுகை 31.̇.12.̇.2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-03-10	2105 காணி அபிவிருத்தி	650.0	650.0	389.6
	2506 உட்கட்டமைப்பு அவிவிருத்தி	14,795.0	31,019.7	15,007.9
	மாத்தம்	**15,445.0**	**31,669.7**	**15,397.5**

திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றுகையானது 48 சதவீதமாகும். அதேவேளை உண்மையான திட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 100 சதவீத அடைவாகும். ஒதுக்கமானது அதிகரிக்கப்பட்டாலும் திறைசேரியினால் இடைக்கால கொடுப்பனவு செலவுகளுக்கான பற்றுச்சீட்டுகளை அங்கீகரிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக பதிவு செய்யப்பட்ட செலவுகளானது குறைவாகக் காணப்படுகின்றது. 2019ஆம் ஆண்டின் இறுதியின் போது இத்திட்டத்திற்கான இடைக்கால கொடுப்பனவு செலவுகளின் பெறுமதியானது ரூ. 15,504 மில்லியன்களாகும். 2018ஆம் ஆண்டின் சீராக்கப்பட்ட ஒதுக்கத்திற்கான நிதிச் செயலாற்றுகையானது 76 சதவீதமாகும். இத்திட்டத்திற்காக வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஒதுக்கங்களும் முதல் அறையாண்டிலே முழுமையாக பயன்படுத்தப்பட்டுவிட்டது. இதனால் இத்திட்டத்திற்காக 2018ஆம் ஆண்டிலும் மேலதிக நிதி ஒதுக்க நேரிட்டது.

வெளிவட்டப் பாதையின் அமைவிடம் பின் இணைப்பு 5இல் தரப்பட்டுள்ளது.

2.2.3 மத்திய அதிவேகப் நெடுஞ்சாலை

மத்திய அதிவேகப் பாதை என்பது ஏற்கனவே முன்மொழியப்பட்ட இரண்டு அதிவேகப் பாதைகளான கொழும்பு – கண்டி மற்றும் வடக்கு அதிவேகப் பாதையிற்கு அடையாளம் காணப்பட்ட அடிச்சுவட்டினதும் இணைப்பாகும். இப்புதிய இணைந்த ஏற்பாட்டினையே மத்திய அதிவேகப் பாதை என அழைக்கப்படுகின்றது.

இப்புதிய அடிச் சுவட்டுக்கான பொருளாதார சாத்திய வள ஆய்வானது மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அதேபோல் முழு அடிச் சுவட்டுக்குமான சூழல் தாக்க மதிப்பீட்டுக்கான அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

கட்டம் 1: கடவத்தை மீறிகம

இது நான்கு சுவடுகளைக் கொண்ட 37.09 கி.மீ. நீளமானதோடு கடவத்தை, கம்பஹா, வெயாங்கொடை மற்றும் மீறிகம தெற்கு ஆகிய இமாற்றல்களையும் கொண்டதாகும். இப்பிரிவானது இரண்டு கொந்தராத்து ஒப்பந்தங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. ஒப்பந்தம் பொதி I கடவத்தையில் இருந்து கொஸ்ஸின்ன வரையிலான நிரமாணப் பணிகள்.
2. ஒப்பந்தம் பொதி II கொஸ்ஸின்ன – மீறிகம வரையிலான நிர்மாணப் பணிகள்

சீன எம்.சீ.சீ. கம்பனியுடன் 2015 ஆகஸ்ட் மாதம் 2016 ஜுலை ஆகிய மாதங்களில் முறையே பொதி I மற்றும் பொதி II இற்கான நிர்மாண ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

2019ஆம் ஆண்டின் டிசம்பர் முடிவில் 36 சதவீதமான காணி சுவீகரித்தலுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டில் இது 64 சதவீதமாகக் காணப்பட்டது. 2018ஆம் ஆண்டின் உண்மையான திட்டத்துடன் ஒப்பிடுகையில் காணி சுவீகரிப்பு தொடர்பாக 30 சதவீதமான இலக்குகள் அடையப்பெற்றுள்ளன.

அனைத்து காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளும் 2019 ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டாலும் பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் பணக் கொடுப்பனவில் ஏற்பட்ட காலதாமதம் போன்ற பல்வேறுபட்ட காரணங்களால் தாமதமடைந்தது.

இவ் அதிவேகப் பாதையில் மணிக்கு 110 கி.மீ வேகத்திற்கு உரிய தரத்திற்கு வடிவமைப்பதற்காக அவசியமான முறையில் வலைவுகள் மற்றும் விஸ்தரிப்புக்களையும் உள்வாங்கக்கூடிய வகையில் வடிவமைப்பானது மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதனால் சில பகுதிகளின் காணிச் சுவீகரிப்பானது தாமதமாகியுள்ளது.

2019ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பானது நிறைவு செய்யப்பட திட்டமிடப்பட்டிருந்தாலும் முழுமையாக அடையப்பட்ட இலக்கானது 88 சதவீதமாகும். எவ்வாறாயினும் இச் செயற்பாட்டின் பௌதீக செயலாற்றுகையானது 14 சதவீதமாகும். இதற்கான பிரதான காரணம் திறைசேரியினால் போதியளவிலான கட்டுநிதி பெற்றுக் கொடுக்கப்படாமையாகும்.

இப்பகுதியின் நிர்மாணப்பணிகள் 2016ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்டாலும் 2019ஆம் ஆண்டின் இறுதியில் 5.21 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. இப்பகுதிக்கான கடன் ஒப்பந்தமானது உரிய காலப்பகுதியினுள் செய்து கொள்ளப்படாமையினால் இத்திட்டத்தின் திரண்ட செயலாற்றுகையானது 5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

திருத்தப்பட்ட நடவடிக்கைகள் திட்டத்திற்கு அமைய 2019ஆம் ஆண்டின் செயலாற்றுகை 11 சதவீதமாகும் அதேவேலை 2018ஆம் ஆண்டில் இது 18 சதவீதமாக காணப்பட்டது.

இவ்வாறாக தொடர்ந்து செயலாற்றுகையானது பின்னடைவதற்கு பிரதான காரணம் கடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில் ஏற்பட்ட காலதாமதமாகும். எவ்வாறாயினும் கடன் ஒப்பந்தமானது 2019 மார்ச் மாதத்தில் செய்து கொள்ளப்பட்டாலும் ஒப்பந்தக்காரரினால் வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக இதுவரையில் அக்கடன் ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் தற்காலிகப் பாதையின் நிர்மானப் பணிகளில் 50 சதவீதம் மற்றும் தற்காலிகப் பாலங்களின் நிர்மாணப் பணிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 14.67 கி.மீ நீளமான முன்னோடி வீதியானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் பௌதீக முன்னேற்றம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

ஆட்டவணை 2.2.3.1 – முன்னோடி வீதி நிர்மாணிப்பின் முன்னேற்றம்

அமைவிடம்	தொடர்ச்சி		நீளம் (மீ)
	இருந்து	வரை	
கலுவல	5+600	7+100	1,500
கம்பகா	9+400	10+740	1,340
கம்பகா	11+030	11+333	303
கம்பகா	11+377	13+680	2,303
பெம்முல்லா	15+520	16+550	1,030
மெகலாகொட	17+690	18+400	710
மெகலகொட	18+530	18+880	350
மெகலகொட	19+600	19+750	150
வந்துருவ	22+950	25+200	2,250
கனேகொட	29+400	32+070	2,670
இதிபரபெ	32+210	34+280	2,070
நிறைவு செய்யப்பட்ட தூரம்			14,676

- **கட்டம் 2: மீறிகம – குரநாகல**

இப்பகுதியின் மொத்த நீளம் 39.7 கி.மீற்றர்களாகும். மற்றும் மீறிகம வடக்கு, நாகலகமுவ, பொத்துகர (முறைமை இடமாறல்) தம்பொக்க, மற்றும் குருநாகல ஆகிய 5 இடமாறல்களைக் கொண்டதாகும். இத்திட்டத்திற்கான நிதியானது உள்ளுர் வங்கிகளில் இருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டின் போது இப்பிரிவின் காணிச் சுவீகரிப்பானது 87 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்திற்கு அமைய அவ்வதிவேகப் பாதை பிரிவின் காணிச் சுவீகரிப்பு அடைவானது 60 சத வீதமாகும்.

2019ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பு செயன்முறையின் பௌதீக அடைமானமானது 90 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேலை திருத்தியமைக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி 2019இல் அடையப்பட்ட இலக்கானது 33 சதவீதமாகும். இக்கால தாமதத்திற்க பிரதான காரணம் காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் 38ஆம் பிரிவின் கீழ் வர்த்தமாணி அறிவித்தல் பிரசுரிப்பது மற்றும் சில காணித்துண்டுகளை பெறுமதி மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதமாகும்.

உரு 2.2.3.1 – கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்த முழுமொத்த பௌதீக முன்னேற்றம்



2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக 76 சதவீத இலக்கினை அடையப் பெற்றுள்ளது. 2019ஆம் ஆண்டினுள் அடையப்பெற்ற சதவீதமானது 32 சதவீதமாகும்.

வரைபு 2.2.3.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கட்டம் 2இன் நிர்மாணப்பணிகளானது 2018ஆம் ஆண்டில் ஒரு துரித மற்றும் செயற்திறனான செயலாற்றுகையை காட்டுகின்ற அதேவேலை 2019ஆம் ஆண்டிலும் 2018ஆம் ஆண்டினை ஒத்த சிறப்பான செயலாற்றுகையை காட்டுகின்றது. இத்திட்டமானது நிதி ரீதியான எந்த ஒரு தடங்கல்களும் காணப்படாவிட்டால் 2019ஆம் ஆண்டில் இதனைவிடவும் சிறப்பாக செற்படுத்தப்பட்டிருக்கலாம். இன்னும் திட்டமிட்டபடி 2019ஆம் ஆண்டு ஆகஸ்டில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்திருக்கலாம்.

கட்டம் 3. பொத்துகர – கட்டம்பே

இக்கட்டத்தின் மொத்த நீளம் 32.5 கி.மீ. இது 4 சுவடுகளுடன் பொத்துகர, பொல்கஹவல, ரம்புக்கனை கலகெதர ஆகிய நான்கு இடமாற்றல்களையும் கொண்டதாகும். இத்திட்டத்தின் நிர்மாணித்தல் காலம் 3 வருடங்களாகும்.

இக்கட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றதுடன் அது 94சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



உரு 2.2.3.2 காணிச்சுவீகரிப்பின் முழு மொத்த முன்னேற்றம்

2018ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பு செயலாற்றுகையின் பௌதீக இலக்கின் அமைவானது 43 சதவீதமாகும். பல்வேறுபட்ட தடைகளின் காரணமாக இலக்குப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. 2019ஆம் ஆண்டில் இலக்குகளில் 63 சதவீதம் அடையப்பட்டுள்ளதோடு இது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறப்பானதாகும்.

இக்கட்டத்திற்கான நிதியீட்ட மூலமானது இன்னும் உறுதியாக நிர்மாணிக்கப்படாமையினால் நிர்மாணப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் ஜப்பானிய தய்சே கோப்ரேசனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதுடன் நிர்மாணப் பணிகளின் மேற்பார்வைக்கான ஒப்பந்தமானது ஜப்பானிய கட்டாகிரா இஞ்ஜீனியரிங் இன்டர்நஷனல் நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்க தீர்மானித்தாலும் அதற்கான ஒப்பந்தம் இதுவரை செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் இரண்டு ஒப்பந்தங்களையும் 2020 மார்ச் இல் வழங்குவதற்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீள் குடியமர்த்தல் நடவடிக்கை திட்டம் மற்றும் விரிவான நீரியியல் தொடர்பான ஆய்வும் பூரணமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கட்டம் 4 - குருநாகல் - தம்புள்ளை

இவ்வதிவேகப் பாதை பிரிவின் மொத்த நீளம் 60.3 கி.மீற்றர்களாகும். ரிதீகம, மல்சிரிபுற, கலேவல, தம்புள்ள (ஏ009) மற்றும் தம்புள்ள (ஏ006) ஆகிய 05 இட மாற்றல்களையும் கொண்ட 4 சுவட்டு அதிவேகப் பாதையாகும்.

இப்பகுதிக்கான சாத்திய வள ஆய்வானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதோடு சூழல் தாக்க மதிப்பீடும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டில் 16 சதவீதமான காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2018 ஆண்டின் இலக்கானது 40 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டின் முடிவில் காணிச் சுவீகரிப்பு பௌதீகச் செயலாற்றுகையின் அடைவானது 64 சதவீதமாகும்.
எவ்வாறாயினும் 2019ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பு செயன்முறையானது 40 சதவீத முன்னேற்றத்த அடைந்துள்ளதுடன் அது 2019 ஆம் ஆண்டின் இலக்கானது 20 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் அடையப்பட்ட பௌதீக ரீதியான திரண்ட முன்னேற்றமானது 75 சதவீதமாகும். மத்திய அதிவேகப் பாதையின் 2018ஆம் ஆண்டின் அடையப் பெறுவதற்கு இலக்கிடப்பட்ட முன்னேற்றத்தில் 97 சதவீதம் அடையப்பெற்ற அதேவேலை 2019ஆம் ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதியில் 86 சதவீத முன்னேற்றத்தை காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் கருத்திட்டமானது மூன்று காலாண்டுகளாக நிதியியல் முன்னேற்றத்தைக் காட்டினாலும் இது 2018ஆம் ஆண்டினை விடக் குறைவானதாகும்.

நிதிச் செயலாற்றுகை 31.12.2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-03-7	2105 காணி &காணி அபிவிருத்தி	3,000.0	2,850.0	2480.0
	2506 உட்கட்டமைப்ப அபிவிருத்தி	10,180.0	476.0	394.19
	மொத்தம்	**13,180.0**	**3,326.0**	**2,874.19**

மத்திய அதிவேகப் பாதையின் வரைபடம் பின் இணைப்பு 6இல் காட்டப்பட்டுள்ளது.

2.2.4 தெற்கு அதிவேகப் பாதையின் விரிவாக்கம்

தெற்கு அதிவேகப் பாதையை மாத்தறையில் இருந்து ஹம்பாந்தோட்டை வரை விரிவாக்குவது தென்மாகாணத்தின் வீதிக் கட்டமைப்பு அபிவிருத்தியின் ஒரு முக்கிய அங்கமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பிரதான நோக்கமாவது ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தலை சர்வதேச விமான நிலையத்தை இலங்கையின் வர்த்தக தலைநகரமான கொழும்புடன் இணைப்பதாகும்.

இத்திட்டமானது 2015ஆம் ஆண்டு ஜுலை மாதம் நான்காம் திகதி சீன எக்சிம் வங்கியின் ரூபா 171.52 பில்லியன் கடன் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாதையின் மொத்த நீளம் 96கி.மீ ஆகும். இது கொடகம, நாகொட, அப்பரெக்க, பெலிஅத்த, கஸாகல, அங்குனுகொலபொஸ்ஸ, பரவக்கும்புற, சூரியவெவ, மத்தல, ஹம்பாந்தோட்டை,அந்தரவவ ஆகிய 10 இட மாற்றல்களையும் கொண்டதாகும். இவ் தெற்கு அதிவேகப் பாதையின் விரிவாக்கலானது பின்வருமாறு நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

பகுதி 1 : மாத்தளை – பெலிஅத்த 0.0 கி.மீ – 30.0 கி.மீ

இப்பகுதியின் நிர்மாணப் பணிகளானது 2016ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. அது 2020 ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்யப்பட இருக்கின்றது. இத்திட்டத்தின் அமுலாக்கல் காலம் 42 மாதங்களாக பின்னர் திருத்தியமைக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டில் இப்பகுதியின் பௌதீக செயலாற்றுகையானது 82 சதவீதம் என பதிவு செய்யப்பட்டிருந்தாலும் நிர்மாணங்களுக்கான அளவு பட்டியலிற்கு (BOQ) திருத்தத்திற்கு சமாந்தரமாக செயலாற்றுகையானது திருத்தப்பட்டபோது அது 2018 டிசம்பர் முடிவில் 86 சதவீதமாகக் காணப்பட்டது.

2019ஆம் ஆண்டின் இறுதியின் போது இப்பாதையின் நிர்மாணப்பணிகளில் 99 சதவீதம் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. திருத்தியமைக்கப்பட்ட நடவடிக்கை திட்டமிடலின்படி இலக்கிடப்பட்ட அடைவானது 94 சதவீதமாகும். அதேபோல் இது 2018ஆம் ஆண்டின் திருத்திய திட்டத்தின்படி 80 சதவீதமாகக் காணப்படல் வேண்டும்.



உரு 2.2.4.1 நிர்மாண வேலைகளின் முழுமொத்த பௌதீக முன்னேற்றம் - கட்டம் I

- **கட்டம் 2 : பெலிஅத்த வட்டிய 30கி.மீ – 56.0கி.மீ**

தெற்கு அதிவேகப் பாதையின் கட்டம் 2 ஆனது பெலிஅத்தையில் இருந்து வட்டிய வரையில் நீடிக்கப்பட்டது. இதன் தூரம் 26கி.மீற்றர்களாகும். இப்பகுதியின் நிர்மாணப் பணிகளானது 2016ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டின் டிசம்பர் முடிவில் அடையப்பட்ட திரண்ட முன்னேற்றம் 89 சதவீதமாகும். இத்திட்டமானது 2020 ஏப்ரல் மாதத்தில் பூரணப்படுத்தப்படவுள்ளது.



உரு 2.2.4.2 கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முழுமொத்த பௌதீக முன்னேற்றம்

காணிச் சுவீகரிப்பின் செயலாற்றுகையானது 2018ஆம் ஆண்டின் இறுதியில் 99 சதவீதமாகக் காணப்பட்டதோடு அது 2019ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டது.

- **கட்டம் 3 : வெடிய – அந்தரவெவ (56.0 கி.மி – 71.0கி.மி)**

இக்கட்டத்தின் நிர்மாணப் பணிகளானது 2016 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. இது 2020இல் பூரணப்படுத்தப்படவுள்ளது. இதன் மொத்த நீளம் 15 கி.மீற்றர்களாகும். 2017ஆம் ஆண்டின் டிசம்பரில் முழுமொத்த செயலாற்றுகையானது 45 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டில் டிசம்பர் 31இன் போது மேலதிகமாக 44 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடைந்தது. ஆகவே இக்கட்டத்தின் மொத்த பௌதீக முன்னேற்றமானது 2018 டிசம்பர் 31இல் 89 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அடையப்பட வேண்டிய இலக்கானது 51 சதவீதமாகும். எவ்வாறாயினும் 2018ஆம் ஆண்டில் அடையப்பட்ட இலக்கானது 86 சதவீதமாகும்.

2019 ஆண்டின் இறுதியின் போது நிர்மாணப் பணிகளில் 99 சதவீதம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. இது திருத்தியமைக்கப்பட்ட நடவடிக்கை திட்டத்தில் இலக்கிடப்பட்ட 100 சதவீதத்திற்கு எதிரானதாகும்.



உரு 2.2.4.3 - கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முழுமொத்த பௌதீக முன்னேற்றம்

கட்டம் 4 : மத்தளையிலிருந்து அந்தரவவயினூடாக ஹம்பாந்தோட்டை 71.0கி.மீ – 96.0 கி.மீ

இக்கட்டத்தின் நிர்மாணப் பணிகளானது உண்மையில் 2016ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. 2019 ஜனவரியில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும். இவ் 25 கி.மீற்றர்களையும் நிறைவு செய்வதற்கு மேற்கூறப்பட்ட காலக்கெடுவானது 2020 வரை நீடிக்கப்பட்டது.

2019 டிசம்பர் முடிவின் போது முழுமொத்த பௌதீக செயலாற்றுகையானது 98.5 சதவீதமாகும். 2019 ஆண்டில் 12.5 சதவீத முன்னேற்றம் மாத்திரமே அடையப்பெற்றது. 2018ஆம் ஆண்டினுள் அடையப்பெற்ற முன்னேற்றமானது 24 சதவீதமாகும். 2018 ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற முழுமொத்த முன்னேற்றமானது 86 சதவீதமாகும். திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின் படியான 2018, 2019ஆம் ஆண்டுகளிலான இலக்குபடுத்தப்பட்ட அடைவானது முறையே 83 சதவீதம் மற்றும் 89 சதவீதமாகும்.



உரு 2.2.4.4 திருத்தப்பட்ட திட்டத்தின் படி இலக்கின் அடைவு

கீழ்வரும் இரண்டு நடவடிக்கைத் தவிர ஏனைய அனைத்து பௌதீக நிர்மாண நடவடிக்கைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் 2017ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.

நடவடிக்கை	ஊண்மையான முன்னேற்றம் (%)
ஏபீசீ மேற்பரப்பு	99.9%
ஆஸ்போல்ட் வேலை	99.8%

இதிட்டத்தின் 2019இல் நிதிச் செயலாற்றுகையானது 46 சதவீதமாகும். அனைத்துக் கட்டங்களுக்குமான ஆரம்ப கொடுப்பனவு செலவுகளானது அங்கீகரிக்கப்படாமையினால் இவ் அறிக்கையில் வரை எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட செலவுத் தொகையில் அண்ணளவாக ரூபா 39 பில்லியன் பெறுமதியான செலவுகளானது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட காலப்பகுதியில் திட்டத்தின் பௌதீக செயலாற்றுகையானது எவ்வித தடைகளின்றி ஒழுங்காக இடம்பெற்றாலும் நிதி செயலாற்றுகையானது மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்றுள்ளது.

நிதிச் செயலாஙற்றுகை31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-03-09	2105 காணி டு காணி அபிவிருத்தி	850.0	850.0	729.9
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	31,850.0	79,631.0	36,213.4
	மொத்தம்	**32,700.0**	**80,481.0**	**36,943.3**

தெற்கு அதிவேகப்பாதையின் ஒரு வரைபடம் பின் இணைப்பு 7இல் தரப்பட்டுள்ளது.

2.2.5 புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான மேல் உயர்த்தப்பட்ட வான்வெளி நெடுஞ்சாலை

இராஜகிரியவினூடாக புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான மேல் உயர்த்தப்பட்ட வான்வெளி நெடுஞ்சாலையின் வடிவமைப்பு வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பிரதான நோக்கமாவது மெட்ரோ கொழும்பு பிராந்தியத்தில் காணப்படும் வாகன நெரிசலுக்கு தீர்வு காண்பதாகும். இவ்வீதியை பயன்படுத்துவோர் தெமட்டகொட, இராஜகிரிய, பாராளுமன்ற நுழைவு, பத்தரமுல்லை மற்றும் கொஸ்வத்த இடமாற்றல்களின் மூலம் இப்பாதைக்கு நுழையலாம். இத்திட்டமானது அரச தனியார் பங்குபற்றலுடன் (BOT) அமுல்படுத்தப் படவுள்ளது.

இத்திட்டமானது இரண்டு பகுதிகளாக அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்திற்காக முதற்கட்டமானது புதிய களனி பாலத்திலிருந்து இராஜகிரிய வரையில் நான்கு சுவடுகளுடன் 6.9 கி.மீ தூரத்தைக் கொண்டதாகும். இரண்டாவது பகுதியானது இராஜகிரியவிலிருந்து அத்துருகிரிய உள் வெளிவட்டப் பாதையுடன் இணைக்கப்படுகின்றது. இப்பகுதியின் நீளம் 10.4 கி.மீ.

இப்பாதையானது வாகனப் பாவனையாளர் மணிக்கு 80 – 100 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்படுவதனால் வீதிப் பயனாளர்கள் களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரியவிற்கு 18 நிமிடங்களில் பிரயாணம் செய்யலாம்.

முதற் கட்டத்துக்கான சாத்தியவள ஆய்வானது பூரணப்படுத்தப்பட்டுள்ளது. காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. 2019ஆம் ஆண்டில் நிள அளவைநடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டில் நிள அளவை நடவடிக்கைகளில் 20 சதவீதமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

முதற் கட்டத்துக்கான முதலீட்டாளர் தெரிவின் 52 சதவீதம் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2019ஆம் ஆண்டிலும் இதே நிலைமையே காணப்பட்டது. இந்நிலைமைக்கான பிரதான காரணம் ஆர்வத்தை வெளிப்படுத்தல் கோரப்பட்டதன் பின்பு முன்மொழிவுகளுக்கான கோரிக்கையானது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுவினால் அது அங்கீகரிக்கப்படாமையினால் முன்மொழிவுக்கான கோரிக்கை வெளியிடப்படவில்லை.

2018ஆம் ஆண்டின் நடவடிக்கை திட்டத்தின்படி காணிச் சுவீகரிப்பு செயன்முறையின் 90 சதவீதம் நிறைவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. ஆனால் 22 சதவீதம் மட்டுமே அடையப்பட்டது.

2019ஆம் ஆண்டிற்கான காணிச் சுவீகரிப்பு இலக்கானது 70 சதவீதமாகும். வருட இறுதியில் பதிவு செய்யப்பட்டிருந்தது முன்னேற்றமானது 7 சதவீதம் மட்டுமேயாகும். இக்குறைந்த முன்னேற்றத்துக்கான பிரதான காரணம் காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 38இன் கீழ் வர்த்தமானியில் பிரசுரிப்பது மற்றும் போதுமான கட்டு நிதி கிடைக்கப் பெறாமையாகும்.

முதற் கட்டத்திற்கான மீள் குடியமர்த்தல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் காணி சுவீகரிப்பு முன்மொழிவு என்பன காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.



உரு 2.2.5.1 காணிச் சுவீகரிப்பின் முன்னேற்றம்

இரண்டாம் கட்டத்திற்கான சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்காக ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளின் முன்னேற்றமானது 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் முறையே 20 மற்றும் 100 சதவீதமாகும். இரண்டாம் கட்டத்திற்கான சாத்தியவள ஆய்வானது 2019ஆம் ஆண்டின் முடிவில் பூரணப்படுத்தப்பட்டது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-03-15	2105 காணி டு காணி அபிவிருத்தி	100.0	16.0	12.0
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	125.0	112.0	107.2
	மொத்தம்	**225.0**	**128.0**	**119.2**

2018ஆம் ஆண்டின் நிதி ரீதியான முன்னேற்றமானது 47 சதவீதமாகும். அது 2019ஆம் ஆண்டில் 93 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை திட்டத்தின்படி நிதிச் செலவுகளுக்கான இலக்கானது ரூபா 225 மில்லியன்களாகும். கடைசி சில மாதங்களின் போது ஒதுக்கமானது குறைக்கப்பட்டமையினால் திட்டமிட்டதன்படி காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்த

முடியவில்லை. 2018ஆம் ஆண்டிலும் மேற்கூறிய காரணங்களினால் காணிச் சுவீகரிப்பு செயன்முறையானது பாதிக்கப்பட்டது.

2.2.6 துறைமுக நுழைவு மேல் உயர்த்தப்பட்ட வான்வெளி நெடுஞ்சாலை

வாகனப் பாவனையாளர்களுக்கு திறனான மற்றும் துரிதமான போக்குவரத்து சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் துறைமுக நுழைவு வான்வழிப் பாதையானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியானது ரூபா. 36,500 மில்லியன்களை கடன் உதவியாக வழங்குவதற்கு இணங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் பின்வருமாறு:

- இத்தூன்களின் மீதான வான்வழிப் பாதையானது புதிய களனிப் பாலத்தில் ஆரம்பித்து காலி முகத்திடலில் முடிவடையும்.
- கொழும்புத் துறைமுகத்தினுள் காணப்படும் சில கட்டிடங்களை இடமாற்றல்.
- தூண்களின் மீதான வான்வழிப் பாதைக்கு இணையொத்ததாக தரைமட்டத்தில் ஆறு சுவடுகளைக் கொண்டதோடு வீதி.

இத்திட்டத்தின் மூலம் கொல்களன் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்தானது மிகவும் வினைத்திறனாக இடம்பெறும். ஏனெனில் மெட்றோ கொழும்பு பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேசங்களின் வாகன நெரிசலானது மிகவும் குறைவடையும்.

இதற்கு மேலதிகமாக இப்புதிய தொடர்பினூடாக கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கிடையில் கொழும்பு துறைமுகத்தை மையமாகக் கொண்டு சரக்கு மற்றும் கொல்களன் போக்குவரத்து மற்றும் சேவை நகர்த்தலானது மேலும் மேம்படுத்தப்படும். 2018ஆம் ஆண்டின் இறுதியில் நிர்மாணித்தல் ஒப்பந்தக்காரர் பெறுகை மற்றும் உசாத்துணையாளர் பெறுகையின் முன்னேற்றமானது முறையே 40 மற்றும் 35 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டின் முடிவில் உசாத்துணையாளர் மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரரின் பெறுகைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.5.1 - இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 31/12/2019 உள்ளவாறு

நடவடிக்கை	திட்டமிடப்பட்ட இலக்கு	உண்மையான முன்னேற்றம்
துறைமுக நுழைவு தூண்களின் மீதான வான் வழிப்பாதை	10%	3%
துறைமுக வசதியளிப்பு மத்திய நிலையத்தின் பைலிங் வேலைகள்	100%	84%
நிர்மாணப்பணிகளின் மேற்பார்வை	10%	3%
துறைமுக மத்திய நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் மேற்பார்வை	100%	70%

நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தமானது 2019 ஆகஸ்டில் கையளிக்கப்பட்டதோடு நிர்மாணப் பணிகள் செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்டன.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-02-03-16	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	3,550.8	7,050.8	4,302.6
	Total	3,550.8	7,050.8	4,302.6

இத்திட்டத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகையானது 95 சதவீதமாகும். கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் தரப்பட்ட 2019ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றுகையானது மேலே தரப்பட்டுள்ளது. மேல் தரப்பட்டுள்ள தொகையானது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும். அதாவது நிர்மாணப் பணிகளுக்கான முற்பண கொடுப்பனவு ரூபா 3.89 பில்லியன் மற்றும் பைலிங் வேலைகளுக்கான முன்னேற்றக் கொடுப்பனவானரூபா 0.36 பில்லியன்

உள்ளடக்கியதாகும். வருட இறுதியில் கொடுப்பனவுகள் நிறைவு செய்யப்பட்டாலும் திறைசேரி செயற்படுத்தல் திணைக்களத்தினால் இன்னும் கணக்கீடு செய்யப்படவில்லை.

2.2.7 ருவன்புற அதிவேகப் பாதை

கஹதுடுவையில் இருந்து பெல்மதுல்லைக்கான முன்மொழியப்பட்டுள்ள அதிவேகப் பாதையின் நீளம் 74 கி.மீற்றர்களாகும். இவ் அதிவேகப் பாதையை நிர்மானிப்பதன் நோக்கமாவது சப்ரகமுவ மாகாணத்துடன் மேல் மற்றும் தென் மாகாணங்களின் தொடர்பினை மேம்படுத்தி இம்மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்து வசதிகள், தொடர்பு மற்றும் அணுகலை அதிகரிப்பதாகும்.

இத்திட்டமானது 3 கட்டங்களாக அமுல்படுத்தப்படவுள்ளன. அவை பின்வருமாறு:

கட்டம் 1: கஹதுடுவ - இங்கிரிய 0.00கி.மீ – 26.30கி.மீ

இவ் அதிவேகப் பாதையின் மொத்த நீளமானது 26.30கி.மீ ஆகும். கஹதுடுவ, ஹொரண, மற்றும் இங்கிரிய ஆகிய மூன்று இடமாற்றல்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டம் 2: இங்கிரிய - இரத்தினபுரி 26.30கி.மீ – 52.50கி.மீ

இரண்டாவது கட்டமானது இங்கிரியவில் இருந்து இரத்தினபுரி வரை 26.2கி.மீ நீளமானதாகும். இது கிரியல்ல, குருவிட்ட இரத்தினபுரி வீதியில் மூன்று இடமாற்றல்களைக் கொண்டிருக்கும். இதற்கு மேலதிகமாக இப்பகுதியினுள் 6 சுரங்கப் பாதைப் பகுதிகளும் உள்ளடங்கும்.

கட்டம் 3: இரத்தினபுரி – பெல்மதுல்ல 52.5கி.மீ – 73.90கி.மீ

ருவன்புர அதிவேகப் பாதையின் மூன்றாம் பகுதியானது இரத்தினபுரியில் இருந்து பெல்மதுல்லை வரையாகும். இதன் மூலம் 21.4 கி.மீ.

பொருளாதார நலன்கள்

இம் முன்மொழியப்பட்டுள்ள அதிவேகப் பாதையினை நிர்மாணிப்பதன் மூலம் இப்பிராந்தியத்தின் பிரதான கைத்தொழிலான மாணிக்ககல் கைத்தொழில், ஏற்றுமதி கைத்தொழிலான தேயிலை என்பவற்றை மேம்படுத்துவதோடு மற்றும் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வழிவகுக்கும். இப்பிராந்தியத்தின் காணிகளுக்கான விலை பெருமளவில் அதிகரிப்பதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும்.

2019ஆம் ஆண்டின் இறுதியில் சாத்தியவள ஆய்வானது நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, சூழல் தாக்க மதிப்பீடானது 99 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி மாத்திரம் பெறவேண்டியுள்ளது. முதற் கட்டத்திற்கான பெருகைகளின் 70 சதவீதமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் பெருகைகள் தொடர்பான செயலாற்றுகையானது 2018ஆம் ஆண்டில் இருந்து எவ்வித முன்னேற்றமும் இன்றி காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணமாவது 2009ஆம் ஆண்டு இறுதி வரையிலும் இத்திட்டத்திற்கான நிதியீட்டம் தொடர்பான எந்தவிதமான இறுதி முடிவும் எடுக்கப்படாமையாகும்.

இத்திட்டத்திற்கான காணிச் சுவீகரிப்பு செயற்படுத்தலானது 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதியின் போது 20 சதவீதம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. நடவடிக்கைத் திட்டத்தின்படி 2018ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளில் 5 சதவீதம் நிறைவு செய்யப்படுவதே இலக்காகும்.

காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்கான வருடத்திற்கான இலக்கில் 74 சதவீதம் அடையப்பெற்றிருந்த அதேவேலை பௌதீக செயலாற்றுகையானது 4.5 சதவீதம் அளவே 2019ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளின் முழு மொத்த முன்னேற்றமானது 27 சதவீதமாகும்.

கருத்திட்ட முகாமைத்துவ அலகானது மூன்று கட்டங்களுக்குமான காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்குமாக அமைக்கப்பட்டாலும் இத்திட்டத்திற்கான நிதி மூலமானது இதுவரை தீர்மானிக்கப்படாமையினால் முதலாம் கட்டத்திற்கு மாத்திரமான காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-02-03-13	2105 காணி டூ காணி அபிவிருத்தி	50.0	15.0	9.35
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	50.0	36.0	35.0
	Total	**100.0**	**51.0**	**43.35**

2019ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகையானது 93 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டில் இது 84 சதவீதமாகும். திருத்தியமைக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி நிதி இலக்குகளுக்கு எதிராக 2019 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்றுள்ள முன்னேற்றமானது சிறப்பாக காணப்படுகின்றது.

இவ் அதிவேக நெடுஞ்சாலையின் வரைபடம் பிண்இணைப்பு 08 தரப்பட்டுள்ளது.

அதிவேகப் பாதை அபிவிருத்தி செயலாற்றுகையின் சாராம்சம்

2018ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் காணப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை வலயமைப்பானது 189.13கி.மீ ஆகும். இது கொழும்பு – கட்டுநாயக்க, தெற்கு மற்றும் கொட்டாவ – கடவத்த வரையிலான வெளிவட்டப் பாதை ஆகிய அதிவேகப் பாதைகள் பொதுமக்களுக்கு திறனான போக்குவரத்து வசதியினை வழங்குகின்றன.

2019ஆம் ஆண்டின் போது துறைமுக நுழைவு தூண்களின் மீதான வான்வழிப் பாதையின் நிர்மாணப் பணிகளானது செப்டம்பர் மாத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரையிலான 9.63கி.மீ வெளிவட்டப் பாதையானது பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. வெளிவட்டப் பாதையானது பொது மக்களின் பாவணைக்கு திறக்கப்பட்டாலும் அதன் சில பகுதிகளின் நிர்மாணப் பணிகளானது 2020ஆம் வருடத்தினுள் நிறைவு செய்யப்படும்.

மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டமானது 2019ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் இத்திட்டத்திற்கு நிதியீட்டம் உள்ளூர் வங்கிகளின் கடன்களுக்கான திறைசேரி உத்தரவாதத்தை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் சில மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டதோடு மற்றும் போதுமான கட்டு நிதி கிடைக்கப் பெறாமையினால் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளும் தடைப்பட்டன.

இதற்கு மேலதிகமாக 2019ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தெற்கு அதிவேகப் பாதை விரிவாக்கலின் 38கி.மீ பகுதி பொது மக்களின் பாவணைக்காக திறக்கப்பட்டன. இதனால் நாட்டின் அதிவேகப் பாதை வலயமைப்பு 217கி.மீ.களாக உயர்வடைந்தது.

அதிவேக நெடுங்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

இல	கருத்திட்டத்தின் பெயர்	31/12/2017 இல் திரண்ட பௌதீக முன்னேற்றம்	2018		2019		31/12/2019 இல் திரண்ட பௌதீக முன்னேற்றம
			முழுமொத்த பௌதீக இலக்கு		முழுமொத்த பௌதீக இலக்கு	முழுமொத்த பௌதீக இலக்கு	
1	மத்திய அதிவேகப்பாதை	காணிச்சுவீகரிப்பு செய்முறை					
		கட்டம் 1-80% கட்டம் 2-64% கட்டம 3-71% கட்டம 4--8%	கட்டம் 1-20% கட்டம் 2--45% கட்டம 3--30% கட்டம 4-40%	கட்டம் 1 -06% கட்டம் 2--23% கட்டம 3--13% கட்டம 4-15%	கட்டம் 1-14% கட்டம் 2--09% கட்டம 3--16% கட்டம 4 -20%	கட்டம் 1-2% கட்டம் 2--03% கட்டம 3-10% கட்டம 4-8.75%	கட்டம் 1-88% கட்டம் 2--90% கட்டம 3--94% கட்டம 4-74.75%
		நிர்மாண வேலைகள்					
		கட்டம் 1 - 01% கட்டம் 2-07%	கட்டம் 1 - 25% கட்டம் 2-50%	கட்டம் 1 – 4% கட்டம் 2 – 45%	கட்டம் 1 – 20% கட்டம் 2 – 42%	கட்டம் 1 – 0.21% கட்டம் 2 – 32%	கட்டம் 1 – 5.21% கட்டம் 2 - 84%
2	றெகு அதிவேகப்பாதை நீடிப்பு	கட்டம் 1 - 52%.	கட்டம் 1-42%	கட்டம்1-34%	கட்டம்1-14%	கட்டம் - 13%	கட்டம் 1-99%
		கட்டம்2-29%	கட்டம் 2-46%	கட்டம் 2-25%	கட்டம் 2-39%	கட்டம் 2-28%	கட்டம் 2-89%
		கட்டம் 3-45%	கட்டம் 3-51%	கட்டம் 3-44%	கட்டம்3-11%	கட்டம் 3-10%	கட்டம் 3-99%
		கட்டம் 4-43%	கட்டம் 4-50%	கட்டம் 4-41%	கட்டம் 4-16%	கட்டம் 4-15.86%	கட்டம் 4-98.5%
3	கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரையில் வெளிவட்டப் பாதை நீடிப்பு	43%	50%	41%	16%	11%	95%
4	கொழும்பு இரத்தினபுரி – பெல்மதுல்லை அதிவேகப்பாதை	ர்ணிச ' சுவீகரிப்பு செயன்முறை ற18%	ாணிச் சுவீகரிப்பு செயன்முறை- 40%	ர்ணிச சுவீகரிப்பு செயன்முறை - 2%	ர்ணிச ' சுவீகரிப்பு செயன்முறை ற– 8%	ாணிச் சுவீகரிப்பு செயன்முறை- 7%,	ர்ணிச ' சுவீகரிப்பு செயன்முறை ற- 27%,

இல	கருத்திட்டத்தின் பெயர்	31/12/2017 இல் திரண்ட பௌதீக முள்னேற்றம்	2018		2019		31/12/2019 இல் திரண்ட பௌதீக முள்னேற்றம
			முழுமொத்த பௌதீக இலக்கு	முழுமொத்த பௌதீக இலக்கு	முழுமொத்த பௌதீக இலக்கு	முழுமொத்த பௌதீக இலக்கு	
5	புதிய களினிப்பாலத்தில் இருந்து அத்துருகிரிய வரை தூண்களின் மீதான வான் வழிப்பாதை		காணிச் சுவீகரிப்பு - 10%	காணிச் சுவீகரிப்பு செயன்முறை -90%	காணிச் சுவீகரிப்பு செயன்முறை - கட்டம் I - 10%	நில அளவை கட்டம் I- 70%	காணிச் சுவீகரிப்பு செயன்முறை - 7%
		முதலீட்டாளரைத் தெரிவு செய்தல் கட்டம் I 50%	முதலீட்டாளரைத் தெரிவு செய்தல் கட்டம் I 50%	முதலீட்டாளரைத் தெரிவு செய்தல் கட்டம் I 02%	முதலீட்டாளரைத் தெரிவு செய்தல் கட்டம் I 48%	முதலீட்டாளரைத் தெரிவு செய்தல் கட்டம் I 0%	முதலீட்டாளரைத் தெரிவு செய்தல் கட்டம் I 70%
6	துறைமுக நுழைவு தூண்களின் மீதான வான் வழிப்பாதை			விரிவான வடிவமைப்பு -70%	நிர்மாண வேலைகள் 10% விரிவான வடிவமைப்பு – 30%	நிர்மாண வேலைகள்03% விரிவான வடிவமைப்பு 30%	நிர்மாண வேலைகள்03% விரிவான வடிவமைப்பு 100%

2.3 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

2.3.1 தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

இலங்கையில் காணப்படும் ஏ மற்றும் பீ தர வீதிகள் அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைகள் வலயமைப்புக்குள் காணப்படும் வீதிகளாகும். இவற்றை அபிவிருத்தி செய்து பராமரிப்பது நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும். ஒவ்வொரு வகை நெடுஞ்சாலைகளினதும் நீளமானது கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

ஆட்டவணை 2.3.1.1இலங்கையில் தேசிய நெடுஞ்சாலைகளின் வலயமைப்பு

வீதியின் வகை	மொத்த தூரம் (கிமீ)
‘ஏ’வகுப்பு நெடுஞ்சாலை	4,215
‘பீ’வகுப்பு நெடுஞ்சாலை	8,005
அதிவேகப்பாதை	217.8
மோத்தம்	12,437.8

ஆட்டவணை2.3.1.2 – ஏ தர மற்றும் பீ தர தேசிய செடுஞ்சாலைகளின் மாகாண மட்டத்திலான பரம்பல் - 2019

ீமாகாணம்	தேசிய வீதி (கி.மீ)		
	ஏ’ தர வீதிகள்	பீ’ தர வீதிகள்	மோத்தம்
மேல்	374.48	1,229.82	1,604.30
மத்திய	408.57	1,338.41	1,746.98
தெற்கு	346.88	1,154.36	1,501.24
வடக்கு	734.49	524.97	1,259.46
கிழக்கு	619.55	551.13	1,170.68
வடமேல்	352.43	1,002.75	1,355.18
வட மத்திய	492.04	701.74	1,193.78
ஊவா	471.04	693.19	1,164.23
சப்ரகமுவ	415.57	808.58	1,224.15
மொத்தம்	4,215.05	8,004.95	12,220.0

வடமாகாணம் அதிகூடிய ஏ தர வீதிகளைக் கொண்டிருப்பதோடு தென் மாகாணம் மிகவும் குறைந்த அளவிலான ஏ தர வீதிகளைக் கொண்டுள்ளது. அதேபோல் மத்திய மாகாணமானது மிகவும் கூடிய பீ தர பாதைகளைக் கொண்டிருப்பதோடு மிகவும் குறைந்த அளவிலான பீ தர வீதிகள் வட மாகாணத்திலேயே காணப்படுகின்றன.

நெடுஞ்சாலைகளின் நிர்மாணம்/ மீள் நிர்மாணம் என்பவற்றின் போது அதன் மேற்பரப்பின் வகையை அடிப்படையாகக் கொண்டு தேசிய வீதி வலயமைப்பை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

ஆட்டவணை2.3.1.3–நெடுஞ்சாலைகளின் மேற்பரப்பின் வகையின் பரம்பல்

மேற்பரப்பின் வகை	தூரம் (கி.மீ)	பங்களிப்பின் வீதம்
ஆஸ்போல்ட் கொங்ரீட்	8272.3	72.1%
மேற்பரப்பு மூடல்	141.7	1.2%
ஊடுருவல் கப்பிச்சாலை	2896.5	25.3%
கொங்கிரீட்	98.2	0.9%
மண் (கிரவல்)	60.2	0.5%

அதிகூடியளவான வீதிகளின் மேற்பரப்பானது அஸ்போல்ட் கொங்கிரீட் ஆகவும் மிகவும் குறைந்தளவிலான வீதிகளே மண் பாதைகளாகவும் காணப்படுகின்றது.

தேசிய வீதி வலயமைப்பின் நிலைமை

உள்ளூர் வங்கிகள் மற்றும் வெளிநாட்டுக் கடன் நிதியுதவியுடன் 47.73கி.மீ தூரமான நெடுஞ்சாலை புனரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டதோடு இன்னும் 1,050 கி.மீ வீதிகளின் மேம்படுத்தல் வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு மேலதிகமாக இவ்வருட காலப்பகுதியில் வெளிநாட்டு நிதியுதவியுடன் 12 பாலங்கள் புனரமைக்கப்பட்டதோடு உள்நாட்டு வங்கிக் கடனில் 10 பாலங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டில் 267.2 கி.மீ தேசிய வீதிகளின் மேம்படுத்தல் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு 167.2 கி.மீ கிராமிய வீதிகளும் இக்காலப்பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இவ்வருட இறுதியில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 24 பாலங்கள் மேம்படுத்தப்பட்டன.இதற்கு மேலதிகமாக 2019ஆம் ஆண்டின் இறுதியின் போது நாட்டில் காணப்படும் அதிவேக நெடுஞ்சாலைகளின் வலயமைப்பானது 169.8 கி.மீ இருந்து 217.8 கி.மீ வரை விரிவாக்கப்பட்டுள்ளது. இதன்படி 2019ஆம் ஆண்டு இறுதியில் நாட்டின் தேசிய வீதி கட்டமைப்பானது 12347.8 கி.மீ வரை உயர்வடைந்துள்ளது.

2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏ மற்றும் பீ தர நெடுஞ்சாலைகளின் தூரமானது மாற்றமடையவில்லை. இவ்வறிக்கை காலத்திலும் அது ஒரே அளவாகக் காணப்படுகின்றது. 2018ஆம் ஆண்டில் பீ தர வீதிகளின் தூரமானது 10கி.மீ அதிகரித்தது. இவ்வாறு பீ தரத்திற்கு மேம்படுத்தப்பட்ட வீதிகள் கீழே அட்டவணையில் தரதப்பட்டுள்ளன (2.3.1.4).

அட்டவணையில் முதலாவதாக தரப்பட்டுள்ள வீதியானது முழுமையாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதியாக காணப்படுவதோடு ஏனைய இரண்டு வீதிகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத வீதிகளாகும். அவைகள் தரமுயர்த்தப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதிகளின் இருப்புக்கு உள்ளவாங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3.1.4–2018 இல் 'பீ' தர வீதி வலயமைப்பிற்கு உள்வாங்கப்பட்ட புதிய

வகை இல	வீதியின் பெயர்	தூரம்(கி.மீ)
1	பெலவத்தை பாதுகாப்புத் தலைமையகத்திற்கான நுழைவுப்பாதை (பீ642)	1.255
2	கேகாலை நகர மாற்றுப் பாதை (பீ643)	4.400
3	களனிமுள்ள-அங்கொடை-கொஸ்வத்தை வீதி (பீ644)	4.567

வீதிகள்

இலங்கையில் நிறைவு செய்யப்பட்ட மற்றும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வீதிகள் உள்ளடக்கப்பட்ட வரைபடம் பின் இணைப்பு 09 தரப்பட்டுள்ளது.

2.3.2 வீதிகளையும் பாலங்களையும் பராமரித்தல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாடுபூராகவும் 12,220 கி.மீ நெடுஞ்சாலைகள், 4660 பாலங்கள் மற்றும் 12 வான் பாலங்களையும் பராமரித்து வருகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண பணிப்பாளர்கள், பிரதான பொருளியலாளர்கள் மற்றும் நிறைவேற்று பொருளியலாளர்கள் வருடாந்த வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாளாந்த, பருவகால, மற்றும் உடனடியான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள் தார் ஊற்றி மணலினால் மூடுதல், சிறிய சிறிய ஓட்டைகளை அடைத்தல், வீதி ஓர சந்துகளை நிர்மாணித்தல், வீதிகளை மேம்படுத்தல், சமிக்ஞை விளக்குகள் மற்றும் வீதி சமிக்ஞைகளை அடையாளம் இடல் போன்ற பல்வேறுபட்ட பராமரிப்பு நடவடிக்கைகளை நாடுபூராகவும் மேற்கொள்கின்றது.

2018ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையில் 227.2கி.மீ தூரமான வீதியானது தார் ஊற்றி மேற்பரப்பு மணலினால்.'. சிறிய கற்களினால் மீள் நிரப்பப்பட்டது. இந்நடவடிக்கையானது நேரடி வேலையாளர்களால் மற்றும் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக 130,45 கி.மீ வீதியின் மேற்பரப்பானது மீள் அஸ்போல்ட் இடப்பட்டு சீர்செய்யப்பட்டது. இம்முறையின் கீழ் 2018ஆம் ஆண்டில் புணர்நிர்மாணம் செய்யப்பட்ட வீதிகளின் மொத்த நீளம் 357.65 கி.மீ. ஆகும்.

அட்டவணை 2.3.2.1 — 2019 இல் மாகாண மட்டத்தில்வீதிப் பராமரிப்பின் பௌதீக முன்னேற்றம்

மாகாணம	31/12/2019 ,இல் தூரம் கி.மீ.
மேல்	**77.43**
மத்திய	**178.53**
தெற்கு	**3.08**
வடக்கு	**28.66**
கிழக்கு	**2.28**
கிழக்கு (அக்கறைப்பற்று)	**-**
வடமேல்	**37.85**
வடமத்திய	**2.00**
ஊவா	**1.35**
சப்ரகமுவ	**26.45**
மொத்தம்	**357.63**

2019ஆம் ஆண்டு மொத்தமாக 481 கி.மீ வீதியானது மேற்பரப்பு மீள் சீராக்கம் செய்யப்பட்டது. அதில் 357.63கி.மீ தார் இடப்பட்டு மணலினால் மேற்பரப்பு மூடப்பட்டதாகும். 2018ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணத்திலே அதிகூடிய வீதிகள் பல்வேறு முறைகளைக் கொண்டு திருத்தி பராமரிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் இது மத்திய மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.



உரு 2.3.2.1 –மாகாண மட்டத்தில் மணலினால் மூடி திருத்தப்பட்ட வீதிகளின் தூர்ரம் கி.மீ - 2019

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-01	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	5,000.0	5,000.0	4,961.3
	மொத்தம்	**5,000.0**	**5,000.0**	**4,961.3**

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இதே போல் குறைந்த அளவிலான வீதிப் பராமரிப்பானது கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளதுடன், இதில் 2019ஆம் ஆண்டின் பராமரிப்பு நீளமானது 2018ஆம் வருடத்தினை விடக் குறைவானதாகும்.

2018 மற்றும் 2019 ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதியின் இந்நிகழ்ச்சித்திட்டத்தினால் அடையப்பெற்ற நிதிச் செயலாற்றுகையானது முறையே 81 சதவீதம் மற்றும் 99 சதவீதமாகும். இன் நிகழ்ச்சித்திட்டத்தின் உண்மையான நடவடிக்கை திட்டத்தின் இலக்கினை அடையப்பெற்றுள்ளது.

2.3.3 வலயமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு

வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறப்பான வலயமைப்பு திட்டமிடலை மேம்படுத்தும் நோக்கில் இது ஒரு வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தேசிய வீதிக் கட்டமைப்பில் பெருமளவிலான வாகன விபத்துக்கள் இடம்பெருகின்றமையினால் வீதிப் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் பிரிவின் வலயமைப்பு திட்டமிடல் பிரிவு மற்றும்

வீதிப்பாதுகாப்பு அலகானது இத்திட்டத்தினை அமுல்படுத்தும் பொறுப்பை கொண்டுள்ளது. இப்பகுதியின் நோக்கமாவது வீதி வலயமைப்பானது ஆபத்துக்கள் அற்ற மற்றும் பயணிகள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு பாதுகாப்பான வீதியாக காணப்படுவதை உறுதி செய்வதாகும்.

வீதிப் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பொலீசாரின் வேண்டுகோல்களுக்கு அமைவாக தேசிய வீதிக் கட்டமைப்பில் உருவாகும் முன்னுரிமைகளின் அடிப்படையில் வருடாந்தம் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி கட்டுப்பாடுகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் காணப்படும் மனித வளப் பற்றாக்குறை என்பவற்றின் காரணமாக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயலாற்றுகையானது கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை2.3.3.1வலயமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு திட்டத்தின் கீழான பிரதான நடிவடிக்கைகள்

இலக்கம்	நடவடிக்கை	அடைவு	%
01	தேசிய நெடுஞ்சாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருவி பொருத்துதல்	100 நேகிழக்கூடிய பொல்லார்ட்ஸ் பொருத்தப்பட்டது	100%
02	அபாயகரமான இடங்கள் மற்றும் கறும்புள்ளி இடங்களை மேம்படுத்தல்	மீபே - இங்கிரிய வீதி	100%
03	ஊயர் தொழிநுடப போக்குவர்த்து போக்குவர்த்த எச்சரிக்கை முறைமை பொருத்துதல்	ஜயவர்தனபுர வைத்தியசாலை வீதி	100%
04	பாடசாலைகள் மற்றும் கைத்தொழில் வலயங்களுக்கு அண்மையில் வீதிப் பாதுகாப்பை அதிகரித்தல்	5பாடசாலைகள் மற்றம் வலயங்கள் தெரிவு செய்யப்பட்டு சமிக்ஞை பதாகைகள் பொருத்தப்பட்டன	100%
05	பேலிக்கன் கடவைகள் பொருத்துதல்	களுத்துறை மகாவித்யாலயத்திற்கு அண்மையில்	100%

இப்பிரதான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக 2019இல் பாதசாரிகள் பாதுகாப்பு மேம்பாடு, கைப்பிடிகள், பொருத்துதல், பாதுகாப்பு மேம்பாடுகள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞை பதாகைகள் மற்றும் வீதிகளில் அடையாளமிடல் மற்றும் மத்துகம நிழக்கீழ் கடவைக்கான இடவியல் ஆய்வு மற்றும் அளவைகள் மேற்கொள்ளப்பட்டன.

2019இல் இத்திட்டத்தின் நிதி செயலாற்றுகையானது 31 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டின் முடிவில் இது 86 சதவீதமாகப் பதியப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் ரூபா 17 மில்லியன் பெறுமதியான வேலைகள் செய்யப்பட்டிருந்தாலும் பதிவு செய்யப்பட்டுள்ள செலவுகளின் பெறுமதியானது ரூ. 7.73 மில்லியன். ஆகவே இந்நிகழ்ச்சித்திட்டமானது எதிர்பார்த்த இலக்கினைவிட அதிகமாக செயலாற்றியுள்ளது. மேற்கூறப்பட்ட வித்தியாசத்திற்கு காரணம் பற்றுச்சீட்டுகளுக்கு பணம் செலத்துவதில் ஏற்பட்ட காலதாமதம் பிரதான காரணமாகும்.

நிதி செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-2-4-21	2506- உட்கட்டமைப்பு அபிவிருத்தி	25.0	25.0	7.73
மொத்தம்		25.0	25.0	7.73

2.3.4 வாகன போக்குவரத்து முகாமை

இக்கருத்திட்டமானது ஒரு வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக அமுல் படுத்தப்படுகின்றது. இதன் மூலம் தேசிய நெடுஞ்சாலைகளில் பிரதான சந்திகளில் வாகன நெரிசலை குறைத்தல், மற்றும் விபத்துக்களை தவிர்த்தல் மற்றும் வைத்தியசாலைகள், பாடசாலைகள், பொது இடங்கள் போன்ற இடங்களில் பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அமுல்படுத்தப்படுகின்றது. இது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெடுஞ்சாலைகள் வடிவமைப்பு பிரிவின் வாகனப் போக்குவரத்து முகாமை அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் அகினால் பின்வரும் இரண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- போக்குவரத்து சமிக்ஞைகளை புனரமைத்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அடையாளமிடல்.
- போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்ட குறுக்கு வெட்டு சந்திகளை வடிவமைத்தல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்

இத்திட்டத்தின் கீழ் 2019ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

- கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி சந்தியில் போக்குவரத்து சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டது.
- காத்தான்குடியில் பெலிக்கன் கடவை
- காலி பஸ்தரிப்பு நிலைய சந்தியில் சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டமை.
- கந்தானை சந்தியில் சமிக்ஞை விளக்கு பொருத்தப்பட்டது.
- அக்கரைப்பற்று தள வைத்தியசாலைக்கு முன்பு பெலிக்கன் கடவை.
- கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக பெலிக்கன் கடவை.
- கொழும்பு – காலி வீதியில் இரத்மலானை சந்தியில் சமிக்ஞை விளக்கு முறைமை பொருத்துதல்.
- கொழும்பு – காலி வீதியில் அங்குலானை சொய்சாபுர சந்தியில் சமிக்ஞை விளக்கு முறைமையை மேம்படுத்தல்.
- கல்கிஸ்ஸை நீதிமன்றத்திற்கு அண்மையில் பெலிக்கன் கடவை.
- ஹொரனை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் பெலிக்கன் கடவை.

களனிய பல்கலைக்கழகத்திற்கு முன்பாக பெலிக்கன் கடவை வரைதல் நடவடிக்கையானது 2019ஆம் ஆண்டில் 4ஆம் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 12 நடவடிக்கைகள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டாலும் போதுமான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாமையினால் 11 நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டன.

அதே போல் பொல்துவ சந்தி மற்றும் அதுல்கோட்டை சந்தி ஆகிய இடங்களில் சமிக்ஞை விளக்கு முறைமைகள் பொருத்தும் நடவடிக்கையானது 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவில்லை. இத்திட்டமானது 2019ஆம் ஆண்டின் முடிவில் 31 சதவீத

முன்னேற்றத்தை எய்தியது. 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் குறைந்தளவிலான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தமையினால் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியானது வேறு திட்டங்களுக்கு மாற்றப்பட்டது. முடிவுறுத்தப்பட்ட வேலைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய கையில் உள்ள பற்றுச்சீட்டுகளின் பெறுமதியானது ரூபா 20 மில்லியனாகும்.

இதற்கு மாற்றமாக 2018ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியானது ரூபா 25 மில்லியன்களாகும். சென்ற பல வருடங்களில் செலுத்தபடாமல் கையில் உள்ள பற்றுச்சீட்டுகளுக்கான நிலுவைகளை செலுத்துவதற்காக வேண்டி திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இத் தொகையானது 66 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-2-4-22	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	100.0	64.0	20.0
	மொத்தம்	**100.0**	**64.0**	**20.0**

2.3.5 பேராதெனிய – செங்கலடி – பதுளை வீதி புனரமைப்பு (ஏ 5) திட்டம்

இலங்கை அரசாங்கமானது ஊவா மாகாணத்தின் பதுளையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் செங்கலடி வரை 147கி.மீ தூரமான பேராதனை – பதுளை – செங்கலடி வீதியினை 2 சுவடுகள் கொண்ட வீதியாக புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான மொத்தக் முதலீடு ஐ.அ.டொ. 140 மில்லியன்களாகும். இக்கருத்திட்டத்திற்கான கடன் நிதியினை அபிவிருத்திக்கான சவூதி நிதியம் (SDF) மற்றும் அபிவிருத்திக்கான ஒபெக் சர்வதேச நிதியம் (OFID) என்பன சமமாக ஐ.அ.டொ. 60 மில்லியன்களை வழங்குவதற்கு இணங்கியுள்ளது. மீதி நிதியினை ஐ.அ.டொ. 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும்.

இது 3 வருட கருத்திட்டமாகும். பதுளை செங்கலடி நெடுஞ்சாலைத் திட்டமானது இரண்டு கூறுகளைக் கொண்ட ஆறு கொந்தராத்துப் பொதிகளைக் கொண்டதாகும்.

சவூதி அபிவிருத்தி நிதியின் கீழ் புனர்நிர்மாண கொந்தராத்துப் பொதிகள் *(கூறு 'ஏ')*		
பொதி 1	**பிபில்லை – பதியதலாவை வரை**	**29 km**
பொதி 2	**புதியதலாவை – தம்பிடிய**	**30 km**
பொதி 3	**தம்பிடிய – செங்கலடி**	**27.8 km**
ஒபிட் நிதியின் கீழ் புனர்நிர்மாண கொந்தராத்துப் பொதிகள் *(கூறு 'பீ')*		
பொதி 1	**பதுளை – பஸ்ஸர**	**20 km**
பொதி 2	**பஸ்ஸர - லுனுகல**	**21 km**
பொதி 3	**லுனுகல – பிபில்லை**	**19 km**

அட்டவணை 2.3.5.1 பேராதனை – பதுளை – செங்கலடி கருத்திட்டத்தின் கீழ் வீதிப் புனர்நிர்மாண கொந்தராத்துப் பொதிகள்

அபிவிருத்திக்கான சவூதி நிதியின் கீழான கொந்தராத்து ஒப்பந்தங்களின் முன்னேற்றம்.

பொதி 1 மற்றும் பொதி 2இன் நிர்மாணப் பணிகள் 2018ஆம் ஆண்டு ஜுலையில் ஆரம்பமாகியது. 2018ஆம் ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 3 சதவீத முன்னேற்றத்தை பதிவு செய்தது. பொதி 3இன் நிர்மாணப் பணிகளானது 2018 இறுதி வரை ஆரம்பிக்கப்படவில்லை. 2019ஆம் ஆண்டின் இறுதியில் மூன்று பொதிகளுக்குமான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அக்காலப்பகுதியில் 50 சதவீத முன்னேற்றத்தை அடைந்திருந்தது.



உரு 2.3.5.1 – சவூதி அபிவிருத்தி நிதியின் கீழான பொதிகளின் திரண்ட பௌதீக முன்னேற்றம்

2018ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலப்பகுதியில் 90 சதவீத திரண்ட பௌதீக செயலாற்றுகையை பதிவு செய்ததோடு 2019ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்பு இலக்கானது 33 சதவீதமாகும்.

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் மூலமான கொந்தராத்து பொதிகளின் முன்னேற்றம்.

2018ஆம் ஆண்டின் இறுதியின் போது மூன்று பொதிகளும் 37 சதவீத முன்னேற்றத்தை காட்டியது. இது 2019இல் 55 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டது.

இதனுடன் தொடர்புபட்ட காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளானது 2017 ஜுன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு அது 2019ஆம் ஆண்டு இறுதியில் மூன்று பொதிகளுக்குமான திரண்ட பௌதீக முன்னேற்றமாக 89 சதவீதத்தை பதிவு செய்துள்ளது. இது மூன்று வருடங்களுக்குமான இலக்குப்படுத்தப்பட்ட அடைவானது 45 சதவீதமாகும்.



உரு 2.3.5.2 – ஒபிட் நிதியின் கீழான பொதிகளின் திரண்ட பௌதீக முன்னேற்றம்

எவ்வாறாயினும் நிதி இலக்குகளின் அடைவு மட்டமானது 2019ஆம் ஆண்டில 3 சதவீதத்தினால் பின்தங்கியுள்ளது. இவ்வருட காலப்பகுதியில் பதியப்பட்ட செலவுகளானது ரூபா 1013.3 மில்லியன்களாகும். இக்காலப்பகுதிக்கான ஒதுக்கீடானது மீள் சீராக்கம் செய்யப்பட்ட பின்பும் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளானது அதிகமாகக் காணப்பட்டது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் 31?12/2019 (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-02-04-41(ஒபிட்)	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	300.0	100.0	100.0
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	1,250.0	1,888.0	1,089.3
	உப மொத்தம்	**1,550.0**	**1,988.0**	**1,189.3**

நிதிச் செயலாற்றுகை 31.12.2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-23 (சவூதி நிதி)	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	200.0	25.0	9.0
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	2,000.0	1,867.0	1,004.3
	உப மொத்தம்	**2,200.0**	**1,892.0**	**1,013.3**

ஒபிட் நிதியத்தின் மூலமான பகுதிகளின் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகையானது முறையே 60 மற்றும் 81 சதவீதங்களாகும். 2019ஆம் ஆண்டின் முடிவில் செலுத்தப்பட வேண்டிய பற்றுச்சீட்டுக்களாகரூபா 99 மி 31 டிசம்பர் 2019 இல் செலுத்தப்படவேண்டியுள்ளது.

இத்திட்டத்தின் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளபடியான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை முறையே 57 சதவீத மற்றம் 72 சதவீதமாகும்.

இத்திட்டத்தின் அமைவிடம் தொடர்பான வரைபடம் இணைப்பு 10இல் தரப்பட்டுள்ளது.

2.3.6 அபிவிருத்திக்கான சவூதி நிதியிலான வீதி வலயமைப்பு அபிவிருத்தி

இலங்கை அரசாங்கமானது அடையாளம் காணப்பட்ட மொத்தமாக 79கி.மீ தூரத்தைக் கொண்ட 6 வீதிப் பகுதிகளை மேம்படுத்தி புனரமைப்புச் செய்வதற்காக சவூதி அபிவிருத்தி நிதியிலிருந்து ஐ.அ.டொ 60 மில்லியன்களை கடனாகப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் பிரதான நோக்கம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிப் பகுதிகளை புனரமைத்து

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

தேசிய நெடுஞ்சாலைகள் வலயமைப்பை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2013 ஜுன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டமானது 2015 டிசம்பரில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தக்காரர்களுக்கான பட்டியலகளுக்கான கொடுப்பனவு செயன்முறையானது 2016ஆம் ஆண்டு வரை இடம்பெற்றது.

அட்டவணை 2.3.6.1 வீதி வலயமைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள்

கருத்திட்டத்தின் விபரம்	தூரம் (கி.மீ)
‘ஏ’ 09 நெடுஞ்சாலையில் கட்டுகஸ்த்தொட்ட – அலவத்துகொட பகுதி	10.9
‘ஏ’ 09 நெடுஞ்சாலையில அலவத்துகொடை – பலாபத்வல பகுதி	16.9
‘ஏ’ 09 நெடுஞ்சாலையில் பலாபத்வெல – நாஉல பகுதி	21.6
‘பீ’ 541 வீதியில் தம்பளகாமம் - கிண்ணியா பகுதி	8.5
‘பீ’93 வீதியில் தெகிஓவிட – தெரனியபல பகுதி	14.0
‘ஏ’ நெடுஞ்சாலையில் பேலியகொடையிலிருந்து – கிரிபத்கொடை வரை	7.2
மொத்தம்	79.1

இவ்வீதிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதற்கு பின்பு இக்கடனில் மீதமாகக் காணப்பட்ட தொகையைப் பயன்படுத்தி 2018ஆம் ஆண்டு பின்வரும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன.

- ஏ009 வீதிப் பிரிவில் 53+740கி.மீ இருந்து 58+00 வரையில் நாவுலை நகர அபிவிருத்தி.
- ஒருகொடவத்தை அம்பத்தலை வீதியில் பால இலக்கம் 4/3 புனரமைப்புச் செய்யப்பட்டது.

- ஒருகொடவத்தை – அம்பத்தலை வீதியில் பால இலக்கம் 6/1 புனரமைக்கப்பட்டது.
- ஒருகொடவத்தை அம்பத்தலை வீதியில் பால இலக்கம் 6/2 புனரமைக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டின் சீராக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி 2018ஆம் ஆண்டின் பௌதீக இலக்கானது அடையப்படவில்லை.

2019ஆம் ஆண்டின் இறுதியின் போது மேற்கூறப்பட்ட யாழ்ப்பாணம் - கண்டி ஏ009 வீதியின் நாஉல நகர அபிவிருத்தி உட்பட ஏ009 வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் 63 சதவீத பௌதீக செயலாற்றுகையை பதிவு செய்தது. திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி அடையப்பட வேண்டிய இலக்கானது 42 சதவீதமாகும். எவ்வாறாயினும் இந் நடவடிக்கையானது 100 சதவீதத்திற்கும் மேற்பட்ட செயலாற்றுகையை பதிவு செய்தது.

2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒருகொடவத்தை அம்பத்தலை வீதியில் உள்ள பால இலக்கங்களான இலக்கம் 4/3, 6/2, மற்றும் 6/2 ஆகிய மூன்று பாலங்களினதும் பௌதீக முன்னேற்றமானது முறையே 11, 12 மற்றும் 0.2 சதவீதங்களாகும்.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-29	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	260.0	500.8	225.4
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	0.0	7.8	7.8
	மொத்தம்	**260.0**	**508.5**	**233.2**

இத்திட்டத்தின் 2019ஆம் ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகையானது 46 சதவீதமாகும். இது 2018ஆம் ஆண்டில் 28 சதவீதமாகும். கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் பதிவு செய்யப்பட்ட பதிவுகளுக்கமைய 2019இல் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியானது ரூபா 501 மில்லியனகளாகும். இதன் அடிப்படையில் கருத்திட்டமானது திட்டமிடப்பட்டதன்படி நிதி இலக்கினை அடையப்பெற்றுள்ளது.

2.3.7 வடக்கு வீதித் தொடர்பு கருத்திட்டம் (மேலதிக நிதியீட்டம்)

வடக்கு வீதித் தொடர்பு கருத்திட்டமானது நிறைவு செய்யப்பட்டதன் பின்பு ஆசிய அபிவிருத்தி வங்கியானது இத்திட்டத்திற்காக மேலதிக நிதியினையும் பெற்றுக் கொடுத்தது. அம்மேலதிக நிதியீட்டத்துடன் இத்திட்டத்தின் அதிகரிக்கப்பட்ட வெளியீடானது வடமாகாணம் மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள 61.2கி.மீ ஏ தர வீதி மற்றும் 56.2கி.மீ பீ தர வீதிகளை உள்ளடக்கியதாக அண்ணளவாக 118கி.மீ தூரத்திலான வீதிகளை புனரமைப்புச் செய்வதாகும்.

ஒட்டுமொத்த கருத்திட்ட செயலாற்றுகையானது சிறப்பானதாகும். 2015ஆம் ஆண்டின் முடிவில் 9 பொதிகளுக்குமான அனைத்து நிர்மாணப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டிருந்ததோடு தற்போது அவை நிர்மாணத்திற்கு பிந்திய குறைபாடுகளுக்கான பொறுப்புக்காலத்தில் மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான பராமரிப்புக் காலத்தில் உள்ளது.

அட்டவணை 2.3.7.1 வடக்கு வீதித்தொடர்பு கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியின் கீழ் புனரமைப்புச்செய்யப்பட்ட மற்றும் புனரமைப்புச்செய்யப்படுகின்ற வீதிகள்

வீதியின் பெயர்	தூரம் (கி.மீ)
வவுனியா ஹொரவப்பத்தானை வீதி ('ஏ'029)(24+000 கிமீ–34+950 கி.மீ)	10.95
மதவாச்சிய கெபதிகொல்லாவவீதி ('பீ' 283) (0+000 கி.மீ– 12+600 கி.மீ)	12.60
மதவாச்சிய கெபதிகொல்லாவவீதி ('பீ' 283) (12+600 கி.மீ –25+400 கி.மீ)	12.80
கபதிகொல்லாவ – பதவிய வீதி ('பீ'211) (0+000 கி.மீ – 15+500 கி.மீ)	15.50
கபதிகொல்லாவ – பதவிய வீதி (பீ211) (15+500 கி.மீ – 31+35 கி.மீ)	15.85
மதவாச்சிய – மன்னார் - தலைமன்னார் நெடுஞ்சாலை (ஏ014) (47+100 கி.மீ– 62+100 கி.மீ)	15.10
மதவாச்சிய – மன்னார் - தலைமன்னார் நெடுஞ்சாலை (ஏ014) (62+100 கி.மீ– 76+500 கி.மீ)	14.40
யாழ்பானம் - பன்னை – ஊர்காவற்துறை வீதி(ஏபி' 019) (0+000 – 10+000 கி.மீ)	10.00
யாழ்பானம் - பன்னை – ஊர்காவற்துறை வீதி(ஏபி' 019) (10+000 கி.மீ – 20+27 கி.மீ)	10.27
'ஏ'09 கண்டி – யாழ்ப்பானம் வீதி (வேலைகள் தொடர்கின்றன)	9.3

இவ் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவியில் கிடைக்கப்பெற்ற சேமிப்பினைப் பயன்படுத்தி ஏ009 கண்டி யாழ்ப்பாணம் வீதியின் (141 + 100கி.மீ –150 +400கி.மீ) புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டின் முடிவில் 100 சதவீதம் பூரனப்படுத்தப்பட்டது. 2018ஆம் ஆண்டில் சம்பூரணமாக நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் ஒரு சதவீதம் நிறைவு செய்யப்படவிருந்தது.

மதவச்சிய – ஹொரவப்பொத்தானை வீதியின் (பீ282) நிர்மாணப் பணிகளானது 2019 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வருட இறுதியின் போது அப்பாதைகளின் பகுதிகளான 10+000கி.மீ இருந்து 23+000கி.மீ வரையிலான பகுதி 58 சதவீத பௌதீக முன்னேற்றத்தையும் 23+000கி.மீ இருந்து 37+000கி.மீ வரையான பகுதியானது 64 சதவீத முன்னேற்றத்தையும் அடையப் பெற்றிருந்தது. 2019ஆம் ஆண்டின் முடிவில் இரு பகுதிகளினதும் அடையப்பட்ட இலக்கானது 100 சதவீதமாகும்.

நிதிச் செயலாற்றுகை 31.12.2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-02-04-30	2506 உட்கட்டமை அபிவிருத்தி	306.0	1,011.5	545.9
	மொத்தம்	**306.0**	**1,011.5**	**545.9**

2019ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றுகையானது 54 சதவீதம் ஆகும். மற்றும் 2018ஆம் ஆண்டில் 86 சதவீதமாகும். இவ்வருட காலப்பகுதியில் இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கமானது ரூபா 1011.5 மில் ஆகும். இக்காலப்பகுதியில் ரூபா 890 மில்லியன் பெருமதியான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக முகாமைத்துவ அலகினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2.3.8 அதிவேகப்பாதை தொடர்புகளை மேம்படுத்தல் திட்டம்

இத்திட்டமானது தெற்கு வீதி தொடர்பு கருத்திட்டத்தின் ஒரு கூறாகும். இத்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேகப்பாதை தொடர்பினை மேம்படுத்துவதற்கான திட்டமிடல் இயலளவினை மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்தலுக்கான தயார் நிலையினை உறுதிப்படுத்துவதாகும். திட்டத்திற்கான அமுல்படுத்தல் காலம் 2014 – 2019.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.அ.டொ. 5 மில். கடன் உதவி பெற்றுக் கொடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் தாக்கமானது, தென் பிராந்தியத்தில் வினைத்திறனான வீதிப் போக்குவரத்து வலயமைப்பை ஏற்படுத்துவதாகும். தென் பிராந்தியத்தின் உள்ளூர் வீதி வலயமைப்பு மற்றும் அதிவேகப் பாதை வலயமைப்புக்கும் இடையில் மேம்படுத்தப்பட்ட தொடர்பே இத்திட்டத்தின் வெளியீடாகும்.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

1. தேசிய நெடுஞ்சாலைகளை அதிவேகப்பாதைகளுடன் தொடர்புபடுத்துவதற்கான கருத்திட்டங்களை அடையாளம் காணல், சாத்திய வள ஆய்வு மற்றும் விரிவான பொறியியல் வடிவமைப்பு போன்றவற்றிற்கான உசாத்துணை சேவைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கேசீஜ – கோசீசீ ஜேவீ அஸோஸியேட்.
2. போக்குவரத்து திட்டமிடலுக்கான தனிநபர் ஆலோசகர் (சர்வதேசம்)
3. நெடுஞ்சாலை பொருளியலாளர் தனிநபர் ஆலோசகர் (சர்வதேசம்)
4. பாலங்கள் மற்றும் கட்டமைப்பு பொருளியலாளர். துனிநபர் ஆலோசகர் (சர்வதேசம்)
5. நெடுஞ்சாலை பொருளியலாளர் தனிநபர் ஆலோசகர் (சர்வதேசம்)
6. பாலங்கள்/ கட்டமைப்பு பொருளியலாளர் தனிநபர் ஆலோசகர் (சர்வதேசம்)
7. வாகன போக்குவரத்து திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல் ஆய்வுக்கான தனிநபர் ஆலோசகர்.
8. போக்குவரத்து திட்டமிடல் தனிநபர் ஆலோசகர் (சர்வதேசம்)

2016ஆம் ஆண்டின் இறுதியில் நடவடிக்கைகள் 1-5 வரையில் 100 சதவீதம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2018ஆம் ஆண்டின் இறுதியில் நடவடிக்கை இலக்கம் 7 முழுமையாக நிறைவு செய்யப்பட்டதுடன் இலக்கம் 06 மற்றும் 08 என்பன 90 சதவீத பௌதீக முன்னேற்றத்தை காட்டியது. 2019இன் இரண்டாம் காலாண்டில் மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டன.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-42	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	54.0	19.0	18.25
	மொத்தம்	**54.0**	**19.0**	**18.25**

2018 மற்றும் 2019ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகையானது முறையே 61 சதவீதம் மற்றும் 96 சதவீதமாகும். 2018 மற்றும் 2019 ஆண்டுக்கான செலவுகள் எதிர்பார்த்த வகையில் அறிக்கையிடப்படவில்லை.

2.3.9 வீதி வலயமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம்.

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியமானது இத்திட்டத்திற்கு ஐ.அ.டொ 40 மில்லியன்களை பெற்றுக் கொடுத்தது. இத்திட்டத்தின் கீழ் 37கி.மீ தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்தவும் பொல்கஹவெல – கேகாலை வீதியில் மாஓயாவுக்கு குறுக்காகச் செல்லும் 3/2 இலக்கம் கொண்ட பாலத்தையும் புனர்நிர்மாணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கமாவது நெடுஞ்சாலைகளின் இயலளவை மேம்படுத்தி வாகன செயற்படுத்துகை கிரயத்தினை குறைத்தல் மற்றும் அப்பிராந்தியங்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தையும் மட்டத்தையும் உயர்த்துதல்.

இறுதியில் இது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும். உடனடியாக அமுல்படுத்தும் வகையில் 4 கொந்தராத்து ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. அனைத்து ஒப்பந்தங்களும் நிறைவு செய்யப்பட்டன. இக்கடனில் கிடைக்கப்பெற்ற சேமிப்பை பயன்படுத்தி 2017ஆம் ஆண்டில் ஏ005 பேராதெனிய – பதுளை – செங்கலடி வீதியில் 2.63கி.மீ பகுதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட வீதிப் புனரமைப்பு நடவடிக்கையில் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையே 5 சதவீதம் மற்றும் 35 சதவீதம் முன்னேற்றம் அடையப் பெற்றிருந்தது. 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி அடையப்பட வேண்டிய இலக்கானது 58 சதவீதமாகும். எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டில் அடையப்பெற்ற உண்மையான இலக்கானது 7 சதவீதமாகும்.

2019ஆம் ஆண்டின் முடிவில் இப்பகுதியானது 57 சதவீத திரண்ட பௌதீக முன்னேற்றத்தை காட்டியுள்ளதுடன் இவ்வருட காலப்பகுதியில் மாத்திரம் 27 சதவீத முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது. திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி இலக்குப்படுத்தப்பட்ட அடைவு மட்டமானது 40 சதவீதமாகும்.

ஆட்டவணை 2.3.9.1 வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வீதிகள் மற்றும் பாலங்கள் புனரமைப்பு

கருத்திட்டத்தின் விபரம்	தூரம் (கி.மீ)	31/12/2019 உள்ள படி பௌதீக முன்னேற்றம்
இரக்வானை–மாதம்பெ வீதி	**14.0**	பூரணப்படுத்தப்பட்டது
ஏகலியகொடை-தெகியோவிட்ட வீதி	**17.0**	
அதுல்கோட்டை- கொகுவல வீதி	**6 .0**	
பொல்கஹவல-கேகாலை வீதியில் 3/2 இலக்க பாலத்தை புனரமைப்பு	**120.4மீ (1 பாலம்)**	
பேராதனை-பதுள்ளை-செங்கலடி வீதி	**2.63**	**57%**

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரு.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ருபா.மி) 31?12/2019	செலவு (ரு.மி)
117-02-04-31	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	225.0	146.0	84.7
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	25.0	25.0	23.2
	மொத்தம்	**250.0**	**171.0**	**107.9**

2019ஆம் ஆண்டில் இத்திட்டமானது 63 சதவீத நிதிச் செயலாற்றுகையை அடையப் பெற்றது. 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு ஒதுக்கத்தின் அடிப்படையில் 53 சதவீத செயலாற்றுகையை அடையப் பெற்றது. இவ்வளவு குறைந்த செயலாற்றுகைக்கான காரணம் ஒப்பந்தக் காரரின் மந்தகதியான செயலாற்றுகையாகும்.

2.3.10 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டம்.

இலங்கை அரசாங்கமானது சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியிலிருந்து கொழும்பு மாவட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக கடன் உதவியைப் பெற்றுக் கொண்டது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கொழும்பு மாவட்டத்தின் தேசிய நெடுஞ்சாலை வலயமைப்பினை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் அதிகூடிய வாகன நெரிசல் உள்ள வீதிகளில் வாகன நெரிசல் காரணமாக வீணாக்கப்படும் நேரத்தைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதாகும்.

இத்திட்டத்தின் பொதி 1இன் கீழ் நாவலை – நுகேகொடை வீதியில் உள்ள நாவல பாலத்தின் புனர் நிர்மானப் பணிகள் 2015ஆம்

ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 01-05 வரையான நடவடிக்கைகள் 2016 ஜுலையாகும் போது நிறைவு செய்யப்பட்டன.

2018 மற்றும் 2019 ஆண்டு காலப்பகுதியில் கீழே அட்டவணையில் உள்ள நடவடிக்கைகளில் இலக்கம் 08, 10 மற்றும் கட்டம் 11 இன் இலக்கம் 11, 12, 13 ஆகிய வீதிப் பகுதிகளின் புனரமைப்புக்கு அவசியமான காணிச் சுவீகரிப்பானது இடம்பெற்றுக் கொண்டிருந்தது. காணிச் சுவீகரிப்பில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக கருத்திட்ட அமுல்படுத்தலும் தாமதமடைந்தது. இலக்கம் 09 வீதியின் தரத்தை கருத்திற் கொண்டு அமுல்படுத்துவது என தீர்மாணிக்கப்பட்டது.

ஆட்டவணை 2.3.10.1 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைப்பச்செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வீதிகள்

வ.இ	வீதியின் பெயர்	தூரம்(கி.மீ)
01	ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய சாலை நுழைவுப்பாதை	1.4
02	தெமடகொடை வெல்லம்பிடிய வீதி	1.9
03	வெலிகடை கொகிலவத்தை வீதி	6.0
04	கொலன்னாவை யக்காபத்த வீதி	2.4
05	மட்டக்குளிய மத்திய வீதி	1.0
06	கொட்டாவ தலகல வீதி	14.4
07	கோட்டே போப்பே வீதி	11.3
08	மொரட்டுவை பிலியந்தல வீதி	2.62
09	நாவின்ன பொரலஸ்கமுவ வீதி	2.41
10	பிலியந்தல மகரகம வீதி	5.38
11	ஒருகொடவதடதை அம்பதல வீதி	7.7
12	வல்கம தியகம வீதி	7.06
13	பெலவத்தை நுழைவுப்பாதை	0.83

2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒருகொடவத்தை அம்பத்தல வீதியின் 2018ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் பௌதீக முன்னேற்றமானது 23 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டின் இறுதியில் இது முழுமொத்தமாக 29 சதவீத முன்னேற்றத்தை அடையப் பெற்றிருந்தது. ஆரம்பத்தில் இது திட்டமிடப்பட்ட வகையில் அதன் இலக்குகளை அடையப் பெறவில்லை. இப்பிண்ணடைவிற்கு பிரதான காரணம் ஒப்பந்தக் காரரின் மந்தகதியான செயலாற்றுகையாகும்.

ஒருகொடவத்தை – அம்பத்தல வீதியின் (கட்டம் 11) 0+000கி.மீ –2+300கி.மீ வரை மற்றும் 4+200கி.மீ இருந்து 5+440கி.மீ வரையான பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளானது 2019 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருட இறுதியில் 0.2 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றது. இத்திட்டத்தினை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு பிரதான காரணம் நீர் விநியோக குழாய் மற்றும் மின்சார கம்பிகளை நகர்த்தல் மற்றும் காணிச் சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதமாகும்.



உரு 2.3.10.1 –கொட்டாவ – தலகல வீதியின் முழுமொத்த முன்னேற்றம்

நடவடிக்கை இலக்கம் 06 ஆனது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 55 மற்றும் 26 சதவீத முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது.



உரு 2.3.10.2 –கோட்டை – போப்பே வீதிப் புனரமைப்பின் முழுமொத்த செயலாற்றுகை

கோட்டை போப்பே வீதியின் புனரமைப்பு வேலைகளில் 71 சதவீத பௌதீக முன்னேற்றத்தை 31.12.2019இல் பதிவாகியுள்ளதோடு இது 2018ஆம் ஆண்டின் முடிவில் 46 சதவீதமாகும்.

திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி 2018இற்கு எதிராக 2019இல் அடையப்பட்ட முன்னேற்றமானது பின்வருமாறு சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

2018

- கொட்டாலை - தலகல வீதி -27%
- கோட்டை - போப்பே வீதி - 58%
- ஒருகொடவத்தை அம்பத்தலை வீதி (கட்டம்) - 27%

2019

- கொட்டாலை - தலகல வீதி -73%
- கோட்டை - போப்பே வீதி - 83%
- ஒருகொடவத்தை அம்பத்தலை வீதி (கட்டம்)ஒருகொடவத்தை அம்பத்தலை வீதி (கட்டம்)- 27%
- ஒருகொடவத்தை அம்பதலை வீதி 2%

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-32	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	950.0	850.0	330.1
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	400.0	950.0	807.5
	மொத்தம்	**1,350.0**	**1,750.0**	**1,137.6**

இத்திட்டத்தின் 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டில் முறையே 65 சதவீதம் மற்றும் 87 சதவீத நிதிச் செயலாற்றுகையை பதிவு செய்துள்ளது.

2.3.11 முன்னுரிமை வீதிக்கருத்திட்டம் II கட்டம் 1

முன்னுரிமை வீதி கருத்திட்டம் III இன் கட்டம் I இற்கு சீன அபிவிருத்தி வங்கியானது மேலும் ஐ.அ.டொ 300 மில்லியன் நிதியை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 248.96கி.மீ நீளமான வீதிகளானவை 12 கொந்தராத்து ஒப்பந்தங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

இத்திட்டமானது உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியினூடாக இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிடும்படியான பங்களிப்பினை செய்வதாகும். 2018ஆம் ஆண்டின் இறுதியின் போது அனைத்து கொந்தராத்து ஒப்பந்தங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் பதிமூன்றாவது பொதியானது 2019ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட 99 சதவீதமான வீதிகளின் பொதியானது நிறைவு செய்யப்பட்டதுடன் கீழ்வரும் வீதிப் பொதிகளின் பெருகைகளானது 2018இல் ஆரம்ப கொந்தராத்து பொதிகளின் அமுல்படுத்தலின் போது கிடைத்த சேமிப்பில் ஆரம்பிக்கப்பட்டது. (அட்டவணை 2.3.11.1)

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட 3 பெருகைகள் 2019ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டதுடன் மற்றும் கொந்தராத்து பொதி 8இ மூலம் கிடைக்கப்பெற்ற சேமிப்பினைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட 16.6கி.மீ தூரமான வீதி மேம்படுத்தல் நடவடிக்கையானது 2018இன் இறுதியில் நிறைவு செய்யப்பட்டது.

அட்டவணை 2.3.11.1 – முன்னுரிமை வீதிப் புனரமைப்பு திட்டம் III கட்டம் I அசல் ஒப்பந்த பொதிகளின் சேமிப்புக்களிலிருநது புனரமைக்கப்பட்ட வீதிகள்

வீதியின் பெயர்
04 வீதிகள் பிங்கிரிய தேர்தல் தொகுதியல் (16.60கி.மீ)
பலகொல்ல ஜம்மா மஸ்ஜித் சுற்றுவட்டப் புாதை (4.6கி.மீ)
மினிகமுவ – சியுருபிடிய வீதி (5.5கி.மீ)
கடலாதெனிய – பரணபிடிய வீதி (3.5கி.மீ)

கொந்தராத்து ஒப்பந்தங்களின் சேமிப்புக்களைப் பயன்படுத்தி மேலும் 7 வீதிகளின் மேம்படுத்தல்

நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. 2019ஆம் ஆண்டின் பௌதீக முன்னேற்றத்துடன் அவ்வீதிகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3.11.2–2019 இல் கொந்தராத்து பொதிகளின் சேமிப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வீதிப் புனரமைப்பு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் வீதிகள்

வீதியின் பெயர்	பௌதீஈக முன்னேற்றம் 31/12/2019 இல்
ஆன்வராம-கொண்தெனிய-வெகன்தலே வீதி	**98%**
புரகம்மன–டிகெல்ல–அதுராகொட-வந்துராதெனிய	55%
மீதெனிய-ஹுபுவித்த வீதி	**55%**
அலவதுயர-யட்டபான வீதி	**22%**
நெலுந்தெனிய-அலவ்வ வீதி	**15%**
கனேதன்ன-மகன்தேகம-கோவில்கந்த வீதி	**98%**
நடுவத்த-புரானபொத்த வீதி	**21%**

மேற்கூறப்பட்ட 7 வீதிகளில் 3 வீதிகளானது 100 சதவீத பௌதீக இலக்கை அடையப்பெற்றது. வருட இறுதியின் போது மிகுதி வீதிகளில் நடுவத்த – புரன்பொத்த வீதியைத் தவிர அனைத்து வீதிகளும் 50 சதவீதத்திற்கு மேல் பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது. அவ்வீதியானது 2018ஆம் ஆண்டில் 99 சதவீத முன்னேற்றத்தை பதிவு செய்திருந்தது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-39	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	2,000.0	4,969.0	2,528.4
	மொத்தம்	**2,000.0**	**4,969.0**	**2,528.4**

2019ஆம் ஆண்டில் நிதிச்செயலாற்றுகையானது 51 சதவீதமாக காணப்பட்டதோடு இது 2018 இல் 99 சதவீதமாகப் காணப்பட்டது. மேலும் நிறைவு செய்யப்பட்ட வீதி நிர்மாணப் பணிகளின் பெறுமதியானது அண்ணளவாக ரூபா 4000 மில். மேலாகும். இது மேற்கூறிய செலவுகளில் பதிவு செய்யப்படவில்லை.

2.3.12 தெற்கு வீதித் தொடர்பு கருத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் தெற்கு அதிவேகப் பாதையுடன் தொடர்புபடும் தேசிய வீதிகளை மேம்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.அ.டொ 70 மில்லியன்களை கடன் நிதியாக பெற்றுக் கொடுத்துள்ளது.

இக்கருத்திட்டத்தின் மூலம் தென் பிராந்தியத்தில் அதிவேகப் பாதையுடன் தொடர்புபடும் தேசிய நெடுஞ்சாலைகளில் 31.2கி.மீ தூரமான வீதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேகப் பாதை தொடர்புபடுத்தலை மேம்படும் இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் கருத்திட்டங்கள் அமுல்படுத்துதல் தயார் நிலையை உருதி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தல் கூறானது 5 முன்னுரிமை வீதிகளில் 6 பகுதிகளை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை தெற்கு அதிவேகப் பாதையின் மூனறு இடமாற்றல்களுடன் தொடர்புபடுகின்றது.

இம் முன்னுரிமைப்படுத்தப்பட்ட வீதிகளானது தற்போதைய வீதியின் தரம், மற்றும் இயலளவு, போக்குவரத்துக்கான கேள்வி, மற்றும் அமுல்படுத்தலுக்கான தயார் நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் இரத்மலானை – மீறிஹானை வீதி மற்றும் மொறட்டுவை – பிலியந்தலை வீதி (பொதி 1) என்பவற்றின் புனரமைப்பு நடவடிக்கைகள் 2015 ஏப்ரலில்

ஆரம்பிக்கப்பட்டு 2017இல் நிறைவு செய்யப்பட்டன.

பொதி IIஇன் கீழ் கெஸ்பாவை – பொக்குனிவிட்ட வீதி மற்றும் கிருளப்பனை – கொடகம வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகள் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் பொதி III இன் கீழ் தெற்கு அதிவேகப் பாதையில் இருந்து மதுருகொடை வரையான வீதியின் வேலைகளும் இக்காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதோடு 2018ஆம் ஆண்டின் இறுதியில் பொதி II மற்றும் IIIஇன் பௌதீக முன்னேற்றமானது முறையே 88 சதவீதம் மற்றும் 100 சதவீதமாகும்.

2019ஆம் ஆண்டின் இறுதியில் பொதி IIஆனது 97 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது. பொதி IV அம்பத்தளையில் இருந்து ஸினெக் சந்தி வரையிலான வீதிப் பகுதியின் திருத்த வேலைகள் 2017 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்டு 2018 மற்றும் 2019 முடிவில் திரண்ட பௌதீக முன்னேற்றமானது முறையே 66 மற்றும் 98 சதவீதம் அடையப் பெற்றுள்ளது.

அட்டவணை 2.3.12.1 தெற்கு வீதித் தொடர்பு கருத்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட வீதிகள்

கோ.பொ பாதி	வீதியின் பெயர்	தூரம் (கிமீ)
கொ .பொ01	‘பீ’389 இரத்மாலான மீரிஹான வீதி 5+700கி.மீ -7+840கி.மீ	2.14
	‘பீ’295 மொரட்டுவ –பிலியந்தல வீதி 2+620 -5+120	2.55
கொள்வனவு .பொ02	‘பீ’084 கெஸ்பாவ – பொக்குனுவிட்ட வீதி 13+800 கி.மீ- 28+180கி.மீ	14.40
	‘ஏ’004 கிருலப்பனை–கொடகம வீதி 0+130கி.மீ- 1+000கி.மீ மற்றும் 17+260 - 18+200	1.79
கொள் வனவு பொ03	‘பீ”157 மத்துகமை – தெற்கு அதிவேகப்பாதை 42+372 கி.மீ- 32+000கி.மீ	10.37
கொள்வ னவு .பொ04	ஸிநெக் - அம்பத்தலெ வீதி	1.88

2018ஆம் ஆண்டின் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய ஒப்பந்த பொதி இரண்டு 100 சதவீதத்திற்கு மேலான இலக்கை அடையப் பெற்றிருந்ததுடன் ஒப்பந்த பொதி 3 ஆனது பௌதீக இலக்கில் 100 சதவீத இலக்கை அடையப் பெற்றிருந்தது. அதேவேலை பொதி 4 இற்கு 95 சதவீத இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்தாலும் அது 66 சதவீத முன்னேற்றத்தையே காட்டியுள்ளது. இது 76 சதவீத இலக்கை அடையப் பெற்றுள்ளதைக் காட்டுகிறது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ருபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-43	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	1,420.0	1,753.0	1,058.6
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	300.0	350.0	350.0
	மொத்தம்	**1,720.0**	**2,103.0**	**1,408.6**

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான நிதிச் செயலாற்றுகயையானது முறையே 87 சதவீதம் மற்றும் 67 சதவீதமாகும். இவ் அறிக்கைக்கான காலப்பகுதியில் ரூபா 1900 மில்லியன் செலவு செய்யப்பட்டதாக கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3.13 ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ ரோட் - கட்டம் 1)

இவ் ஐ ரோட் கருத்திட்டமானது தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் கிராமிய வீதிகள் மற்றும் தேசிய வீதிகளை புனரமைத்து மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இதன் நோக்கமாவது கிராமிய மக்களை நகர பொருளாதார மையங்களுடன் இணைப்பதற்கான வீதி வசதிகளை விருத்தி செய்வதாகும். தெரிவு செய்யப்பட்ட வீதிகளில் போக்குவரத்து வசதிகள் அதிரிக்கப்படுகின்றமையால் மேம்படுத்தப்பட்ட

தொடர்புகளானது மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் சாதகமான தாக்கத்தினை செலுத்தும்.
இத்திட்டத்தின் கீழ் அன்னளவாக 3,131கி.மீ உள்ளூர் வீதிகள் (மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற வீதிகள்) மற்றும் 265கி.மீ தேசிய வீதிகளும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல்கள் மற்றும் பாதுகாப்பு கொள்கைகளுக்கு உட்பட்டவாறு வடிவமைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு மற்றும் முறையே ஐந்து மற்றும் ஏழு ஆண்டுகளுக்கு பராமரிப்பதற்கும் மற்றும் வேலைகளுக்கான பெறுகைகளை அவ்வழிகாட்டலுக்கு அமைவாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண மற்றும் தேசிய வீதகிளை புனரமைத்து மேம்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.அ.டொ 280 மில்லியன்களையும் இலங்கை அரசாங்கம் ஐ.அ.டொ 106 மில்லியன்களையும் முதலீடு செய்வதற்கு இணங்கியது.

இந்நிகழ்ச்சித்திட்டமானது 2015ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அது 2024ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது. கிராமிய வீதிகளின் நிர்மாணப் பணிகள் 2019ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு அடுத்த மூன்று வருடங்களும் செயலாற்றுகை அடிப்படையிலான பராமரிப்பு காலமாகும். தேசிய வீதிகளுக்கான வீதி முகாமைத்துவ ஒப்பந்தமானது 2024 வரை தொடரும்.

அட்டவணை 2.3.13.1 ஒருங்கிணைந்த வீதிகள் அபிவிருத்தி முதலீட்டுத்திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்வதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள கிராமிய வீதிப் பொதிகள்– 2019

மாகாணம்	மாவட்டம்	வீ.எண்ணிக்கை	தூரம் (கி.மீ)
தெற்கு	காலி	66	197
	மாத்தறை	67	218
	ஹம்பந்தோட்டை	51	167
சப்ரகமுவ	இரத்தினபுரி	38	255
	கேகாலை	63	217
வட மத்திய	அனுராதபுரம்	60	330
	பொலன்னருவ	55	170
மத்திய	கண்டி	50	221
	மாத்தளை	51	194
	நுவரஎளிய	43	180
வடமேல்	புத்தளம்	38	220
	குருநாகல்	76	485
மேல்	களுத்துறை	83	276
மொத்தம்		741	3,131

2018ஆம் ஆண்டின் இறுதியில் முழுமொத்த கருத்திட்டத்தின் முன்னேற்றமானது 82 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டின் இறுதியில் அது 83 சதவீதமாகும்.

2018ஆம் ஆண்டில் 28 சதவீத பௌதீக இலக்கினை அடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இவ்விலக்கில் ¾ பகுதியே அதாவது 71 சதவீதமே அடையப்பெற்றது.

2019ஆம் ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு வீதிப் பொதியின் பௌதீக முன்னேற்றமானது கீழ்வருமாறு விபரிக்கப்படுகின்றது

அட்டவணை 2.3.13.2 மாகாண அடிப்படையில் வீதிப் பொதிகளின் பௌதிக முன்னேற்றம்

மாகாணம்	31.12.2018 இல் பௌதீக முன்னேற்றம்	31.12.2019 இல் பௌதீக முன்னேற்றம்
தென் மாகாணம்	96%	98%
மத்திய மாகாணம்	91%	95%
சப்ரகமுவ மாகாணம்	69%	78%
வடமத்திய மாகாணம்	97%	100%
வட மேல் மாகாணம்	59%	67%
மேல் மாகாணம் (களுத்துறைமாவட்டம்)	46%	62%

2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்திற்கு அமைய 55 சதவீத இலக்கிற்கு எதிராக 6 சதவீத முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

அட்டவணை 2.3.13.3 ஒருங்கிணைந்த வீதி அபிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள தேசிய வீதிகள்

இல.	வீதியின் பெயர் இல.	தூரம் (கி.மீ)	ஊள்ளடங்கு ம் மாவட்டங்கள்	துற்போதைய நிலைமை
1	மரகன்கடவல - ஹபரன வீதி (ஏ011)	25	போலன்னருவை அனுராதபுரம்	17.9%
2	கொழும்பு கண்டி வீதி (அம்பேபுஸ்ஸ - கடுகன்னாவை பகுதி)	40	கேகாலை கண்டி	ஒப்பந்தம் அளிக்கபடவில்லை
3	பெல்ழுடுல்ல அம்பிலிபிடிய பதனங்கல வீதி('ஏ'018)	66	இரத்தினபுரி - ஹம்பந்தோட்டை	
4	கராபிடிய நாகொட வீதி 'பீ'248, 'பீ'454, உடுகம தரவாணை சந்தி – தவலம வீதி 'பீ'129, 'பீ'429, 'பீ'156	51.7	காலி	1%
5	தலாவ-கெகிராவ-கனேவல்பொல-டச்சிஹல்மில்ல வீதி	90	அனுராதபுரம்	ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது
	மொத்தம்	**272.7**		

2.3.14 இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி முதலீட்டுத் திட்டம் (ஐ ரோட் 2)

இவ் ஐ ரோட் 2 கருத்திட்டமானது இலங்கையில் கிராமிய வீதிகளின் இயலளவை மற்றும் கிடைப்பனவை மேம்படுத்துவதற்கு உதவுகின்றது. இதன் மூலம் நாடுதழுவிய மட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் கிராமிய மக்களின் பங்களிப்பு அதிகரிக்கின்றது.

இத்திட்டத்தின் கீழ் அண்ணளவாக 3404கி.மீ கிராமிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு சிறப்பான முறையில் பராமரிப்புச் செய்யப்படுவதோடு 343கி.மீ தேசிய வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படும். இதன்கீழ் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்கள் உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தியில் பங்குபற்றும் நிறுவனங்களின் வீதிப் பாதுகாப்பு, நலன்கள், பராமரிப்பு, இயலளவு, மற்றும் வீதி வடிவமைப்பு மற்றம் நிர்மாணித்தல் இயலளவானது அபிவிருத்தி செய்யப்படும். இத்திட்டமானது 2018 – 2027 வரை அமுல்படுத்தப்படும்.

முதல் இரண்டு வருடங்களில் வீதிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு அதன் பின்பு 3 வருடம் மற்றும் 5 வருட **செயலாற்றுகை அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தமானது முறையே** கிராமிய மற்றும் தேசிய வீதிகளுக்கும் பெற்றுக் கொடுக்கப்படும்.

அட்டவணை .2.3.14.1. – ஐ ரோட் 2 இன் கீழ் புனரமைப்புச் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள வீதிகள்

மாகாணம்	மாவட்டம்	தேசிய வீதிகள் தூரம் (கி.மீ)	தேசிய வீதிகளின் எண்ணிக்கை	கிராமிய வீதிகள் தூரம் (கி.மீ)	கிராமிய வீதிகளின் எண்ணிக்கை	மொத்த வீதிகளின் எண்ணிக்கை	வழுவயாட நிரபொவா (மசு)
Northern	யாழ்பானம்	114.89	1	260.24	127	128	1057.77
	கிளிநொச்சி		-	181.78	47	47	
	மன்னார்		1	137.74	67	68	
	வவுனியா		2	221.78	62	64	
	முல்லைத்தீவு		-	141.34	36	36	
கிழக்கு	மட்டகளப்பு	155.76	1	184.99	123	124	845.83
	அம்பாறை		14	319.45	144	158	
	திருகோணமலை		1	185.63	123	124	
ஊவா	பதுள்ளை	72.9	6	494.53	147	153	1044.51
	மொனராகல		1	477.08	95	96	
மேற்கு	கொழும்பு	-	-	247.21	149	149	799.98
	கம்பஹா			307.37	183	183	
	களுத்துறை			245.4	102	102	
மொத்தம்		343.55	27	3,404.54	1405	1432	3,748.09

இத்திட்டம் 2018ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டாலும் இதற்கான கடன் ஒப்பந்தமானது ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 2017ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டு ஊவா மாகாணத்திற்கான நிர்மாணப் பணிகளுக்கான கேள்வி மனுக்கள் 2017 ஜூன் மாதத்தில் கோரப்பட்டன.

2019 டிசம்பர் மாத முடிவில் இத்திட்டத்தின் முன்னேற்றங்கள் பின்வருமாறு:

- 2018ஆம் ஆண்டு ஊவா மாகாணத்தின் தெரிவுசெய்யப்பட்ட வீதிகளின் புனரமைப்புக்கான நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தமானது வழங்கப்பட்டது 2019ஆம் ஆண்டின் முடிவில் 39 சதவீத முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

- 2019ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண கிராமிய வீதிகளின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

- வடமாகாண கிராமியப் பாதைகளின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

- மேல் மாகாணத்திற்கான கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கான கொந்தராத்து ஒப்பந்தம் 2020 ஜனவரியில் பெற்றுக்கொடுக்கப்படும்.

2018ஆம் ஆண்டின் போது அடையப்பட்ட 84 சதவீத முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் இலக்குகளை அடைவதில் சிறிது பின்னடைவு காணப்படுகின்றது. 2019ஆம் ஆண்டின் போது அவதானிக்கப்பட்ட நிதிச் செயலாற்றுகையானது 75 சதவீதமாகும். இது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதற்கு நேர் மாற்றமாக கருத்திட்ட முகாமைத்துவ அலகின் தரவுகளின்படி 2019ஆம் ஆண்டில் நிதிய செயலாற்றுகையானது 99 சதவீதமாகும்.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-44	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	15,400.0	19,344.8	11,514.5
	மொத்தம்	**15,400.0**	**19,344.0**	**11,514.5**

2.3.15 அரசாங்க உத்தரவாதத்தின் கீழான உள்ளூர் வங்கிக் கடன்கள் மூலமான வீதி புணரமைப்பு கருத்திட்டங்கள்

இத்திட்டமானது உள்ளூர் வணிக வங்கிகளின் கடன் நிதியீட்டத்தின் மூலம் வீதிப் புனரமைப்பு/ மேம்படுத்தல் உள்ளூர் கொந்தராத்துக்காரர்கள் மூலம் முகாமை செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

இத்திட்டங்களுக்கான ஆலோசகராக வீதி அபிவிருத்தி அதிகார சபை காணப்படுவதோடு சில வீதிகள் மத்திய பொருளியல் உசாத்துணை பணியகத்தின் ஆலோசனையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்றன.

2018ஆம் ஆண்டின் டிசம்பர் முடிவில் 64 கொந்தராத்து பொதிகளில் 62 பொதிகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் 02 பொதிகள் மாத்திரம் 2018 இறுதியிலும் வேலைகள் தொடர்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டில் ஒவ்வொரு பொதியிலும் முன்னேற்றமானது பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை2.3.15.1 தற்போது அமுல்படுத்தப்படும் வீதிப்பகுதிகளின் முன்னேற்றம்

இல	வீதியின் பெயர்	வீதியின் தூரம் (கி.மீ)	மாவட்டம் (அமைவிடம்)	31/12/2019(%) வரை பௌதீக முன்னேற்றம்
01	கொழும்பு – கண்டி வீதி (கடவத்தை - நிட்டம்புவ வரை)	23.00	கம்பஹா	100%
02	லுனுகம்வெகர – கத்தரகம வீதி	13.82	மோனராகல	100%
03	நிட்டம்புவ பஸ்யால வீதி	4.0	கம்பஹா	1%

மேற் கூறப்பட்டவையில் உள்ள முதல் இரண்டு வீதிகளுக்கு மேலதிகமாக மூன்றாவது வீதிப் பொதியானது 2019ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

நிதிச் செயலாற்றுகை 31.12.2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-51	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	43,700.0	39,672.0	39,671.3
	மொத்தம்	**43,700.0**	**40,102.0**	**39,671.3**

2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் அடையப்பெற்ற நிதிச் செயலாற்றுகையானது 99 சதவீதமாகும். நிதி இலக்குகளின் அடைமானமானது மிகவும் சிறப்பானதாகும்.

2.3.16 போக்குவரத்து தொடர்பு மற்றும் சொத்து முகாமைத்துவ கருத்திட்டம்.

இத்திட்டமானது 15.08.2018ஆம் திகதி (18/1682/805/05) இலக்கம் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி மீளமைக்கப்பட்டது. அதற்கான கடன் ஒப்பந்தம் 29 செப்டெம்பர் 2017இல் கைச்சாத்திடப்பட்டது.

இம்மீளமைப்புக்கு பிற்பாடு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கூறானது "சொத்துக்களை முகாமை செய்வதற்காக நிறுவக ரீதியான உறுதிப்படுத்தல் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்" என வரையறுக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையிலுள்ள வீதி சொத்து முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்து செயற்படுத்துவதற்கான பிரதான நோக்கம் பின்வருமாறு:

- வீதி பராமரிப்பு செலவு மற்றும் வீதிப் பாவணையாளர் செலவினை குறைத்து பொருளாதார நலத்தினை உச்சப்படுத்தல்.

- வீதிகளின் வாழ்க்கை சுழற்சி கிரயத்தை குறைக்கும் வகையில் தலையீடு செய்யப்பட வேண்டிய நேரம் மற்றும் கிரயத்தை தீர்மானிப்பதற்கு.

- நிறைவு செய்யப்பட்ட வேலைகளை கண்காணிப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் 2019இல் பின்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன.

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலுள்ள சொத்து முகாமைத்துவ முறைமைக்கான அலகு உருவாக்கப்பட்டது.
2. வாண்மை அபிவிருத்தி, பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனைகள்.
3. தேவையான உபகரணங்கள் கொள்வனவு.

இதன் அடிப்படையில் நடவடிக்கை 01ஆனது இலக்குப்படுத்தப்பட்ட அடைவில் 25 சதவீதத்தை அடையப்பெற்றுள்ளது. திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்திற்கு அமைய அடையப்பெற வேண்டிய இலக்கானது 8 சதவீதமாகும். ஆனால் அடையப் பெற்றிருப்பது 2 சதவீதமாகும். நடவடிக்கை அலகு 2 தொடர்பில் 100 சதவீதத்திற்கும் மேற்பட்ட அடைவை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாண்டுக்கான இலக்குப்படுத்தப்பட்ட அடைவானது 18 சதவீதமாகும். ஆனால் 12 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளது.

உபகரணங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக விபரக்குறிப்பு தயாரித்தல், மற்றும் ஆவனங்கள் தயாரித்தல் நடவடிக்கைகளோடு தொழிநுட்ப மீளாய்வு குழுவின் அனுமதியும் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2018ஆம் ஆண்டில் இத்திட்டமானது மீள கட்டமைப்பு செய்யப்பட்டமையினால் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில நடவடிக்கைகள் 2018ஆம் ஆண்டினுள் அமுல்படுத்தப்பட முடியவில்லை. ஆகவே, அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றமானது இலக்கினை விடக் குறைவானதாகும்.

2019ஆம் ஆண்டில் ஆலோசனை சேவைகள் தவிர்ந்த சொத்து முகாமைத்துவ முறைமை மற்றும் ஏனைய நடவடிக்கையின் அனைத்து திட்டமிடப்பட்ட அலகுகளும் இவ்வருட காலப்பகுதியினுள் அமுல்படுத்தப்பட்டன. பெரும்பாலான நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமையினால் முன்னேற்றமானது கடந்த வருடத்துடன் ஒப்பிட முடியாதுள்ளது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-48	2506 உட்கட்மைப்பு அபிவிருத்தி	376.0	71.0	70.5
	மொத்தம்	**376.0**	**71.0**	**70.5**

2019ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகையானது 99 சதவீதமாகும். அதேவேலை இது 2018ஆம் ஆண்டில் 34 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றுகையானது சிறப்பானதாகும்.

2.3.17 முன்னுரிமை வீதிகளின் மேம்படுத்தல் மற்றும் புணர்நிர்மாண திட்டம் - 3 (கட்டம் II)

பிரதான நகரங்களின் தொடர்புபடும் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து ஐ.அ.டொ 100 மில். கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான காலம் 18 மாதங்களாகும்.

மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 16,000 மில்லியன்களாகும். இக்கருத்திட்டத்தின் கீழ் 20 வீதிப்பகுதிகளைக் கொண்ட 131.85கி.மீ நீளமான வீதிகள் கண்டி மாவட்டத்தின் 13 வீதிகள் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 7 வீதிகளும் புனரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டில் ஒரு கொந்தராத்து ஒப்பந்தம் தவிர அனைத்து வீதிகளுக்குமான கொந்தராத்து பொதிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்திற்கு அமைவாக 100 சதவீதத்திற்கும் மேலான பௌதீக இலக்கினை அடையப்பெற்று அனைத்து வீதிப் பொதிகளும் நிறைவு செய்யப்பட்டன.

31.12.2019 வரையில் நிறைவு செய்யப்பட்ட கொந்தராத்துப் பொதிகள் பௌதீக முன்னேற்றமானது பின் இணைப்பு 12இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட 20 பொதிகளுக்கு மேலதிகமாக 2018ஆம் ஆண்டின் போது மேலும் 02 வீதிப் பொதிகள் அடையாளம் காணப்பட்டு ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான நிதியானது 2019இல் நிறைவு செய்யப்பட்ட கொந்தராத்துப் பொதிகளான 24 மற்றும் 28இன் மூலம் கிடைக்கப்பெற்ற சேமிப்புகளின் மூலம் பெறப்பட்டதாகும்.

அட்டவணை2.3.17.1 –2018 இல் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி பொதிகள்

வீதியின் பெயர்	தூரம் (கிமீ)	மாவட்டம்	31/12/2018இல் பௌதீக முன்னேற்றம்	31/12/2019இல் பௌதீக முன்னேற்றம்
ஹேதெனிய – மடவலை வீதி	3.3	கண்டி	57%	பூரணமடைந்துள்ளது
புஸ்ஸல்லாவ – உலொத்த வீதி	2.9	கண்டி	65%	

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட வீதி கொந்தராத்து பொதிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற சேமிப்புகளில் இருந்து கேகாலை மாவட்டத்தில் மேலும் 4 வீதிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 2019ஆம் ஆண்டின் முன்னேற்றத்துடன் அவைகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை2.3.17.2 –2019 இல் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி பொதிகள

வீதியின் பெயர்	தூரம்(கி.மீ)	பௌதீக முன்னேற்றம் 31/12/2019
தெபத்கம – களுகல வீதி	5.0	70%
கன்னத்தோட்டை – தலகல வீதி	2.1	94%
புலத்கொகுபிடிய நகர அபிவிருத்தி	1.5	12%
மாவணல்ல நகர அபிவிருத்தி	2.0	10%

மேலே உள்ள 2 வீதிப் பொதிகளில் கன்னத்தோட்டை - இகலகம வீதியானது 2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளுடன் ஒப்பிடுகையில் 100 சதவீதத்திற்கு மேலான அடைவையும் தெபெத்கம – கலுகல வீதியானது 79 சதவீத இலக்கினையும் அடையப்பெற்றுள்ளது.

31.12.2019இல் நிதிச் செயலாற்றுகை

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-46	2506 உட்கட்மைப்பு அபிவிருத்தி	1,300.0	4,167.5	3,027.1
	மொத்தம்	**1,300.0**	**4,167.5**	**3,027.1**

2019ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றுகையானது 73 சதவீதமாகும். இது 2018ஆம் ஆண்டில் 82 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றுகையானது 2018ஆம் ஆண்டினை விட குறைவானதாகும்.

2.3.18 பேஸ்லைன் வீதி நீடித்தல் திட்டம் கட்டம் III

பேஸ்லைன் வீதி நீடித்தல் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் அசல் திட்டமானது கிருளப்பனை சந்தியில் இருந்து இரத்மலானை மெலிபன் சந்தி வரையிலாகும். எவ்வாறாயினும் அசல் திட்டமானது அமைச்சரவைப் பத்திரத்தினூடாக கொகுவலை துட்டுகமுனு மாவத்தை வரையில் வரையறுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அப்பாதையின் நீளமானது 0.86கி.மீ. இம்முன்மொழியப்பட்ட பாதையானது 3 சுவடுகளைக் கொண்ட இரட்டை நெடுஞ்சாலையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கிருளப்பனை சந்தியில் மேம்பாலமும் பலப்பொக்குன வீதியிற்கு சுரங்க கடவையும் உள்ளடங்கியதாகும்.

முதற் கட்டத்திற்கான காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளானது மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவின்படி 2016 டிசம்பர் 7ஆம் திகதியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. 2018 மே 23ஆம் திகதியின் தீர்ப்பின்படி அனைத்து முறையீடுகளும் செலவுகளும் இன்றி தள்ளுபடிசெய்யப்பட்டன.

காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளானது கிருளப்பனை சந்தியிலிருந்து துட்டுகமுன வீதி வரையில் 50 சதவீதத்தை அடையப்பெற்றுள்ளது. 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுக்கான காணிச் சுவீகரிப்பு முன்னேற்றமானது முறையே 14 சதவீதம் மற்றும் 31 சதவீதமாகும்.

நிதிச் செயலரற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-10	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	192.0	418.4	220.5
	2506 உட்கட்மைப்பு அபிவிருத்தி	30.0	10.0	9.9
	மொத்தம்	**222.0**	**428.4**	**230.4**

2018ஆம் ஆண்டு 1 சதவீதமாகக் காணப்பட்ட நிதிச் செயலாற்றுகையானது 2019ஆ் ஆண்டில் 54 சதவீதமாகும். மேலே குறிப்பிட்டவாறு குறைவான நிதிச் செயலாற்றுகைகக்கு பிரதான காரணம் போதுமான கட்டு நிதியானது கிடைக்கப் பெறாமையாகும்.

2018ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நீதிமன்றக் கட்டளையின் காரணமாக 2018ஆம் ஆண்டில் மிகவும் குறைந்த நிதிச் செயலாற்றுகைக்கு பிரதான காரணமாகும்.

2.3.19 மேல்மாகாண தேசிய நெடுஞ்சாலைகள் கருத்திட்டம்.

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (ஒபிட்)மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஐ.அ.டொ 17 மில். கடனாக வழங்கியுள்ளது.

இதன் கீழ் 25.81கி.மீ தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் உள்ளடங்கும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் வீதிப் பகுதிகள் விரிவாக்கலுக்கும் மற்றும் மேம்படுத்தலுக்குமாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3.19.1 - இக்கருத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படுகின்ற வீதிகள்

இல	வீதிப் பகுதி	தூரம் (கி.மீ)	31/12/2019 இல் முன்னேற்றம்
1	கடுவலை அத்துருகிரிய வீதி ‘பீ’174 (0+000கி.மீ– 9+500 கி.மீ)	9.50	Civil work – 29%
2	வல்கம – அத்துருகிரிய வீதி ‘பீ’451 (0+000 கி.மீ– 1+210 கி.மீ)	1.21	
3	வாத்துவை மொரன்துடுவை ‘பீ’449 (1+000 கி.மீ– 5+300 கி.மீ)	5.30	Civil work – 90%
4	பெல்லன – மாரகல்ல வீதி‘பீ’544 (0+000 கி.மீ– 9+800 கி.மீ)	9.80	

வீதி இல 1 மற்றும் 2 இன் நிர்மாணப் பணிகளானது 2018இல் ஆரம்பிக்கப்பட்டது. 2018 டிசம்பர் 31இல் 11 சதவீத முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி இரண்டு வீதிகளிலும் அடையப்பட்ட பௌதீக இலக்கானது 44 சதவீதமாகும்.

2019ஆம் ஆண்டில் இப்பொதிகளானது 29 சதவீத முன்னேற்றத்தினை அடையப்பெற்றுள்ளது. 2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி அடையப்பட வேண்டிய இலக்கானது 33 சதவீதமாகும். இவ்இரண்டு பொதிகளினதும் தாமதத்திற்கு பிரதான காரணம் காணிச் சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதமாகும். அண்ணளவாக ரூபா 500 மில்லியன் காணிச் சுவீகரிப்புக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவாக செலுத்தப்பட வேண்டியிருப்பதனால், மின்சாரம் சம்பளங்கள் மற்றம் நீர் குழாய் நகர்த்தல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இதனால் இத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றமானது எதிர்மறையாக காணப்படுகின்றது. 03 மற்றும் 04ஆம் பொதிகளுக்கான நிர்மாணப் பணிகளானது 2017 ஒக்டோபர் 05ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டின் இறுதியில் 2 சதவீத முன்னேற்றத்தை அடையப்பெற்றது. 2018ஆம் ஆண்டின் முடிவில் இப்பொதிகளின் பௌதீக முன்னேற்றமானது 50 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டினுள் 48 சதவீதத்தை அடையப் பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி இவ்விரு பொதிகளிலுமே இலக்குப்படுத்திய அடைவானது 87 சதவீதமாகும்.

2019இல் மேற்கூறிய 2 வீதிப் பொதிகளும் 90 சதவீத திரண்ட அடைவை பெற்றிருந்தது. இது இலக்குப்படுத்தப்பட்ட அடைவில் 71 சதவீதமாகும். 2017ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்தின்படி 4 பொதிகளினதும் நிர்மாணப் பணிகளானது 2017ஆம் ஆண்டினுள்

ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காணிச் சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

1 மற்றும் 2ஆம் பொதிகளின் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கையில் நான்கில் 3 பகுதியை விடக் கூடிய முன்னேற்றத்தையும் மற்றும் 3 மற்றும் 4ஆம் பொதிகளின் அடைவானது முறையே 26 மற்றும் 35 சதவீதங்களாகவும் காணப்படுகின்றன. 2019ஆம் ஆண்டின் முடிவில் மேற்கூறப்பட்டுள்ள நான்கு பொதிகளினதும் அடையப்பட்ட முன்னேற்றமானது முறையே 55, 40, 95 மற்றும் 88 சதவீதங்களாகும்.

நிதிச் செயலாற்றுகை 31.12.2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-40	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	200.0	744.0	519.1
	2506 உட்கட்மைப்பு அபிவிருத்தி	800.0	340.0	228.0
	மொத்தம்	**1,000.0**	**1,084.0**	**747.1**

2018ஆம் ஆண்டில் திரண்ட நிதிச் செயலாற்றுகையானது 84 சதவீதமாக காணப்படுகின்றது. ஆரம்ப ஒதுக்கமானது 50 சதவீதத்தினால் திருத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டின் போது 69 சதவீத இலக்கு அடையப்பெற்றதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 சதவீத வீழ்ச்சியாகும்.

2.3.20 மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள வீதிகளின் மற்றும் பாலங்களை அகலமாக்கல் மற்றும் மேம்படுத்தல் திட்டம்.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள 6431கி.மீ வீதிகளை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் 13 பாலங்களை புனரமைப்புச் செய்வதற்குமாக இலங்கை அரசாங்கமானது சீன எக்சிம் வங்கி (ஹுனான கிளை) மற்றும் இலங்கையின் மக்கள் வங்கி ஆகிய வங்கிகளிடமிருந்து ஒரு கடனைப் பெற்றுக் கொண்டது.

இத்திட்டமானது இரண்டு கொந்தராத்து பொதிகளாக அமுல்படுத்தப்படும். வீதி நிர்மாணப் பொதி மற்றும் பால நிர்மாணப் பொதி ஆகிய இரண்டு கொந்தராத்துக்குமான ஒப்பந்தங்களில் முறையே 24 மாதங்கள் மற்றும் 18 மாதங்களாகும்.

இத்திட்டத்திற்கான கடன் ஒப்பந்தமானது 2018ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. 2019ஆம் ஆண்டில் கருத்திட்டமானது 43 சதவீத முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது. திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி அடையப்பட வேண்டிய இலக்கானது 89 சதவீதமாகும்.

அட்டவணை2.3.20.1 - இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மேம்படுத்தப்படவுள்ள வீதிகள் மற்றும் பாலங்கள்

ஒப்பந்த இல.	வீதிப் பொதி	தூரம் (கி.மீ) பாலங்கள் எண்
1	கண்டி – கிரிமடிய வீதி	7.64
	ஆம்பிடிய – குரதெனிய வீதி	2.25
	நுவரஎலிய – ராகல – உடபுஸல்லாவ வீதி	27.00
	வெலிமட – கிர்கிலஸ் வீதி	17.83
	அவிஸ்ஸாவெல்ல - ஹட்டன் - நுவரஎலிய வீதி	9.59
2	தேன்னம்கும்புர – ரிக்கில்லகஸ்கட – ராகல வீதியில் இல. 24/3 மற்றும் 42/1 பாலங்களை புனரமைத்தல்	02
	கண்டி – கிரிமடிய வீதியில் இல 3/2 பாலத்தை புனரமைத்தல்	01
	நுவரஎலிய – ராகல – உடபுஸல்லாவ வீதியில் இல. 23/3, 27/2, 30/4, 31/5, 34/8, 37/1 38/5 பாலங்களை புனரமைத்தல்	07
	வெலிமட – கிர்கிலஸ் வீதியில் இல.1/1, 2/5, 7/7 பாலங்களை புனரமைத்தல்	03

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் 31?12/2019 (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-02-04-45	2506 உட்கட்மைப்பு அபிவிருத்தி	1,720.0	1,877.5	1,035.3
	மொத்தம்	**1,720.0**	**1,877.5**	**1,035.3**

2019ஆம் ஆண்டில் இத்திட்டமானது 55 சதவீத நிதிச் செயலாற்றுகையை பதிவு செய்துள்ளதோடு 2018ஆம் ஆண்டில் 100 சதவீத முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. கடன் ஒப்பந்தமானது வருடத்தின் இரண்டாம் காலாண்டில் கைச்சாத்திடப்பட்டதனால் அமுல்படுத்தப்பட்ட வேலைகளானது எதிர்பார்க்கப்பட்டதிலும் 50 சதவீதமானதாகும். இதனால் குறைந்த நிதிச் செயலாற்றுகையானது பதியப்பட்டது.

2.3.21 போக்குவரத்து கருத்திட்டங்களை தயார்படுத்துவதற்கான வசதியளித்தலுக்கான திட்டம்

இத்திட்டத்திற்கான நிதியானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டதின் கீழ் வீதி, புகையிரதம், துறைமுகம் ஆகிய போக்குவரத்து உபதுறைகளில் முன்னுரிமை கருத்திட்டங்களை அடையாளம் கண்டு வினைத்திறனான தொடக்க நிலையை பின்வரும் வகையில் உருவாக்குதல்.

- சாத்திய வள ஆய்வுகளை தயாரித்தல், விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு ஆவணங்களைத் தயாரித்தல்.
- கருத்திட்ட அமுலாக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்தல் ஆதரவினை பெற்றுக் கொடுத்தல்.

இக்கருத்திட்டத்தின் கீழ் 3 நடவடிக்கைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

அட்டவணை 2.3.21.1 போக்குவர்த்து கருத்திட்டங்கள் தயாரிப்பதற்கு வசதிப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் - 31.12.2019

நடவடிக்கை இல	நடவடிக்கை/கருத்திட்டம்	ஆரம்பிக்கப்பட்ட திகதி	முடிவுத்திகதி	பௌதீக முன்னேற்றம்
1	துறைமுக நுழைவுப்பாதையின் விரிவான வடிவமைப்புக்கான ஆலொசனை சேவைகள்	20-02-2017	19-02-2018	நிறைவுசெய்யப்பட்டது
2	பேலியகொடை-அத்துருகிரிய தூண்களின் மீதான வான் வழிப் நெடுஞ்சாலைக்கான நிதியியல் ஆலோசகர் (தனிநபர்) ஆலோசனை சேவைகள்	16-10-17	10-02-19	
3	பேலியகொடை-அத்துருகிரிய தூண்களின் மீதான வான் வழிநெடுஞ் சாலைக்கான பரிவர்த்தனை ஆலோசகர் (தனிநபர்) ஆலோசனை சேவைகள்	10-10-17	10-02-19	

2018ஆம் ஆண்டில் நடவடிக்கை இலக்கம் 01 ஆனது பூர்த்தி செய்யப்பட்டது. 2018ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி இந்த நடவடிக்கை தொடர்பில் அடையப்பட வேண்டிய இலக்கானது 100 சதவீதமாகும்.

2018இல் நடவடிக்கை இலக்கம் 03 மற்றும் 04 செயலாற்றுகையானது முறையே 80 மற்றும் 90 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டுக்கான

திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி உருப்படி இலக்கம் 02 மற்றும் 03 அடையப்பட வேண்டிய இலக்கானது 60 சதவீதமாகும். எவ்வாறாயினும் 80 சதவீத பெருமதி பதியப்பட்டுள்ளது. நடவடிக்கை 02 ஆனது 2019ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டதோடு திட்டமிட்டதன்படி 2 நடவடிக்கைகளும் 100 சதவீத இலக்கை அடையப்பெற்றுள்ளது.

நிதிச் செயலாற்றுகை- 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	வீபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-47	2506 உட்கட்டதைப்பு அபிவிருத்தி	345.0	128.5	41.6
	மொத்தம்	**345.0**	**128.5**	**41.6**

2.3.22 கடற்கரையோர வீதி பானந்துறை வரை விஸ்தரித்தல்.

கொழும்பு காலி வீதியில் கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான ஒரு மாற்று பாதையாக 1990களில் கடற்கரையோர வீதி அடையாளம் காணப்பட்டது. கடற்கரையோர வீதியின் (பகுதி 2) வீதியின் ரன்முத்து ஹோட்டலில் இருந்து தெகிவளை வரையான நகரப்பகுதிக்கான (0+520கி.மீ –8+420கி.மீ) வீதியின் நிர்மாணப் பணிகளானது 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

முன்மொழியப்பட்டுள்ள துறைமுக நகரத்துக்கான தொடர்பு மற்றும் நுழைவினை மேம்படுத்துவதற்காக தற்போதுள்ள கடற்கரை வீதியினை காலி முகத்திடல் வரை நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. கொழும்பு – காலி வீதியில் வாகன நெரிசலானது அதிகரித்து வருவதைக் காணலாம். மற்றும் இந்நெரிசலானது தற்போது தெகிவலையையும் தாண்டிச் சென்றுள்ளது. இவ்வாகன நெரிசலுக்கு பிரதான காரணம் மாற்றுப்பாதை காணப்படாமையாகும். இதற்கு தீர்வாக கரையோர வீதியானது பானந்துரை வரை நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் நடவடிக்கைகளானது பின்வரும் கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு அடையப்பெற்ற முன்னேற்றமானது கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

கட்டம்	31/12/2019இல் முன்னேற்றம்
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் I (இராமகிருஷ்னன் வீதி – மெல்போன் அவானியூ)	70%
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் II (மெல்போன் அவானியூ - கலன் ஆபர் பிலேஸ்)	80%
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் III (கலன் ஆபர் பிலேஸ் - கொல்பிடி புகையிரத நிலையம் வரை)	95%
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் IV (இராமகிருஷ்னன் வீதி – பிரேஸர் அவானியூ)	90%
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் V - வீதி நிர்மாணப்பணிகள்	50%
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் V - கொல்பிடி புகையிரத நிலையம் விடுதி நிர்மாணப்பணிகள்	5%
மரீன் டிரைவ் (கடற்கரை) வீதி கட்டம் VI - வீதிநிர்மாணப்பணிகள்	2019 – ஆரம்பிக்கப் படவில்லை

இதற்கு மேலதிகமாக 2019ஆம் ஆண்டில் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு வருட இறுதியில் 36 சதவீத முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

நிதிச் செயலாற்றுகை31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-04-49	2506 உட்கட்டதைப்பு அபிவிருத்தி	200.0	84.0	43.5
	மொத்தம்	100.0	140.0	80.2
	Total	**300.0**	**224.0**	**123.7**

2018ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றுகையானது 50 சதவீதத்திற்கு குறைவானதாகும். ஏனெனில் பெரும்பாலான நடவடிக்கைகள் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. 2019 இறுதியில் அடையப்பெற்ற நிதிச் செயலாற்றுகையானது 55 சதவீதமாகும்.

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் 2019ஆம் ஆண்டுக்கான இலக்குகளுக்கு எதிரான முன்னேற்ற அடைவுகளின் சாராம்சம்.

2019ஆம் ஆண்டின் போது முன்னுரிமை வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் கருத்திட்டத்தின் கீழ் புதிய வீதிகள் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் மேற்கூறிய திட்டத்தின் ஒப்பந்த பொதிகளின் சேமிப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளின் விபரமானது கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் கருத்திட்ட விபரத்துடன் தரப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வடக்கு வீதி தொடர்புபடுத்தல் திட்டத்தின் கீழ் 2 வீதிப் பகுதிகளின் மேம்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் விபரங்களும் கீழே அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்களின் முன்னேற்றம்							
இல	கருத்திட்டத்தின் பெயர்	31/12/2017 இல் திரண்ட பௌதீக முன்னேற்றம்	2018		2019		31/12/2019 இல் திரண்ட பௌதீக முன்னேற்றம
			முழு மொத்த பௌதீக இலக்கு	முழு மொத்த பௌதீக இலக்கு	முழு மொத்த பௌதீக இலக்கு	முழு மொத்த பௌதீக இலக்கு	
;1	பேஸ்லைன் நீடிப்பு	காணி சுவீகரிப்பு செயன்முறை - 48%	காணி சுவீகரிப்பு செயன்முறை- 50%	காணி சுவீகரிப்பு செயன்முறை- 2%	காணி சுவீகரிப்பு செயன்முறை- 48%	காணி சுவீகரிப்பு செயன்முறை- 31%	காணி சுவீகரிப்பு செயன்முறை- 81%
2	பதுள்ளை – செங்களடி வீதி (ஸவூதி அபிவிருத்தி நிதி (ஸ.அ.நி) மற்றும் ஒபெக் சர்வதேச அபிவிருத்தி நிதி (ஒபிட்))	ஸ.அ.நி – 0%	ஸ.அ.நி– 08%	ஸ.அ.நி- 03%	ஸ.அ.நி – 35%	ஸ.அ.நி- 23%	ஸ.அ.நி- 26%
		ஒபிட்–6%	ஒபிட் –35%	ஒபிட்-31%	ஒபிட;– 50%	ஒபிட;- 11%	ஒபிட;- 55%
3	வடக்கு வீதித்தொடர்பு திட்டம் மேலதிக நிதி ஒதுக்கம்	9 கொந்தராத்து ஒப்பந்த பொதிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன					
		குண்டி யாழ்ப்பானம் நெடுஞ்சாலை புனரமைப்பு(எ009) பகுதிகள் (141+100-150+400)கி.மீ					
	இலங்கை அரசாங்கம் - ஆ.அ.வ	49%	50%	50%	1%	1%	100%
					மதவாச்சிய – ஹொரவபொத’தான வீதி (பீ 382) பகுதிகள் பகுதி I – 10+000 கி.மீ – 23+100 கி.மீ பகுதி II – 23+100 கி.மீ – 37+000 கி.மீ		
					பகுதி 1 – 58% பகுதி II- 64%	பகுதி 1 – 58% பகுதி II – 64%	பகுதி 1 – 58% பகுதி II – 64%
4	வீதி வலயமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ – ஒபிட்) (*கொ.பொ – கொந்தராத்து பொதி)	கொ.பொ I,II,III, IV - 100%, கொ.பொ V– 5%	கொ.பொ– 55%	கொ.பொ V - 30%	கொ.பொ V-55%	கொ.பொ V - 22%	கொ.பொ I,II,III, IV - 100% கொ.பொ V - 57%.

இல	கருத்திட்டத்தின் பெயர்	31/12/2017 இல் திரண்ட பௌதீக முன்னேற்றம்	2018		2019		31/12/2019 இல் திரண்ட பௌதீக முன்னேற்றம
			முழு மொத்த பௌதீக இலக்கு	முழு மொத்த பௌதீக இலக்கு	முழு மொத்த பௌதீக இலக்கு	முழு மொத்த பௌதீக இலக்கு	
5	கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ – ஒபிட்)	கோட்டே-போப்பே வீதி 14%, கோட்டாவ – தலவத்துகொட வீதி-12%	கோட்டே-போப்பே வீதி -55%, கோட்டாவ – தலவத்துகொட வீதி - 51% கோட்டாவ–அம்பதல வீதி கட்டம் I -45%,	கோட்டே-போப்பே வீதி -32%, கோட்டாவ – தலவத்துகொட வீதி - 14% கோட்டாவ –அம்பதல வீதி கட்டமI -23%,	கோட்டே-போப்பே வீதி -30% கோட்டாவ – தலவத்துகொட வீதி 40% கோட்டாவ –அம்பதல வீதி கட்டமI - 25%, கட்டம II – 10%	கோட்டே-போப்பே வீதி -25% ,கோட்டாவ – தலவத்துகொட வீதி - 29% கோட்டாவ –அம்பதல வீதி கட்டமI - 06%, கட்டம II-0.2%	கோட்டே-போப்பே வீதி -71% கோட்டாவ – தலவத்துகொட வீதி - 55% கோட்டாவ –அம்பதல வீதி கட்டமI -29%, கட்டம II-0.2%
6	முன்னுரிமை வீதி கருத்திட்டம் (இ.அ – சீன அபிவிருத்தி வங்கி)	*84%	6%	5%	11%	6%	95%
7	மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைகள் (இ.அ – ஒபிட்)	கொ.பொ II-2%	கொ.பொ I - 25% , கொ.பொ II - 55%	கொ.பொI - 11% , கொ.பொ II - 48%	கொ.பொ I -54% , கொ.பொ II - 56%	கொ.பொ I -18% , கொ.பொ II - 38%	கொ.பொ I - 29% , கொ.பொ II - 88%
8	தெற்கு வீதித் தொடர்பு கருத்திட்டம் (இ.அ – ஆ.அ.வ))	கொ.பொ01-100% கொ.பொ02-22% கொ.பொ03-42% கொ.பொ04-17%	- கொ.பொ02-47% கொ.பொ03-49% கொ.பொ04-83%	- கொ.பொ02-58% கொ.பொ03-56% கொ.பொ04-49%	- கொ.பொ02-20% கொ.பொ03-02% கொ.பொ04-34%	- கொ.பொ02 -17% கொ.பொ03 -02% கொ.பொ04 -32%	கொ.பொ01 -100% கொ.பொ02-97% கொ.பொ03-100% கொ.பொ04-98%
9	ஐ ரோட் - ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சத்திட்டம் ஆ.அ.வ	62%	28%	20%	11%	06%	88%
10	முன்னுரிமை வீதி புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டம்-3 கட்டம் II	4%	77%	72%	24	24	*100%
11	முத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை மேம்படுத்தல் சீன அபிவீருத்தி வங்கி ஹுனான் கிளை	நிர்மாணப் பணிகள் 2018 இல் ஆரம்பிக்கப் பட்டன	1%	1%	47%	42%	43%

2.4 வீதிகளை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

2.4.1 வீதிகளை அகலமாக்கி அபிவிருத்தி செய்தல்

பிரதான வீதிகளை தொடர்புபடுத்தும் முக்கிய வீதித்தொடர்புகள், வெளிநாட்டு நிதியீட்டங்களுக்கு சமர்ப்பிக்கப் பட முடியாத அவசியம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய சிறிய வீதிப் பகுதிகளின் அபிவிருத்தி மற்றும் பலவீனமான பாலங்கள் என்பன இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விரிவாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

2018ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 364.78கி.மீ மற்றும்337.32 கி.மீ நீளமான வீதிகளானது மேம்படுத்தப்பட்டதாக பதியப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் மேம்படுத்துவதற்கான இலக்கானது 825.87கி.மீ ஆகும். இக்காலப்பகுதியின் இலக்கில் 31 சதவீதமானது மேம்படுத்தப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டின் போது 209.01கி.மீற்றர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டதோடு மேலும் 309.4கி.மீ நீளமான வீதிகளின் மேம்படுத்தல் வேலைகள் வருட இருதியின் போது இடம்பெற்றுக் கொண்டிருந்தன. 2019ஆம் ஆண்டில் மேம்படுத்துவதற்கு இலக்குப்படுத்தப்பட்ட தூரமானது 518.41கி.மீற்றர்களாகும். வருட இறுதியின் போது மேம்படுத்துவதற்கான இலக்கில் 19 சதவீதமே நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2019இல் மேலும் 453.54கி.மீ மேம்படுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டில் 20 பாலங்களின் புணரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் 01 பாலத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதோடு மேலும் 04 பாலங்களின் புனரமைப்பு வேலைகள் வருட இறுதியில் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

நிறைவு செய்யப்பட்ட பாலம் மற்றும் புனரமைப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் பாலங்களானது பதுளை மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளதோடு ஏனைய புனரமைப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் பாலங்கள் களுத்துறை, மாத்தளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் அமையப் பெற்றுள்ளன.

உரு 2.4.1.1 2018ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட வீதியின் நீளம்

இக்காலப்பகுதியில் 8 பாலங்களின் புனரமைப்பு வேலைகளானது ஆரம்பிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டின் இறுதியில் 6 பாலங்கள் நிறைவு செய்யப்பட்டன. இவற்றில் 5 பாலங்கள் தென் மாகாணத்திலேயே அமைந்துள்ளன.

உரு 2.4.1.2 மேம்படுத்தப்பட்ட வீதிகளின் நீளம் - 2019



2019ஆம் ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விரிவாக்கப்பட்டு மேம்படுத்தப்படும் வீதிகளின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகை சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4.1.1 வீதிகள் மற்றும் பாலங்கள் விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் திட்டத்தின் 2019ஆம் ஆண்டின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்.

ஒருழ்டு ஒஒுதீயா	மாவட்டத்தின் பெயர்	பௌதீக முன்னேற்றம்		நிதிச் செயலாற்றுகை			
		முழு மொத்த பௌதீக இலக்கு 31/12/2019 (%)	பௌதீக முன்னேஉற்றம் 31/12/2019 (%)	பாதீட்டு ஒதுக்கம்(ரூபா மி) 2019	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 2019	செலவு (ரூபா.மி) 31/12/2019உள்ளவாறு	நிதிச் செயலாற்றுகை (%)
117-02-05-01-2104-11	கொழும்பு	100	47	300.0	300	270.5	90%
117-02-05-02-2104-11	கம்பஹா	100	38	300.0	300	268.1	89%
117-02-05-03-2104-11	களுத்துறை	100	75	275.0	142	109.36	77%
117-02-05-04-2104-11	கண்டி	100	15	275.0	275	236.1	86%
117-02-05-05-2104-11	மாத்தளை	100	6	175.0	51.2	39.57	77%
117-02-05-06-2104-11	நுவரஎலிய	100	3	130.0	80	76.33	95%
117-02-05-07-2104-11	மாத்தறை	100	3	150.0	650	202.1	31%
117-02-05-08-2104-11	காலி	100	5	150.0	97	79.5	82%
117-02-05-09-2104-11	ஹம்பந்தோட்டை	100	0	150.0	160	160	100%
117-02-05-10-2104-11	யாழ்பானம்	100	84	120.0	176.1	176	100%
117-02-05-11-2104-11	கிளிநொச்சி	100	87	120.0	320	313.2	98%
117-02-05-12-2104-11	முன்னார்	100	38	120.0	3	1.1	37%
117-02-05-13-2104-11	வவுனியா	100	78	120.0	71.9	63.78	89%
117-02-05-14-2104-11	முல்லைத்தீவு	100	40	120.0	6	2.8	47%

பாதீட்டுக் குறியீடு	மாவட்டத்தின் பெயர்	பௌதீக முன்னேற்றம்		நிதிச் செயலாற்றுகை			
		முழு மொத்த பௌதீக இலக்கு 31/12/2019 (%)	பௌதீக முன்னேஉற்றம் 31/12/2019 (%)	பாதீட்டு ஒதுக்கம் (ரூபா மி) 2019	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 2019	செலவு (ரூபா.மி) 31/12/2019 உள்ளவாறு	நிதிச் செயலாற்றுகை (%)
117-02-05-15-2104-11	மட்டக்களப்பு	100	100	120.0	60	43.57	73%
117-02-05-16-2104-11	அம்பாறை	100	39	120.0	90	72	80%
117-02-05-17-2104-11	திருகோணமலை	100	58	100.0	82.6	61.15	74%
117-02-05-18-2104-12	குருநாகல	100	71	125.0	473	470	99%
117-02-05-19-2104-13	புத்தளம்	100	93	125.0	125	118.8	95%
117-02-05-20-2104-14	அனுராதபுரம்	100	51	150.0	267	262.1	98%
117-02-05-21-2104-15	போலன்னறுவை	100	20	100.0	44	43.9	100%
117-02-05-22-2104-16	பதுள்ளை	100	45	125.0	55	54.4	99%
117-02-05-23-2104-17	மொனராகல	100	17	100.0	50	41.7	83%
117-02-05-24-2104-18	கேகாலை	100	92	130.0	71	46.13	65%
117-02-05-25-2104-19	இரத்தினபுரி	100	25	100.0	137	135.6	99%
117-02-05-26-2104-20	வரிக் கூறு	-	-	700.0	560	438.9	78%
117-02-05-29-2104-21	தேசிய சேமிப்பு வங்கி கடன் நிதியீட்ட கருத்திட்டங்கள்	-	-	3000.0	300	270.5	90%
	மொத்தம்			7,500.0	4646.8	3786.69	81%

2018 மற்றும் 2019 பௌதீக செயலாற்றுகையின் ஒப்பீடு சுருக்கமாக.

25 மாவட்டங்களிலும் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது அதில் 4 மாவட்டங்களில் 100 சதவீத பௌதீக முன்னேற்றத்தை 2018ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டில் அடையப் பெற்றுள்ளது. 2019 டிசம்பரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமே 100 சதவீத இலக்கினை அடையப் பெற்றிருந்தது.

2018 மற்றும் 2019 ஆகிய இரு வருடங்களிலும் இரண்டு மாவட்டங்கள் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது. களுத்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்கள் விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளில் 75 - 90 சதவீத பௌதீக முன்னேற்றத்தை 2019ஆம் ஆண்டு முடிவில் அடையப் பெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்கள் 75 சதவீதத்திற்கும் குறைவான பௌதீக முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது.

இக்காலப்பகுதியில் ஹம்பாந்தோட்டை மாவட்டமானது எவ்விதமான பௌதீக முன்னேற்றத்தையும் பதிவு செய்யவில்லை. அதேவேலை மாத்தளை மாவட்டமானது ஆகக் குறைந்த பௌதீக செயலாற்றுகை 3 சதவீதத்தை பதிவு செய்துள்ளது. 2018ஆம் ஆண்டில் பதுளை மாவட்டம் மிகக் குறைந்த பௌதீக செயலாற்றுகையை பதிவு செய்த மாவட்டமாக காணப்பட்டது.

2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் நிதிச் செயலாற்றுகையின் சாராம்சம்.

நிதிச் செயலாற்றுகையை கவணிக்கும் போது 2018ஆம் ஆண்டில் 6 மாவட்டங்கள் 100 சதவீதத்திற்கும் மேற்பட்ட முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டின் இறுதியில் 4 மாவட்டங்கள் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிதிச் செயலாற்றுகையை பதிவு செய்துள்ளது. ஆகக் குறைந்த நிதிச் செயலாற்றுகையானது மன்னார் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் 5 மாவட்டங்கள் 20 சதவீதத்திற்கும் குறைவான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.
2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இத்திட்டத்தின் முன்னேற்றமானது 3 காலாண்டினை விட முன்னுள்ளது. இது 2018ஆம் ஆண்டினை விட அதிகமானது எனவும் பதியப்பட்டுள்ளது.

நிதிச் செயலாற்றுகை31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-2-5-1-25	2506-உட்கட்டமைப்பு அபிவிருத்தி	7500.0	4646.8	3786.7
	மொத்தம்	7500.0	4646.8	3786.7

2019ஆம் ஆண்டின் காலப்பகுதியில் 3 மாவட்டங்களில் அதிஉயர் நிதி செயலாற்றுகை அதாவது 100 சதவீத நிதி இலக்கினை அடைந்துள்ளது. (ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், பொலன்னறுவை)

அதிகுறைந்த நிதிச் செயலாற்றுகையானது மாத்தளை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதோடு 8 மாவட்டங்கள் 2019ஆம் ஆண்டில் 90 சதவீதத்திற்கு மேலான நிதி செயலாற்றுகையை அடைந்துள்ளது.

2019 மற்றும் 2018இல் ஒவ்வொரு மாகாணங்களும் அடையப்பெற்ற நிதியியல் செயலாற்றுகையானது பின்வருமாறு விளக்கப்படுகின்றது.

அட்டவணை 2.4.1.2–மாகாண அளவில் நிதிச்செயலாற்றுகை 2018 மற்றும் 2019 இடையில் ஒரு ஒப்பீடு

மாகாணத்தின் பெயர்	நிதிச்செயலாற்றுகை (%) 31/12/2018இல் உள்ளவாறு	நிதிச்செயலாற்றுகை (%) 31/12/2019 இல் உள்ளவாறு
மேல்	34%	87%
மத்திய	46%	87%
தெற்கு	61%	49%
வடக்கு	72%	96%
கிழக்கு	95%	76%
வட மேல்	92%	98%
வடமத்திய	71%	98%
ஊவா	77%	92%
சப்ரகமுவ	100%	87%

விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது ஒரு வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாகவே அமுல்படுத்தப்படுகின்றது. பௌதீக மற்றும் நிதி ஆகிய இரண்டுக்குமான இலக்குகளானது ஒவ்வொரு ஆண்டிலும் விடுவிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் அளிக்கப்பட்ட பாதீட்டு ஒதுக்கீட்டின் அடிப்படைகளில் திட்டமிடப்பட்டதாகும்.

2.5 பாலங்கள் மற்றும் வான்வழிப் பாலங்கள

பாலங்களானவை விதி வலயமைப்பின் ஒரு இணைந்த கூறாக வீதி அபிவிருத்திக்கு சமாந்தரமாக உயர்வான பாதுகாப்பு பண்புகளுடன் மீள் நிர்மாணிக்கப்படுகின்றது/ புணரமைப்புச் செய்யப்படுகின்றது. வருடாந்தம் 100 – 150 பாலங்கள் மிள் நிர்மாணிக்கப்படுகின்றன. தற்போதுள்ள படகுச் சேவைகளுக்கு பதிலாக மற்றும் பலவீனமான பாலங்களையும் அகற்றி புதிய பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சந்திகளில் இணைப்பு மாற்று வழியாக வான் வழிப் பாலங்கள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் போக்குவரத்து நெரிசல், காலதாமதம், விபத்துக்கள் குறைவடைதல் மற்றும் வாகனங்களின் செயற்பாட்டு செலவு குறைவடைந்து இறுதியாக பாதுகாப்பான மற்றும் செயற்றிறனான போக்குவரத்து உறுதி செய்யப்படும். இதன் அடிப்படையில் இவ் அமைச்சானது பல கருத்திட்டங்கள் மூலம் பழைய பாலங்களை புணரமைத்தல் மற்றும் மேம்படுத்தல், மீள் நிர்மாணித்தல் மூலம் பாதுகாப்பான போக்குவரத்தினை உறுதி செய்கின்றது.

நாட்டின் தேசிய வீதி வலயமைப்பில் (ஏ தர மற்றும் பீ தர) 4662 பாலங்கள் காணப்படுகின்றன. இப்பாலங்கள் அவற்றின் அகலத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்.



உரு 2.5.1.1–தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள பாலங்களின் சாராம்சம்

தேசிய வீதிக்கட்டமைப்பில் அமையப்பெற்றிருக்கும் பெரும்பாலான பாலங்கள் 10 மீற்றருக்கு குறைந்த அகலத்தைக் கொண்ட பாலங்களாகும். 30 மீற்றருக்கு கூடிய 50 மீற்றருக்கு குறைந்த பாலங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அடுத்ததாக 10 மீற்றருக்கு மேல் 30 மீற்றருக்கு குறைந்த பாலங்கள் காணப்படுகின்றன. இப்பாலங்கள் தேசிய வீதி வலையமைப்பின் ஏ தர மற்றும் பீ தர நெடுஞ்சாலைகளில் காணப்படுகின்றன. இப்பெறுமதிகளுள் அதிவேகப் பாதையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலங்கள் உள்ளடக்கப்படவில்லை.

2.5.1 தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சேதமடைந்த மற்றும் பலவீனமான பாலங்களை புனரமைத்தல்

இத்திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டில் 86 பாலங்களின் மேம்படுத்தல் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்ததோடு 2019இல் 67 பாலங்களின் மேம்படுத்தல் வேலைகள் இடம்பெற்றன. இவ் 67 பாலங்களில் 12 பாலங்களின் வேலைகள் 2019 இறுதியில் நிறைவு செய்யப்பட்டன. 46 பாலங்களின் பௌதீக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அதே வெலை 09 பாலங்கள் இன்னும் நிர்மான ஒப்பந்தத்திற்கான விலை கோரல் நிலையிலேயே உள்ளன. 2019ஆம் ஆண்டில் 09 கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை அனைத்தும் 2019

டிசம்பர் 31இல் கேள்வி மனுக்கோரல் நிலையிலேயே காணப்பட்டன.

அட்டவணை 2.5.1.12019 இல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

மாகாணம்	நிறைவுசெய் யப்பட்டது	வேலைகள் தொடர்பவை	ஒப்பந்த நிலையில்	மொத்தம்
மேல்	00	09	02	11
மத்திய	05	13	02	20
தென்	00	01	01	02
வட	00	01	00	01
கிழக்கு	00	03	00	03
கிழக்கு(அக் கறைப்பற்று பிரிவு)	00	01	00	01
வட மேல்	02	04	00	06
வட மத்திய	02	07	01	10
ஊவா	02	02	03	07
சப்ரகமுவ	01	05	00	06
மொத்தம்	**12**	**46**	**09**	**67**

2018ஆம் ஆண்டின் இறுதியில் நிதிச் செயலாற்றுகையானது 61 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேலை 2019இல் 100 சதவீத செயலாற்றுகையை அடைந்துள்ளது. 2019 இற்கான திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019 அடையப்பட்ட நிதிச் செயலாற்றுகையானது மிகவும் சிறப்பானதாகும்.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	**300.0**	**325.3**	**325.3**
	மொத்தம்	**300.0**	**325.3**	**325.3**

2.5.2 பாழைய பாலக் கூறுகளைப் பயன்படுத்தி கிராமிய பாலங்களை நிர்மாணித்தல்

கிராமிய பிரதேசங்களில் குறைந்த செலவிலான பாலங்களை நிர்மாணித்தல், மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற அவசர நிலைமைகளின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட வீதிகளில் தற்காலிக பாலங்களை உடனடியாக நிர்மாணிப்பது கிராமிய பாலங்கள் நிர்மாணித்தல் பிரிவின் பிரதான பொறுப்பாகும். கிராமிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் பாலங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதான வீதிகளில் அகற்றப்படும் பாலங்களின் பழைய இரும்பு சட்டங்களை மீள் பயன்படுத்தி கிராமிய பிரதேசங்களுக்கான பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

2019ஆம் ஆண்டில் 31 பாலங்களை புதிதாக நிர்மாணம் செய்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மற்றும் இக்காலப்பகுதிகளில் 17 பாலங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. 11 பாலங்கள் இன்னும் பல்வேறு கட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ் எண்ணிக்கையில் கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு பெறாத பாலங்களும் உள்ளடங்கும். மேற்கூறிய 30 பாலங்களில் 10 பாலங்கள் இன்னும் கொந்தராத்துக்கான விலைமனுக் கோரல் நிலையிலேயே உள்ளன. 2019ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பாலங்களின் விபரம் பின் இணைப்பு 11இல் தரப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2018ஆம் ஆண்டில் 65 சதவீத நிதிச் செயலாற்றுகையை அடையப் பெற்றது. இது 2019இல் 68 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டின் செயலாற்றுகையானது சிறப்பானதாகும்.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-02-	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	300.0	262.7	178.8
	மொத்தம்	300.0	262.7	178.8

2.5.3 பிராந்திய பாலங்கள் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் 45 மில்லியன்களாகும் பவுன்களாகும். இதற்கான நிதியினை ஐக்கிய இராச்சியத்தின் எச்.எஸ்.பீ.சீ வங்கி பெற்றுக் கொடுத்துள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் 80 பாலங்கள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுகின்றன. இக்கருத்திட்டத்தின் காலமானது 2013 – 2017 நான்கு வருடங்களாகும். 2017 ஆண்டின் போது 10 பாலங்களின் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டன. 2017ஆம் ஆண்டின் இறுதியில் 17 பாலங்களின் நிர்மாணப் பணிகளானது தொடரப்பட்டுக் கொண்டிருந்தன.

மீள் நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட பாலங்களின் பட்டியலில் 66 பாலங்கள் தற்காலிக பாலங்களாகவே காணப்பட்டன. 2017ஆம் ஆண்டின் முடிவில் அனைத்துப் பாலங்களிலும் 65 பாலங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2019ஆம் ஆண்டில் அடையப் பெற்ற பௌதீக முன்னேற்றமானது 1 சதவீதமாகும். அதேவேலை 2019இல் திரண்ட அடைவானது அண்ணளவாக 99 சதவீதமாகும்.

2019ஆம் ஆண்டின் போது 08 பாலங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. மற்றும் 04 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2019 இறுதியில் நிர்மாணப் பணிகள் தொடரும் நிலையில் காணப்பட்டன. 2019ஆம் ஆண்டின் டிசம்பரில் ஒட்டுமொத்த செயலாற்றுகையானது 99.7 சதவீதமாகும்.

2019ஆம் ஆண்டின் போது மீள் நிர்மாணம் செய்து கொண்டிருக்கும் நிலையில் உள்ள பாலங்களின் பௌதீக முன்னேற்றமானது பின்வருமாறு:

அட்டவணை 2.5.3.1–2019 இல் அமுலிலுள்ள கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

பாலத்தின் பெயர்	மாவட்டம்	தூரம் (கி.மி)	31/12/2019இல் பௌதீக முன்னேற்றம்
கொழும்பு-இரத்தினபுரி-வெல்லவாய-மட்டக்களப்பு வீதியில் பால இல. 284/1	மொனராகல	63	96%
லிந்துல – அக்ராஸ் வீதியில் பால இல. 14/6	நுவர எலிய	21.34	50%
இரத்தினபுரி – வேவல்வத்த வீவியில் பால இல. 1/7	இரத்தினபுரி	15.24	95%
மல்வால கானரி வீதி பாலம் இல. 13/10	இரத்தினபுரி	24.38	91%

2019ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற நிதிச் செயலாற்றுகை பின்வருமாறு:

நிதிச் செலலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-02-06-16	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	25.0	250.0	157.0
	மொத்தம்	25.0	250.0	157.0

இத்திட்டமானது 2018ஆம் ஆண்டில் 100 சதவீத நிதிச் செயலாற்றுகையை அடைந்ததோடு அது 2019இல் 63 சதவீதமாகும். ஆகவே கருத்திட்டமானது 2018ஆம் ஆண்டின் திருத்திய நடவடிக்கை திட்டத்திற்கு அமைய முழுமையான இலக்கை அடைந்துள்ளதுடன்

2019இல் அதனை முழுமையாக அடைய முடியவில்லை.

2.5.4 தேசிய நெடுஞ்சாலைகளில் 25 பாலங்களை புணர் நிர்மாணம் செய்தல்

இத்திட்டத்தின் கீழ் ஏ மற்றும் பீ தர தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 25 பாலங்கள் மீள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான நிதியானது அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியினால் 10 மில்லியன் (ரூபா4460 மில்) குவைட் தினார்கள் கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இத்திட்டமானது 3 பொதிகளாக அமுலல்படுத்தப்பட்டது. இவ் 25 பாலங்களில் 8 பாலங்களானது கொந்தராத்து ஒப்பந்த பொதி 1இன் கீழ் வழங்கப்பட்டதோடு அதன் நிர்மாணப் பணிகள் 2015இல் ஆரம்பிக்கப்பட்டு 2019இல் நிறைவு செய்யப்பட்டன. இது 2018ஆம் ஆண்டில் 67 சதவீத திரண்ட பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றது. பொதி ஒன்றின் கீழான ஒவ்வொரு பாலத்தினதும் பௌதீக முன்னேற்றமானது கீழே 3.5.4.1இல் தரப்படுகின்றது.

அட்டவணை2.5.4.1–கட்டம் 1 இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாலங்களின் பௌதீக முன்னேற்றம்

வகை இல	பாலத்தின் பெயர்/இல.	தூரம் (மீ)	திரண்ட பௌதீக முன்னேற்றம் (31/12/ 2018)	திரண்ட பௌதீக முன்னேற்றம்(31/12/ 2019)
1	புால இல.1/1 கடுவல – பியகம வீதி (ஏபி004)	92.76	75%	100%
2	புால இல. 14/3 கலகெதர-ஹொரன வீதி (பி123)	11.5	56%	100%
3	புால இல.14/8 கலகெதர-ஹொரன வீதி (பி123)	11.5	95%	100%
4	புால இல.11/4 கேகாலை – புலதகொகுபிடிய வீதி (ஏஏ021)	31.6	63%	99.8%
5	புால இல.32/1 வெயாங்கொடை -ருவன்வல்ல வீதி (பீ445)	19.3	60%	98.5%
6	புால இல..2/2 தங்காலை – வீரகெடிய வீதி (பீ410)	6.92	99%	100%
7	புால இல.. 2/3 தங்காலை – வீரகெடிய வீதி (பீ410)	13.9	46%	100%
8	புால இல.10/2 அம்பலந்துறை-வீரமுணை வீதி(பீ018)	50.4	46%	94%

இத்திட்டத்தின் பொதி II மற்றும் IIIஇன் கீழ் மேலும் 17 பாலங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இப்பொதிகளுக்கான உசாத்துணை சேவைகளுக்கான ஒப்பந்தமானது 2018 செப்டெம்பரில் வழங்கப்பட்டுள்ளது. இப்பொதிக்கான வடிவமைப்பு மற்றும் கேள்வி மனு பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ருபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-02-06-18	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	3.0	3.0	0.0
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	20.0	20.0	19.5
	உப மொத்தம்	**23.0**	**23.0**	**19.5**

இத்திட்டத்திற்கான 2018ஆம் ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகையானது 81 சதவீதமாகும். 2019ஆம் ஆண்டில் இலக்கில் 85 சதவீத செயலாற்றுகையை அடையப்பெற்றுள்ளது. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 4 சதவீத முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

2.5.5. 45 பாலங்களைப் புனரமைத்தல்

தேசிய வீதி வலையமைப்பில் உள்ள ஒடுக்கமான மற்றும் மிகவும் பழைமையான 46 பாலங்களை மீள் நிர்மாணிப்பதற்காக இலங்கை அரசாங்கம் பிரான்ஸ் அரசாங்கத்திடம் 22.05 மில்லியன் யூரோக்களை கடனாகப் பெற்றுக் கொண்டது. எவ்வாறாயினும் மீள் நிர்மாணிப்பதற்காக 50 பாலங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டமானது 2018ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியினையும் பயன்படுத்தியுள்ளதோடு அது 100 சதவீதமான நிதிச் செயலாற்றுகைகளையும் அடையப் பெற்றுள்ளது. எவ்வாறாயினும் ஆரம்ப நிதி ஒதுக்கீடானது அவ்வருடத்தினுள்ளே கையில் உள்ள செலுத்தப்படாத பற்றுச் சீட்டுக்களுக்கான நிதியினை பெற்றுக் கொடுக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் கீழான அனைத்துப் பாலங்களும் 2017ஆம் ஆண்டிலேயே நிறைவு செய்யப்பட்டமையினால் 2018ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்தில் எவ்விதமான பௌதீக முன்னேற்றமும் உள்ளடக்க தேவைப்படவில்லை. 2019ஆம் ஆண்டில் பற்றுச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதோடு 33 சதவீத நிதிச் செயலாற்றுகையையும் பதிவு செய்துள்ளது. காணிச் சுவீகரிப்புக்கான முழு ஒதுக்கமும் 100 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரு.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு (ரு.மி)
117-02-06-17	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	50.0	19.1	19.0
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	680.0	600.0	181.9
	உப மொத்தம்	**730.0**	**619.1**	**200.9**

2.5.6 தேசிய நெடுஞ்சாலை வலயமைப்பில் உள்ள பிரதான பாலங்களை மீள் நிர்மாணித்தல்

முன்னுரிமை அளிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் விடயப்பரப்பின் ஒரு பகுதியாக தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள பிரதான பாலங்களை மீள் நிர்மாணித்தல் மற்றும் மாற்றீடு செய்தல். இப்பாலங்களை புணரமைப்பதன் மூலம் முழு நாடும் நன்மை அடைகின்றது.

இக்கருத்திட்டத்திற்கான நிதியானது சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் நிறுவனத்தினால் (ஏ 41CA) 12,381 மில்லியன் யென் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இப்பாலங்களின் நிர்மாணப் பணிகளானது 2015 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் புனரமைப்பதற்காக 37 பாலங்கள் தெரிவு செய்யப்பட்டதோடு இறுதியில் நிதி வரையறைகள் காணரமாக 21 பாலங்களாக குறைவடைந்தது.

பொதி 1இன் கீழ் 10 பாலங்களுக்கான நிர்மாணப் பணிகளானது தென் மாகாணத்தில் 2015 மார்ச்சில் ஆரம்பமானது.

2018 டிசம்பரில் இத்திட்டத்தின் முழுமொத்த பௌதீக முன்னேற்றமானது

100 சதவீதம். எவ்வாறாயினும் அனைத்து நிர்மாணப் பணிகளும் 2018 மார்ச்சில் நிறைவு பெற்றுள்ளது. இப் பாலங்களில் பொல்வத்த மற்றும் கொலேதந்த பாலங்களானது 2016இல் நிறைவு செய்யப்பட்டன. மேலும் 7 பாலங்கள் 2017ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன.

இத்திட்டத்தின் முதற்கட்ட பௌதீக நிர்மாணப் பணிகள் 2018இல் நிறைவு செய்யப்பட்டமையினால் 2019ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்தினுள் இதன் பௌதீக இலக்குகள் உட்படுத்தப்படவில்லை.

கொந்தராத்து ஒப்பந்த பொதி I இன் கீழ் வடமாகாணத்தில் 08 பாலங்கள் புனரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டன. ஒப்பந்தக்காரர் உரிய இடத்திற்கு நகர்த்தப்பட்டதுடன் ஆரம்ப கட்ட வேலைகள் 2016இல் ஆரம்பிக்கப்பட்டன. 2018 டிசம்பர் 31இல் பெதிகளின் முன்னேற்றமானது 100 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைய அனைத்து நிர்மாணப் பணிகளும் 2018 ஒக்டோபர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டதோடு 100 சதவீத திறண் பௌதீக முன்னேற்றத்தையும் அடையப் பெற்றது.

2018ஆம் ஆண்டில் அனைத்து நிர்மாணப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டமையினால் 2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்திற்கு பௌதீக இலக்கானது உட்படுத்தப்படவில்லை.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரு.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ருபா.மி) 31/12/2019	செலவு (ரு.மி)
117-02-06-19	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	185.0	38.4	38.3
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	2,095.0	1,286.1	1,251.7
	உப மொத்தம்	**2,280.0**	**1,324.5**	**1,290.0**

இக்கருத்திட்டமானது 2019இல் 97 சதவீதமான நிதிச் செயலாற்றுகையை பதிவு செய்துள்ளதோடு 2018இல் 98 சதவீத நிதிச் செயலாற்றுகையை பதிவு செய்துள்ளது. இரண்டு வருடகாலப் பகுதிக்குமான நிதிச் செயலாற்றுகையானது சமமானதாகக் காணப்படுகின்றது.

2.5.7 இரண்டாவது புதிய களனிப் பாலம்

இத்திட்டத்திற்கான நிதியானது சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் நிறுவகத்தினால் கடனாக 35,020 மில்லியன் யென் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2014 ஆரம்பிக்கப்பட்டது. 2020இல் பூரணப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் நோக்கமானது தற்போதைய புதிய களனிப் பாலத்தில் காணப்படும் வாகன நெரிசலை சீராக்கும் வகையில் கொழும்பு நகர போக்குவரத்து வலயமைப்பின் கட்டுநாயக்க அதிவேகப்பாதை, பேஸ்லைன் வீதி மற்றும் துறைமுக நுழைவுப் பாதை என்பவற்றுக்கு உயர் நகர்வு தொடர்பினை ஏற்படுத்தல். இதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதாகும்.

கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப்பாதையானது திறக்கப்பட்டதன் பின்பு அதனூடாக கொழும்பு நகரத்திற்குள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கையானது பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

எனவே இவ் அதிகரித்துவரும் நெரிசலுக்கும் வாகனங்களின் எண்ணிக்கைக்கும் முகம் கொடுக்கக்கூடிய வகையில் புதிய களனி பாலமானது ஆறு சுவடுகளைக் கொண்டதாகவும், இட மாறல்கள் மற்றும் துறைமுக நுழைவுப் பாதையுடன் தொடர்புறும் வகையில் உயர்த்தப்பட்ட வான்வழிப் பாதையுடன் கூடியதாகவும் நிர்மாணிக்கப்படும்.

இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக இலங்கை அணுசக்திவள அதிகார சபையின் கட்டிடமானது இடம் நகர்த்தலானது 2017இல்

நிறைவு செய்யப்பட்டதோடு மோட்டார் வாகன பயிற்சி நிறுவகத்தை இடம் நகர்த்துவதற்கான கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2017 செப்டம்பரில் பூர்த்தி செய்யப்பட்டு தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது.

பிரதான நிர்மாண வேலைகளுக்கான உசாத்துணை சேவைகளுக்கான ஒப்பந்தமானது ஓரியண்டல் ஆலோசனைக் கம்பனிக்கும் மற்றும் கட்டாஹிரா இஞ்ஜீனியரிங் இன்டர் நெஷனல் கம்பனிக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. வடிவமைப்பு, விலை மனுக் கோரலுக்கான உதவிகள் மற்றும் நிர்மானப் பணிகள் மேற்பார்வைக்கான ஒப்பந்தக் காலம் 2015 ஜனவரியில் இருந்து 2019 டிசம்பர் வரையாகும்.

வடிவமைப்பு மற்றும் விலைமனுக்கோரல் ஆதரவுகள் கட்டமானது நிறைவு பெற்றுள்ளது. பிரதான நிர்மாணப் பணிகளுக்கான கொந்தராத்து ஒப்பந்தமானது வழங்கப்பட்டுள்ளதுடன் முதலாம் இரண்டாம் பொதிகளின் நிர்மாணப் பணிகளானது முறையே செப்டெம்பர் 2017 மற்றும் டிசம்பர் 2017இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய களனி பாலத்தின் நிர்மானத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் சாலமுள்ள லக்சத செவன வீடமைப்புத் திட்டத்தில் 2017 ஏப்ரலில் குடியமர்த்தப்பட்டனர்.

2018ஆம் ஆண்டின் இறுதியில் இத்திட்டத்திற்கான காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் 90 சதவீதம் நிறைவு பெற்றது. 2019இல் இது 99 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது. 2019இன் டிசம்பர் பொதி I இன் நிர்மாண வேலைகளின் பௌதீக செயலாற்றுகையானது 56 சதவீதமாகப் பதியப்பட்டுள்ள அதேவேலை பொதி II இன் பௌதீக முன்னேற்றமானது 56 சதவீதத்தை அடையப் பெற்றுள்ளது.



உரு2.5.7.1– 2019 திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின் படி பொதி I மற்றும் பொதி II நிர்மாண ஒப்பந்தங்களின் இலக்கு அடைவுகள்

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-2-06-21	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	100.0	62.0	41.2
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	9,170.0	12,365.3	6,947.4
	உப மொத்தம்	**9,270.0**	**12,427.3**	**6,988.6**

2018ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றுகையானது 93 சதவீதமாக அடையப் பெற்றாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உருவின் பிரகாரம் வருட இறுதியில் நிதிச் செயலாற்றுகையானது 52 சதவீதமாகும். கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் அறிக்கையிடப்பட்டுள்ள உண்மையான செலவானது ரூபா 5,162,33 மில்லியன். வெளிநாட்டு நிதியீட்டத்திற்கான இடைக்கால கொடுப்பனவு கடன் செலுத்தப்படாமையினால் மேலே காட்டப்படவில்லை.

2.5.8 பாலங்கள் பராமரிப்பு முறைமை மற்றும் பாலங்கள் மதிப்பீட்டு அலகின் உருவாக்கம்.

தற்போதுள்ள முறைமையில் காணப்படும் குறைபாடுகளை கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கமானது ஜப்பானிய அரசாங்கத்திடம் முறையான பாலங்கள் பராமரிப்பு மற்றும் பாலங்கள் மதிப்பீட்டு முறைமையை பெற்றுத் தருமாறு வேண்டிக் கொண்டது. ஜப்பானிய அரசாங்கம் ஜய்க்கா தொழிநுட்ப உதவியின் கீழ் இம்முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு இணங்கியுள்ளது. இது மூன்று வருடகால கருத்திட்டமாகும். இத்திட்டத்தின் பிரதான நோக்கமாவது பாலங்களை அவற்றின் கட்டமைப்பின் உறுதித் தன்மைக்கு ஏற்ப மற்றும் திருத்துதல், புணரமைத்தல், மீள் நிர்மாணித்தல் என்பவற்றிற்கான முக்கிய காரணிகளுடன் முகாமை செய்வதாகும். இதனால் பாலங்களை உரிய காலத்தில் பராமரித்தல் மற்றும் பலவீனமான பாலங்களை முன்கூட்டியே கண்டுகொள்வதனால் பராமரிப்புச் செலவுகளை மிகவும் குறைப்பதனூடாக நாட்டின் பொருளாதாரத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் (மேல், மத்திய மற்றும் தென்) பாலங்களை பரிசோதனை செய்யும் வேலைகள் ஜய்க்கா தொழிநுட்ப உதவியுடன் நடைபெற்றது. மீதமுள்ள மாகாணங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்களினால் பரிசோதனை செய்யப்படும். மாதிரியாக தெரிவுசெய்யப்பட்ட மாகாணங்களின் பரிசோதனை நடவடிக்கைகள் 2017இல் பூரணப்படுத்தப்பட்டன.

ஏனைய மாகாணங்களில் பாலங்களை பரிசோதனை செய்யும் வேலைகள் 2018ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிறைவு செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டின் இறுதியில் 4662 பாலங்கள் தொடர்பான தரவுகள் உட்செலுத்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கான ஜய்க்காவின் நிதி உதவியானது ஏற்கனவே முடிவடைந்துள்ளமையினால் இத்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2018இல் இருந்து அதன் பாலங்கள் வடிவமைப்பு அலகினூடாக ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டமாக தொடர்ந்து அமுல்படுத்தப்படுகின்றது. இது 2019 டிசம்பரில் 100 சதவீத பௌதீக செயலாற்றுகையை அடையப் பெற்றுள்ளது.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி)	31/12/2019 செலவு (ரூ.மி)
117-2-06-22	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	5.0	5.0	0.3
	உப மொத்தம்	**5.0**	**5.0**	**0.3**

2018இன் இறுதியில் 82 சதவீத நிதிச் செயலாற்றுகையை அது அடையப் பெற்றுள்ளதுடன் 2019 டிசம்பரில் 8 சதவீத செயலாற்றுகையை பதிவு செய்துள்ளது. கடந்த வருட பற்றுச் சீட்டுகளுக்கான கொடுப்பனவுகளும் தீர்க்கப்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்திற்கான கட்டு நிதியினை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தடைகளின் காரணமாக நிதிச் செயலாற்றுகையானதுமிகவும் குறைவாகப் பதியப்பட்டுள்ளது.

2.5.9 பேலியகொட புத்தளம் வீதியில் கொச்சிக்கடை பாலம் நிர்மாணித்தல்

பேலியகொடை – புத்தளம் வீதியில் (ஏ 003) 38/3 இலக்கம் கொண்ட பழைய ஒடுக்கமான பாலத்தினை மீள் நிர்மாணிப்பதற்கான யூரோ 8.7 மில்லியன் கடன் உதவியானது அவுஸ்திரிய ரய்பிஸ்ஸன் சர்வதேச வங்கியினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. இப்பழைய ஒடுக்கமான பாலத்தினை மீள் நிர்மாணிப்பதன் நோக்கம் வீதிப் பாவணையாளர்களுக்கு பாதுகாப்பான பிரயாணத்தை உறுதிப்படுத்தல் மற்றும் பயண நேரத்தை குறைப்பதாகும்.
இப்பாலத்தை 105 மீற்றர் நீளமாகவும் மற்றும் 4 சுவடுகளைக் கொண்டதாகவும் நிர்மாணிப்பதற்கு

திட்டமிடப்பட்டுள்ளது. பௌதீக நிர்மாணப் பணிகளானது 2016 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்டு 2019இல் நிறைவு செய்யப்பட்டது.

2018 இறுதியில் 100 சதவீத பௌதீக இலக்கு அடையப்பெற்றதோடு அது திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தின்படி அடையப்பட வேண்டிய இலக்கானது 35 சதவீதமாகும்.

திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்படி இக்கருத்திட்டமானது 99 சதவீத நிதிச் செயலாற்றுகையை இரண்டு தொடர்ச்சியான வருடங்களிலும் பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும் பற்றுச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகள் 2019இலும் தொடரப்பட்டன.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31.12.2019	செலவு (ரூ.மி)
117-2-6-20	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	210.0	131.2	131.1
	உப மொத்தம்	**210.0**	**131.2**	**131.1**

2.5.10 இராஜகிரிய, பொல்கஹவல மற்றும் கனேமுல்ல ஆகிய இடங்களில் வான் வழிப் பாலங்களை அமைத்தல்

மூன்று பிரதான இடங்களில் காணப்பட்ட மிகவும் மோசமான போக்குவரத்து நெரிசலை சீராக்கும் நோக்குடன் இம் மூன்று வான்வழிப் பாலங்களும் வடிவமைக்கப்பட்டன. இம் மூன்று இடங்களிலும் காணப்பட்ட வாகன நெரிசலினால் கூடிய பிரயாண நேரம் மற்றும் அதிகரித்த வாகனங்களின் செயற்பாட்டுச் செலவு மற்றும் வீதிப் பாவனையாளர்களுக்கான குறைவான பாதுகாப்பு என்பவற்றினால் பாரிய பொருளாதார இழப்பு காணப்பட்டது. இத்திட்டத்தின் அமுல்படுத்தல் காலம் 32 மாதங்களாகும். (2016.2018) இற்கான நிதியானது கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். அத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மூன்று வான்வழிப் பாதைகளினதும் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.5.10.1 - 3 வான்வழிப் பாலங்களினதும் விபரம்

வான் பாலம்	தோங்கும. பகுதியின் நீளம்	மொத்த நீளம்	சவடுகளின் எண்ணிக்கை	கருத்திட்ட காலம்
இராஜகிரிய	363	533.2	4	32
போல்கஹவல	233	353.0	2	16
கனேமுல்ல	204	275.3	2	14

2018 டிசம்பர் 31 இல் ஒவ்வொரு வான்வழிப் பாதைகளினதும் பௌதீக முன்னேற்றமானது கீழே விளக்கப்பட்டுள்ளது.

2018இன் டிசம்பர் முடிவில் மூன்று வான்வழிப் பாதைகளினதும் நிர்மானப் பணிகள் 100 சதவீதம் நிறைவடைந்ததோடு அது பொதுமக்களின் பாவணைக்காக திறந்தும் விடப்பட்டது.

2019ஆம் ஆண்டில் அடையப்பட்ட நிதிச் செயலாற்றுகையானது 67 சதவீதமாகும். அது 2018இல் 99 சதவீதமாகக் காணப்பட்டது. பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான பற்றுச் சீட்டுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக ஆரம்ப பாதீட்டு ஒதுக்கமானது துரிதப்படுத்தப்பட்டது. வருடத்தின் அசல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவான மூன்று காலாண்டுகளுக்கு முன்பே இத்திட்டத்தினை நிறைவு செய்ய முடிந்துள்ளது.

நிதிச் செயலாற்றுகை - 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-2-6-24	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	30.0	85.0	67.0
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	100.0	68.0	51.5
	உப மொத்தம்	**130.0**	**153.0**	**118.5**

பாலங்கள் மற்றும் வான்வழிப் பாதைகளின் நிர்மாணப் பணிகளின் பௌதீக இலக்குகள் மற்றும் பௌதீக முன்னேற்றமும்

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் வெவ்வேறாக ஒவ்வொரு கட்டத்திலும் அடையப்பெற்ற முன்னேற்றத்தை 2019ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குடன் ஆண்டின் இறுதியில் அடையப்பெற்ற செயலாற்றுகையுடன் ஒப்பிட்டு பின்வருமாறு குறிப்பிடலாம்.

2019ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுக் கடன் நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் 3 கருத்திட்டங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியின் கீழ் அமுல்படுத்தப்படும் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மூன்றும் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுகின்ற நிலையிலே காணப்படுகின்றன.

வெளிநாட்டு நிதியீட்டத்தில் அமுல்படுத்தும் கருத்திட்டங்களில் 25 பாலங்களை புனரமைத்தல் கருத்திட்டத்தின் ஒப்பந்த பொதி இலக்கம் இரண்டு, 99 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இது 100 சதவீத பௌதீக இலக்குகளை அடையப்பெற்றுள்ளது. ஏனைய 2 கருத்திட்டங்களும் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு திட்டமிட்டபடி அடுத்து வரும் 2 – 3 வருடங்களில் நிறைவு செய்யப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படும் 2 வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சேதமடைந்த மற்றும் பலவீனமான பாலங்களை புனரமைத்தல் மற்றும் பழைய பாலங்களின் பாகங்களையும் கொண்டு கிராமிய பாலங்களை நிர்மானித்தல் ஆகியவையாகும். இவ்விரண்டு வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் திருத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக திருப்திகரமான மட்டத்தில் பௌதீக இலக்குகளை அடையப் பெற்றுள்ளது.

பாலம் பராமரிப்பு முறைமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது தேசிய வீதி வலயமைப்பில் உள்ள அனைத்து பாலங்களையும் பரிசோதித்து அப்பாலங்கள் தொடர்பான தரவுகளை தரவுத்தளத்திற்கு உற்செலுத்தி பாலங்கள் பராமரிக்கும் முறைமை தரவுத்தளத்தை சீர்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. 2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக திட்டமிட்டபடி பௌதீக இலக்கானது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இல	கருத்திட்டத்தின் பெயர்	திரண்ட பௌதீக முன்னேற்றம் 31/12/2017	2018		2019		திரண்ட பௌதீக முன்னேற்றம் 31/12/2019
			பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	
1	பிராந்திய பாலங்கள் திட்டம் ஜ. இ -11	97%	3%	2%	1%	1%	99.7%
2	25 பாலஙகள் புனரமைத்தல் - குவைட்	40%	38%	27%			67%
3	46 பாலஙகள் புனரமைத்தல் - பிரான்ஸ்	100%	100% - 2017.				
4	தேசிய நெடுஞ்சாலைகளில் பிரதான பாலங்கள் நிர்மாணித்தல் - ஜய்கா	பொதி 1- 98% பொத 2 -43%	பொதி 1 – 2% பொதி 2- 57%	பொதி1- 2% பொதி2- 57%	100% 2018 இன்முடிவில் பொதி 1 மற்றும் 2		பொதி1- 100% பொதி2 - 100%
5	பேலியகொடை – புத்தளம் வீதியில் கொச்சிக்கடை பாலம் நிாடமாணித்தல்	66%	35%	35%	100%		100%
6	இரண்டாவது புதிய களனிப் பாலம் - ஜய்கா	நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன 2017	S I- 25, S II - 32%	S I -10% S II - 28%	S I- 20%, S II – 12%	S I- 17%, S II – 9%	S I -56% S II - 56%
7	இராஜகிரிய, பொல்கஹவல மற்றும் கனேமுல்லை வான் பாலங்கள் நிர்மாணித்தல்	99%	1%	1%	-	-	100%

2.6 இயற்கை அணர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீதிகளை புனரமைத்தல்.

2.6.1 தேசிய வீதிகளில் மண்சரிவு பாதுகாப்பு கருத்திட்டம்.

நாட்டின் அபிவிருத்தி திட்டத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாக பாதுகாப்பான மற்றும் சொகுசான வீதி வலயமைப்பொன்றை உருவாக்குவது அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து வீதிகளையும் இயற்கை அணர்த்தத்தின் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதோடு கடுமையான மழை காரணமாக மண்சரிவுகள் ஏற்படுவதற்கு உயர் சந்தர்ப்பங்களையும் அதிகூடிய பாதிப்புக்களையும் உருவாக்கக்கூடிய மலைப் பிரதேசங்களில் மண் சரிவு ஆபத்துக்களை முகாமை செய்யக்கூடிய இயலளவை விருத்தி செய்யப்படல் வேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் ஆகியன கூட்டாக இணைந்து வீதி நிர்மாணம் மற்றும் புனரமைப்பின் போது மலைகளின் சரிவு முகாமை மற்றும் சரிவு பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல் ஒழுங்குவிதிகளை தயாரித்துள்ளது. இதற்குமேலதிகமாக சரிவு முகாமை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக தமது இயலளவை அபிவிருத்தி செய்து பொருத்தமான நேரத்தில் மண்சரிவு அபாய அறிவிப்புக்களையும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் மலைநாட்டில் ஏழு மாவட்டங்களில் அமுல்படுத்தும் தேசிய வீதிகளின் புனரமைப்பு கருத்திட்டங்களில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வழிகாட்டல்களை பயன்படுத்துவதற்கு விரும்புகின்றது.

தேசிய நெடுஞ்சாலைகளில் மண்சரிவு பாதுகாப்பு கருத்திட்டமானது ஜப்பானிய அரசாங்கத்தின் 9,590 மில்லியன் யென் கடன் உதவியுடன் அமுல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் 2013 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஜுலையில் பூரணப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டமானது கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்களாக மத்திய மலைநாட்டின் ஏ தர நெடுஞ்சாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தினூடாக மண்சரிவுக்கு எதிரான ஜப்பானிய மண்பாதுகாப்பு தொழிநுட்பங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் மத்திய மலைநாட்டின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான ஏ தர நெடுஞ்சாலைகளில் இடம்பெறும் மண்சரிவு அணர்த்தங்களை பொருத்தமான மண்சரிவுக்கெதிரான நடவடிக்கைகளினூடாக குறைப்பதாகும். இதன் மூலம் இப்பிராந்தியத்தில் காணப்படும் வீதிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு மக்களின் உயிர்களையும் பாதுகாக்கலாம்.

மண்சரிவு பாதுகாப்பு கருத்திட்டமானது 06 உசாத்துணை நடவடிக்கைகளையும் மற்றும்02 நிர்மாணக் கொந்தராத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

நிர்மாணப் பணிகளுக்கான முதலாவது கொந்தராத்து ஒப்பந்தமானது அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதோடு இரண்டாவது ஒப்பந்தமானது ஆர்.ஆர் - சொய்ல்டெக் கூட்டு முயற்சிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகள் 5 மாவட்டங்களில் 16 இடங்களை உள்ளடக்கியதாகும்.

நிர்மாண ஒப்பந்த பொதிகளின் முன்னேற்றமானது பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

நிர்மாண ஒப்பந்த பொதி 1 –

- நுவரெலிய, பதுளை, கண்டி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் 10 இடங்களை உள்ளடக்கியுள்ளதோடு இவற்றில் 7 இடங்கள் நுவரெலிய மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ளது.

- இப்பொதிகளின் நிர்மாணப் பணிகளானது 2017 மார்ச் மாதத்தில் ஆரம்பமானது. 2019 டிசம்பர் 31 இற்கான பௌதீக முன்னேற்றமானது உரு 2.6.1.1இல் விபரிக்கப்பட்டுள்ளது.

உரு 2.6.1.1: நிர்மாண ஒப்பந்த பொதி 1இன் நிர்மாண வேலைகளின் பொதீக செயலாற்றுகை.



ஒப்பந்த பொதி 2

- ஒப்பந்த பொதி இரண்டானது பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 6 இடங்களை உள்ளடக்கியதாகும். இதில் 5 இடங்கள் பதுளை மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளன.

- இப்பொதியினதும் நிர்மாணப் பணிகள் 2019 மார்ச் மாதத்தில் ஆரம்பமாகின. இவ் ஆரம்பத் திகதியில் இருந்து 31.12.2019 வரையிலான பௌதீக முன்னேற்றம் கீழே உரு 2.6.12இல் தரப்பட்டுள்ளது.

- 2019ஆம் ஆண்டில் இப்பொதியானது செய்யப்படுவதற்கு இலக்குபடுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப்பொதியில் கிடைக்கப் பெற்ற சேமிப்பினைப் பயன்படுத்தி புதிய 5 இடங்கள் இப்பொதியினுள் உள்வாங்கப்பட்டு இப்பொதியின் விடயப்பரப்பானது முழுமையாக மாற்றப்பட்டது. இதனால் வருட இறுதியில் பதிவு செய்யப்பட்ட பௌதீக முன்னேற்றமானது எதிர்பார்க்கப்பட்டதைவிடக் குறைவானதாகும்.

- புதிதாக உள்வாங்கப்பட்ட இடங்கள் கீழே தரப்படுகின்றன.

ஆம்பேபுஸ்ஸ (ஏ 006)

ஹபுதலை (ஏ016)

புண்டாரவலை (ஏ016)

உடுவார (ஏ016)

அல்ல (ஏ 023)



உரு2.6.1.2 நிர்மாணப் பணிகளின் பௌதீக செயலாற்றுகை கட்டமII

உசாத்துணை சேவைகளின் விடயப்பரப்புடன் 31 மார்ச் 2019ஆம் ஆண்டில் உள்ளவாரான பௌதீக செயலாற்றுகையானது கீழே விபரிக்கப்படுகின்றது.

- முன்னெச்சரிக்கை முறைமை உருவாக்கம், விலைமனுக் கோரல் செய்முறை மற்றும் பரிசோதனை, கண்காணிப்பு, மற்றும் மண்சரிவுகளை பகுப்பாய்வு செய்தல் போன்றன 2017ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவு செய்யப்பட்டன.

- மண் சரிவு பாதுகாப்பு நிர்மாணத்திற்கான உசாத்துணை சேவைகள் மற்றும் வாண்மை அபிவிருத்திக்கான உசாத்துணை சேவைகள் இதுவரை தொடர்கின்றன. 2020இல் நிறைவு செய்யப்படும்.

2018 டிசம்பர் 31இல் அடையப்பெற்ற நிதிச் செயலாற்றுகையானது 99 சதவீதமாகும். 2019இல் இது 79 சதவீதமாகும். 2018 மற்றும் 2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி இத்திட்டமானது சிறந்த நிதிச் செயலாற்றுகையை காட்டுகின்றது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

பாதீட்டுக் குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2019	செலவு (ரூ.மி)
117-02-07-13	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	1,600.0	3454.0	2726.3
	உப மொத்தம்	**1600.0**	**3454.0**	**2726.3**

2.7 கிராமியவீதிஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம்

கிராமியவீதிஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டமானது இதுமுன்பு“மகநகும”கிராமியவீதிஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் எனப் பெயரிடப்பட்டிருந்தது. கடந்தபலவருடங்களாக இது இலங்கையின் வீதித் துறையில் ஒருமுக்கியத்துவம் மிக்கபகுதியாகும்.நாட்டின் கிராமியப் பாதைகளின் தேவைகளைசிறப்பானமுறையில் அடையாளம்காணல்மற்றும் புதியமுறைமைகளின் கீழ் கிராமியவீதிகளைஅபிவிருத்திசெய்வதற்காக இந்நிகழ்ச்சித்திட்டம் 2004ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

கிராமியஅபிவிருத்திதேவைகளின் முன்னுரிமைகளைகருத்திட்கொண்டுசிறப்பானஒழுங்குமுறையின் கீழ் கிராமியவீதிகள் அபிவிருத்திசெய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்காககிராமியப் பாதைகளைத் தெரிவுசெய்யும் போதுஅப்பகுதியானதுஅதிகஎண்ணிக்கையானசிறியவீதிகளுக்குநுழைவைவழங்குதல்,பலபொது இடங்களுடன் தொடர்புபடுதல்,மற்றும் கிராமியமக்களுக்குபெற்றுக் கொடுக்கப்படும் நலன்கள் என்பனகருத்திற் கொள்ளப்படும். இத்திட்டமானதுஉரியகிராமசேவகர் பிரிவிலுள்ளபதிவுசெய்யப்பட்டசமூகஅமைப்புக்களினால் அங்கீகரிக்கப்படுவதனால் இத்திட்டத்தின் மூலம் கிராமியசமூகம் நேரடியாகநன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றன.

2.7.1 கிராமியவீதிகள் மீள் விழிப்புணர்வுநிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீகமுன்னேற்றம்

2019இல்இக்கிராமியவீதிநிகழ்ச்சித்திட்டமானதுபின் வரும் பிரதான கூறுகளாகஅமுல்படுத்தப்பட்டன.

i. சீமேந்துக் கற்கள் பொருத்தப்பட்டபாதை
ii. கொங்கிரீட்
iii. வடிகால்கள் மற்றும் தடுப்புச் சுவர்கள் நிர்மாணம்
iv. மதகுகள்நிர்மாணித்தல்

2018ஆம் ஆண்டில் 2,585 கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டபோதும் 1,333 திட்டங்களேஅமுல்படுத்தப்பட்டன. அமுல்படுத்துவதற்கு இலக்குப்படுத்தப்பட்டவீதிகளின் நீளம் 250கி.மீ. 2018இல் மேம்படுத்தப்பட்டவீதிகளின் நீளமான 169.32கி.மீ. இது 67 சதவீத இலக்குஅடையப் பெற்றதாகும்.

2019இல் 1,129 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டாலும் அவற்றில் 1,017 கருத்திட்டங்கள் வருட இறுதியில் நிறைவுசெய்யப்பட்டன. இக்காலப் பகுதியில் மேம்படுத்துவதற்கு இலக்குப்படுத்தப்பட்டவீதிகளின் தூரம் 100கி.மீ. எவ்வாறாயினும் வருட இறுதியில் 120கி.மீ தூரமானவீதிகள் மேம்படுத்தப்பட்டு 100 சதவீதத்திற்கும் மேற்பட்ட இலக்கைஅடையப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டமைப்புரீதியானநிர்மாணங்களின் தரவுகள் கீழேதரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7.1.1 2019 மற்றும் 2018நிா'மரிக்கப்பட்டகட்டமைப்புகளின் ஒருஒப்பீடு

வருடம்	பக்கவடிகால;	தடுப்புச்சுவா்கள்(m^2)	மதகுகள்
2018	0.43	516.32	13
2019	0.03	369.94	1

மேலே கூறப்பட்டுள்ளஅனைத்துவகையானகட்டமைப்புரீதியானநிர்மாணங்களினதும் எண்ணிக்கையானது 2018ஆம் ஆண்டைவிட 2019இல் குறைவானதாகும். எவ்வாறாயினும் கடந்தவருடத்தைவிட 2019ஆம் ஆண்டின் பௌதீக இலக்கின் அடைமானமானதுஅதிகமானதாகும்.

நிதிச் செயலாற்றுகை 31/12/2019

	விபரம்	பாதீட்டுஒதுக்கம் (ரூ.மி)	திருத்தப்பட்டஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2019	செலவு (ரூ.மி)
117-02-07-13	2506 உட்கட்டமைப்புஅபிவிருத்தி	1000.0	1200.0	1197.5
	மொத்தம்	**1000.0**	**1200.0**	**1197.5**

2019ஆம் ஆண்டின் திருத்தப்பட்டநடவடிக்கைத் திட்டத்தின்படிஅடையப்பட்ட இலக்குகள்.

2019ஆம் ஆண்டின் நடவடிக்கைத்திட்டத்தின்படிஅதிகூடிய இலக்குஅடைவானது 2ஆம் காலாண்டில் பதிவாகியுள்ளது. இது 100 சதவீதத்திற்கும் மேலாகும். ஆகக்குறைந்தஅடைவானதுமுதலாம் காலாண்டில் பதிவாகியுள்ளது. இது 49 சதவீதமாகும். 2018ஆம் ஆண்டில் அதிகூடியஅடைவானதுமுதலாம் காலாண்டில் பதிவாகியுள்ளதோடுமிகக் குறைந்தசெயலாற்றுகையானது மூன்றாம் காலாண்டில் பதிவாகியுள்ளது.

2.7.2கிராமியஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை

இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கானஆரம்பவரவுசெலவுத்திட்டஒதுக்கமானது 2019 நவம்பரில் ரூபா 1,200 மில்லியனாகதிருத்தப்பட்டு 20 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டின் டிசம்பர் முடிவில் இந்நிகழ்ச்சித்திட்டமானதுமுழுமையானநிதிஒதுக்கத்தினையும் பயன்படுத்தமுடியுமாயிருந்ததுடன் அது 99 சதவீதநிதி இலக்கின் அடைவாகும்.

2.7.3 ரன் மாவத்தகிராமியவீதிகள் நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்புநிகழ்ச்சித்திட்டம். (2019 –வரவுசெலவுத்திட்டமுன்மொழிவு)

நிதிஅமைச்சினால் 2019ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்டமுன்மொழிவாகரன் மாவத்தைநிகழ்ச்சித்திட்டத்திற்குரூபா 10,000 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் ரூபா 65 பில்லியன் பெருமதியான 5 முன்மொழிவுகளாகஅமுல்படுத்துவதற்குமுன்மொழியப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

இல	பாதீட்டுமுன்மொழிவு	முதிப்பிடப்பட்டகிரயம்
1	“கமிபிவிசும”வீதிஅபிவிருத்தி கருத்திட்டம்	3.0
2	“சம்பதியாவட்டமாகாக்”வீதி அபிவிருத்திகருத்திட்டம்	4.0
3	“வதுகரதிரிமக”வீதிஅபிவிருத்திகருத்திட்டம்	10.0
